
March 2018

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



9-ம் ஆண்டில்

## வித்தக வள்ளல்



தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
வாழ்த்துக்கள்
9th
BIRTHDAY
HAPPY 9TH BIRTHDAY!
9

ஐ தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

March 2018 சுவடி — 8 ஓலை — 1

**வணக்கம் பல**

‘நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வானின்று அமையாது ஒழுக்கு’ என்று இரண்டடிகளில் உலகளந்த குறள் ஓதியிருக்கிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகியலையும் மனித வாழ்வியலையும் ஆய்ந்தறிந்து, உலகுக்கு எடுதுரைத்ததில் தமிழகத்துக்குத் தலையாய இடம் உண்டு! ஆனால் அப்படிப்பட்ட தமிழகமே தற்போது தண்ணீருக்காகத் தலையிலடித்துக் கொண்டு அழுகிற காலச் சூழலில் நிற்கிறது!

இன்னொருபுறம் உலகிலேயே ‘சொட்டுத் தண்ணீர் இல்லாமல் தவிக்கப்போகும் முதல் நகரம்’ என்று தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் பெயர் பெறவுள்ளது என்பது உலக மக்களுக்கெல்லாம் விடப்படும் மிகப்பெரிய எச்சரிக்கை மணியாக இருக்கிறது.

இயற்கை நமக்கு வழங்கியிருக்கும் மிகப் பெரிய கொடைகளுள் ஒன்று நீர்! நீரில்லையேல் பயிர்களில்லை! உயிர்களில்லை! இப்புவியே இல்லை எனும்போது, தண்ணீர் பற்றிய அக்கறை ஒவ்வொரு மனிதனுக்கும் எந்தளவுக்கு இருக்க வேண்டும்? ஆனால் எள்முனை அளவுக்குக்கூட தண்ணீர் பற்றிய புரிதல் பல நாட்டவர்க்கும், பல கோடி மக்களுக்கும் இல்லை என்பதுதான் பெரும் வேதனையாக இருக்கிறது. இத்தகைய மக்களின் அறியாமைக்கு விழுந்த முதல் அடிதான் கேப்டவுன் மீது விழுந்திருக்கிறது.

மீண்டும் ஒரு கேப்டவுன் நிலை வராமல் உலகப் பெருநகரங்கள் எல்லாம் நீர் மேலாண்மையில் விழிப்பு நிலை பெறவேண்டும்! இனியேனும் உலக மக்கள் உறக்கத்திலிருந்து விடுபட்டு விழிப்பு நிலைக்கு வரவேண்டும்!

இந்த இதழ் முதல் நமது அய் தமிழ் ஒன்பதாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. இணைய இதழ் ஒன்று, தொடர்ந்து எந்தவொரு தொய்வுமிலாது மிளிர்ந்து வருவதென்பது ஒரு சாதனையே! இச்சாதனை வெறும் அடிச்சுவடாக மட்டுமல்ல, தமிழர்களின் கலை இலக்கிய வாழ்வோடும், சமகால நிகழ்வுகளின் நிஜத்தோடும் பின்னிப் பிணைந்து ஒரு காலப் பெட்டகமாக இருக்கிறது என்பது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியது! மென்மேலும் நமது இதழ் சிறந்து ஒளிர்ந்திட வழமைபோல் வாசக அன்பர்களின் ஆதரவை வேண்டுகிறோம்! வாருங்கள்... வாழ்த்துங்கள்...

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...




- நீர் இன்றி அமையாது உலகு
- ஊழல் இல்லா உலகம் என்று காண்போம்?
- தலைமை ஏற்க இளமை
- நீதித் துரோகம்!
- நகைச்சுவை வள்ளல்!!!
- அறிவோம் தமிழர் பெருமை
- சிவகாமியின் சபதம்
- வாசிப்பை சுவாசிப்போம்
- மருத்துவத் தமிழ்
- தயக்கம் தகர்ப்போம்


**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar
Vijayarajah

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# நீர் இன்றி அமையாது

### எதைநோக்கி செல்கிறது இரான் போராட்டம்?

தென்னாப்பிரிக்காவின் கேப் டவுனில் தண்ணீர் முற்றிலும் காலியாகப்போகும் நாள் நெருங்குகிறது என்றும், இந்நாளில் உலகிலேயே தண்ணீர் தீர்ந்துபோகும் முதல் முக்கிய நகரமாக கேப் டவுன் மாறும் என்றும் கூறப்பட்டது.

ஏதோ ஹாலிவுட் படத்தின் கதையைப் போல இருந்தாலும் இது கதையல்ல நிஜம். கேப் டவுன் நகரம், உலகிலேயே ஒரு சொட்டு நீர் கூட இல்லாத முதல் நகரமாகப் போகிறது. மிகப் பயங்கர எச்சரிக்கையாக இருக்கும் அந்த நாளுக்கான தேதியும் குறிக்கப்பட்டு விட்டது.


2ம் உலகப் போர், செப்டம்பர் 11 தாக்குதல் போல இந்த எச்சரிக்கைச் செய்தி உலக நாடுகளையே கடும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது. இந்த எச்சரிக்கைச் செய்தி எங்களை நடுநடுங்கச் செய்துள்ளது என்கிறார்கள் அந்நகர மக்கள்.

இங்கு வாழும் 40 லட்சம் மக்களுக்கு முற்றிலும் குடிநீர் கிடைக்காத நிலை ஏற்படலாம். அப்போது ஒவ்வொரு நாளும் வரிசையில் நின்று அன்றைய நாளுக்கான குடிநீரைப் பெறுவதற்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருக்கும். மக்கள் வரிசையைக் கட்டுப்படுத்துவதற்காக ராணுவம் பாதுகாப்புப் பணியில் ஈடுபடத் தயாராகிவருகிறது.



தண்ணீரை விலைகொடுத்து வாங்குவோம்' என்று அதை ருசித்து, சிலாகித்த கடந்த தலைமுறையினர் நினைத்திருக்க வாய்ப்பில்லை. 'என்னதுஞ் தண்ணீர் இலவசமாகக் கிடைத்ததா?' என்று வருங்கால தலைமுறையினர் ஆச்சர்யப்படுவதற்கான வாய்ப்புகளும் நிறையவே இருக்கின்றன. அவசர நிலையில், `தவிச்ச வாய்க்கு தண்ணி கொடுக்க' நீங்கள் பிரயத்தனப்பட்டாலும், விலைகொடுத்துதான் தண்ணீரை வாங்க வேண்டும்.

அடுத்த மிகப்பெரிய அதிர்ச்சி என்னவென்றால், விலைகொடுத்தால்கூட தண்ணீரை வாங்க முடியாத சூழல் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தெரிய




ஆரம்பித்துவிட்டன. தண்ணீரே இல்லாத உலகின் முதல் பெருநகரமாக தென்னாப்பிரிக்காவின் கேப் டவுன் மாறவிருக்கும் செய்தி மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இயற்கையைச்




சீரழிக்கும் செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தால், கேப் டவுனின் நிலைமை நம் நாட்டு பெரிய டவுன்களிலும் ஏற்படலாம். 'மூன்றாம் உலகப் போருக்கான காரணம் தண்ணீராகத்தான் இருக்கும்' என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூக்குரலிடுவதும் விரைவில் நடந்துவிடுமோ என்ற எண்ணம் ஏற்படத்தான் செய்கிறது.


'டே ஜீரோ' எனப்படும் தண்ணீர் முற்றிலுமாக




காலியாகப் போகும் நாள் தென்னாஃப்ரிக்காவின் கேப் டவுனில் ஏப்ரல் மாதம் வரவிருந்த நிலையில், தற்போது அந்நாள் மே மாதம் வரும் என்று நகர நிர்வாகம் அறிவித்துள்ளது. டே ஜீரோ நாளில் சுமார் 40 லட்சம் பேர் வாழும் கேப் டவுன் நகரில் தண்ணீர் விநியோகம் முற்றிலுமாக நிறுத்தப்படும்.

இந்நிலைக்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக கேப் டவுனில் போதிய மழை பொழிவு இல்லாததாலும், எல் நினோ போன்ற பருவநிலை மாற்றம் காரணமாகவும் அங்கு கடும் வறட்சி நிலவுகிறது. அணை நீர்மட்டங்கள் மோசமாகக் குறைந்ததையடுத்து மிகக் குறைந்த அளவிலான நீரை நகர நிர்வாகம் பொதுமக்களுக்கு விநியோகித்து வந்தது.

இச்சூழலில், கேப் டவுனின் 'ஜீரோ டே' ஏப்ரல் 12 ஆம் தேதி என்று கணிக்கப்பட்டிருந்தது.




இதற்காக நகரத்தில் வாழும் பொதுமக்கள் தண்ணீர் பயன்பாட்டு அளவை குறைத்துகொள்ள வேண்டும் என்று கேப் டவுன் நிர்வாகம் கோரிக்கை விடுத்திருந்தது. நகர மக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவது எப்படி என்பது குறித்தும் வழிமுறைகளை கேட் டவுன் நிர்வாகம் வழங்கியிருந்தது.

கேப் டவுன் நகரவாசிகள் தினசரி 50 லிட்டருக்கும் குறைவான நீரைப் பயன்படுத்தினால் 'ஜீரோ டே' பிரச்சினையை முறியடித்துவிடலாம் என்று கூறப்பட்டது. இந்நிலையில், தண்ணீர் முற்றிலும் தீர்ந்துபோகும் அந்த 'ஜீரோ டே' ஏப்ரல் 29 ஆம் தேதிக்கு பதிலாக மே 18 ஆம் தேதிக்கு தள்ளிப் போயிருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

கேப் டவுன் நகருக்கு தண்ணீர் விநியோகித்து



வரும் அணைகளின் நீர்மட்டம் தற்போது 25.5% நீரை கொண்டுள்ளன. விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் நீர் பெருமளவு குறைந்துவிட்டதும், ஒருவருக்கு தினசரி 50 லிட்டர் நீர் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டதை ஒட்டி பொதுமக்கள் தங்களின் தண்ணீர் தேவையை சுருக்கி கொண்டதும் இந்த ஜீரோ டே தள்ளிப்போயிருப்பதற்கான சில காரணங்கள் என்று கருதப்படுகிறது.

## தண்ணீர் தானம்

கேப் டவுன் நகரத்தின் தற்போதைய சூழ்நிலையை பார்த்து கிரோன்லாண்ட் நீர்ப்பாசன சங்கத்தை சேர்ந்த விவசாயிகள் சுமார் 10 ஆயிரம் மில்லியன் லிட்டர் தண்ணீரை கேப் டவுன் நகர மக்களுக்கு தானமாக வழங்கியுள்ளார். இந்த நீர் கேப் டவுன் வாசிகளுக்கு சுமார் 20 நாட்களுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து 3 ஆண்டுகளாக மழை இல்லாததாலும், மோசமான பருவநிலை மாற்றம் காரணமாகவும் அனைத்து நீர்நிலைகளும் வறண்டு போயுள்ளன. தென்னாப்ரிக்கா, கடந்த நூறு ஆண்டுகளில் காணாத வறட்சியாக இது உள்ளது. முக்கிய நகரங்களில் கூட, வீடுகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் பணி பல நாட்களுக்கு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டது.





மருத்துவமனைகள், பள்ளி போன்றவைகள் மட்டுமே குழாய் மூலம் தண்ணீர் பெற்று வருகின்றன. இதுவரை ஒரு குடும்பத்துக்கு 90 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வந்த நிலையில், அது தற்போது 50 லிட்டராகக் குறைக்கப்பட உள்ளது.

இவ்வளவு அபாயகரமான கேப் டவுன் நகரம், ஏப்ரல் 22ம் தேதி ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லாத நாளாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது ஏப்ரல் 12ம் தேதியே அந்த நிலை ஏற்படும் என்று மறு அறிவிப்பு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

'பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, கையில் எந்தத் தீர்வுமே இல்லை, இனி இயற்கையின் போக்கில் ஏதாவது நல்லது நடந்தால்தான் உண்டு' என்று அந்நகரத்தின் நீர்வள ஆதாரங்களை நிர்வகிக்கும் நிபுணர்கள் கைவிரித்துவிட்டார்கள். தற்போதைக்கு, அவசர அவசரமாக 200 அவசர குடிநீர் வழங்கல் மையங்கள் உருவாக்கப்பட்டுவருகின்றன. இந்த மையங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் 20, 000 வீடுகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

## நீருக்குக் காவல்

இயற்கை நீரூற்றுகளிலிருந்து தண்ணீர் திருடுபவர்களைக் கண்காணிப்பதற்கு சிறப்புக் காவல் படைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், தண்ணீரைப் பயன்படுத்தி கார்களை சுத்தம் செய்வதைக் குற்றம் என்று அறிவிக்கலாமா என்றுகூட யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்தே கேப் டவுனில் வசிக்கும் மக்களை எச்சரிக்கத் தொடங்கிவிட்டது தென்னாப்பிரிக்க அரசு. வழக்கமாக உபயோகிக்கும் தண்ணீரின் அளவைக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தது.




அரசின் இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் தன்னார்வ அமைப்புகளும் பங்கெடுத்துக்கொண்டன. தற்போது, ஒரு நாளைக்கு 50 லிட்டர் நீரை மட்டும் பயன்படுத்துங்கள் என்று நகராட்சி நிர்வாகம் வலியுறுத்திவருகிறது. தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சரிசெய்ய முடியாவிட்டால், ஒரு நாளைக்கு 25 லிட்டருக்கும் குறைவாகப் பயன்படுத்த வேண்டியிருக்கலாம். தண்ணீர் முற்றிலுமாக இல்லாத 'டே ஜீரோ' என்று அழைக்கப்படும் அந்த பூஜ்ஜிய நாள் அநேகமாக ஏப். 16—ல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே ஈரான், சோமாலியா, மெக்ஸிகோஆகிய நாடுகள் கடும் குடிநீர்ப் பஞ் சத்தைச் சந்தித்துள்ளன. கடந்த ஆண்டு கோடையில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரம் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொண்டது. தற்போது இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் குடிநீருக்கான பற்றாக்குறை நிலவிவருகிறது. இந்தியாவின் 21 நகரங்களிலும் இத்தகைய குடிநீர்ப் பஞ்சம் உருவாவதற்கான வாய்ப்புள்ளது என்று கணிக்கப்படுகிறது.

நகரங்களில் தண்ணீர்ப் பராமரிப்பு என்பது குடிநீர் சம்பந்தமான பிரச்சினை மட்டுமில்லை. சுகாதாரத்தோடும் நெருங்கிய தொடர்புள்ள விஷயம் அது. தண்ணீர்ப் பற்றாக்குறை, கழிவுகளை அகற்றுவதில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதன் உடன்விளைவு, தொற்றுநோய்கள்.

கேப் டவுனின் குடிநீர்ப் பற்றாக்குறைக்கு முக்கிய காரணம், பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக, அந்நகரின் நீராதாரங்களாக இருக்கும் அனைத்து நீர்த்தேக்கங்களும் வறண்டு போய்விட்டன என்பதுதான். ஆனால், அது மட்டுமே காரணமில்லை. நகரத்தின் கிடுகிடு வளர்ச்சி, நகரத்திற்குக் குடிபெயர்பவர்களின் எண்ணிக்கை மிதமிஞ்சி அதிகரித்தது ஆகியவையே குடிநீர்த் தேவை மற்றும் அளிப்பில் ஏற்பட்டிருக்கும் சமநிலை சீர்குறைந்துபோனதற்கு அடிப்படைக் காரணங்கள். இந்த இரண்டு காரணங்களும் சென்னைக்கும் பொருந்தக்கூடியவை.




இந்தக் காரணங்களைத் தாண்டி பேசப்படாத இன்னொரு காரணமும் உண்டு என்பதையும் சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது, தண்ணீரை உபயோகப்படுத்துவதைப்பற்றி நமக்கு இருக்கும் அலட்சியம்.

ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு உருவாக்கிய கட்டாயத்தின்பேரில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைப் பின்பற்ற ஆரம்பித்தோம். தற்போது, அந்தத் திட்டம் தனது தீவிரத்தை இழந்துநிற்கிறது. நீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்தும் அக்கறையும் நம்மிடம் இல்லை. நகரத்தின் குறுக்கே ஓடும் நதிகள் மாசுபட்டுக் கிடக்கின்றன. நீரை வணங்கி வழிபடும் நமக்கு, பயன்படுத்தும் நீரின் அளவு குறித்த விழிப்புணர்வு இல்லை. மழைக்காலங்களில் முழங்கால் நனைய சாலைகளில் தேங்கிக்கிடக்கும் நீரில் நடக்கும்போது, அடுத்துவரும் கோடையைச் சமாளித்துவிடலாம் என்று மகிழ்ச்சியடைகிற நிலையில்தானே நாமும் இருக்கிறோம். நகரங்களின் வரலாற்றில் குடிநீர் வழங்கலுக்கான திட்டமிடல்களுக்கும், எதிர்பாராத பற்றாக்குறை நிலையைச் சமாளித்தலுக்கும்

பெரும்பங்கு இருக்கிறது. இன்று ஆப்பிரிக்காவின் கேப் டவுன் நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பஞ்சம் வரையமுறையற்று வளர்ந்துகொண்டிருக்கும் சென்னைக்கும் ஒரு எச்சரிக்கைப் பாடம்!

மார்ச் மாதத்திற்குள் தண்ணீர் தீர்ந்துபோகலாம் என அண்மைய கணிப்புகள் பரிந்துரைத்தன. கடந்த மூன்று வருடங்களாகப் பெய்த மிக குறைந்த மழை மற்றும் வளர்ந்து வரும் மக்கள் தொகையால் அதிகரித்துள்ள தண்ணீர் நுகர்வே இந்நெருக்கடிக்குக் காரணம்.



கடல் நீரை குடிநீராக்குவது, நிலத்தடி நீர் சேகரிப்பு திட்டங்கள், நீர் மறுசுழற்சி திட்டங்கள் என பிரச்சனையை தீர்க்க உள்ளூர் அரசு வேகமாக முயன்றுவருகிறது.

## தாகத்தில் தவிக்கும் மக்கள்!

தற்போதைக்கு, அவசர அவசரமாக 200 அவசர குடிநீர் வழங்கல் மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் 20,000 வீடுகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. ஒருவரது தினசரி தேவைக்காக, 87 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. கார் சுத்தப்படுத்துதல், நீச்சல் குளம் மற்றும் வீட்டுத் தோட்டங்களுக்கு தண்ணீர் பயன்படுத்தப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் இயற்கை நீரூற்றுகளிலிருந்து தண்ணீர் திருடுபவர்களைக் கண்காணிப்பதற்கு சிறப்புக் காவல் படைகள் உருவாக்கப்பட்டுள்ளன.




## இந்தியாவிலும் தண்ணீர் பஞ்சம் அபாயம்!

ஏற்கெனவே ஈரான், சோமாலியா, மெக்ஸிகோ ஆகிய நாடுகள் கடும் குடிநீர்ப் பஞ்சத்தைச் சந்தித்துள்ளன. தற்போது இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் குடிநீருக்கான பற்றாக்குறை நிலவிவருகிறது. இந்தியாவின் 21 நகரங்களிலும் இத்தகைய குடிநீர்ப் பஞ்சம் உருவாவதற்கான வாய்ப்புள்ளது. கேப் டவுன் நகரத்தைப் போலவே சென்னையிலும், நகரத்தின் கிடுகிடு வளர்ச்சி, நகரத்திற்குக் குடிபெயர்பவர்களின் எண்ணிக்கை மிதமிஞ்சி அதிகரித்தது ஆகியவையால் விரைவில் சென்னை நகருக்கும் இதுபோன்ற ஒரு நிலை ஏற்படலாம் என இயற்கை ஆர்வலர்கள் எச்சரித்துள்ளனர்.

இயற்கை வளமான தண்ணீர் சேமிப்பின் அவசியம் அவரவர்களுக்கு கஷ்டம் வரும் வரை புரியாது. தண்ணீர் சேமிப்பிற்கான அவசியத்தை உணர்த்தும் எச்சரிக்கை மணி தென்ஆப்பிரிக்காவின் கேப்டவுனில் அடிக்கப்பட்டுள்ளது.

ஆப்ரிக்கன் பெங்குவின், டேபிள் மலை, சூரிய ஒளி மற்றும் கடலை கொண்ட தென் ஆப்ரிக்கா தலைநகரான கேப் டவுன், உலகின் புகழ்பெற்ற சுற்றுலா தளமாக உள்ளது. ஆனால், தண்ணீர் தீர்ந்துபோகும் உலகின் முதல் முக்கிய நகரம் என்பதற்காகவும் கேப் டவுன் பிரபலமாகலாம் என்பதுதான் மிகமிக வேதனையான செய்தியாக இருக்கிறது!

தென் ஆப்பிரிக்க நகர் கேப் டவுன். ஏப்.16—ல் அந்நகரத்தில் குடிநீர் முழுமையும் தீர்ந்துபோய் 'டே ஜீரோ' எனப்படும் பூஜ்ஜிய நாளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

பின்னர் கேப் டவுன் அருகிலுள்ள கிரபவ் நகர விவசாயிகள் அமைப்பு உதவியதால் கேப்டவுனின் டே ஜீரோ நாள் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கேப் டவுனைப் போன்று விரைவில் தண்ணீர் தீர்த்துபோகும் வாய்ப்புள்ள 11 நகரங்களுக்கு தண்ணீர் மேலாண்மை நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தண்ணீர் தீர்ந்து போகும் நகரங்களில் முதலாக கேப் டவுன் உள்ளது. கேப்டவுனுக்கு அடுத்து தண்ணீர் தீர்ந்து போகும் வாய்புள்ள நகரங்களில் இந்தியாவின் பெங்களூருவும் இடப்பெற்றுள்ளது.


ஐ.நா.வின் கணிப்பு:

பூமியில் 70 % சதவீதம் நீர் இருந்தாலும், அதில் வெறும் 3% சதவீதம் மட்டுமே தூய்மையானதாக உள்ளது. உலகில் சுமார் ஒரு கோடி மக்கள் போதுமான தண்ணீர் கிடைக்காமல் துன்பத்தில் உள்ளனர் என ஐ நா கூறுகிறது.

## தண்ணீர் தீர்ந்து வாய்ப்புள்ள 11 நகரங்களின் விவரம்:

சா பாலோ

பிரேசிலின் பொருளாதார நகரம் என்று அழைக்கப்படும் சா பாலோ மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களில் ஒன்று. சா பாலோ நகரமும் கடந்த 2015 ஆம் ஆண்டு கேப்டவுன் சந்தித்துவரும் தண்ணீர் பற்றாக்குறையை சந்தித்தது. தண்ணீர் நெருக்கடி உச்சத்தில் இருந்தபோது 3 கோடிக்கு அதிகமான மக்களுக்கு வெறும் 20 நாட்களுக்கு தேவையான தண்ணீர் மட்டுமே இருந்தது. தண்ணீர் திருட்டை தடுக்க போலீஸார் பெரும் துயரப்பட்டனர்.




அதன் பின்னர் 2016 ஆம் ஆண்டில் தண்ணீர் பற்றாக்குறை தீர்க்கப்பட்டாலும் அரசின் போதிய நடவடிக்கை மற்றும் திட்டங்கள் இல்லாததால் மீண்டும் தண்ணீர் பற்றாக்குறைக்கு ஆளாகியுள்ளது, எதிர்காலத்தில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது.

பெங்களூரு


தொழில் நுட்பம் வேகமாக வளர்ந்து வரும், இந்தியாவின் பெங்களூரு நகரமும் இந்தப் பட்டியலில் இடப்பெற்றுள்ளது. தொழில் நுட்பத்தில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வரும் பெங்களூரின் அதீத வளர்ச்சியால் நீர் மற்றும் கழிவு நீர் அமைப்புகளை நிர்வகிக்க முடியாமல் அந்நகர நிர்வாகிகள் தவித்து வருகின்றனர். பெங்களூரில் நிலைமை மோசமாவதை தவிர்ப்பதற்கு பழைய குழாய் முறை தேவை என்று அரசு வலியுறுத்தியுள்ளது. அதுமட்டுமில்லாது அந்நகரில் உள்ள 85 % தண்ணீர் குடிநீர் உபயோகத்துக்கு உகந்ததல்ல எனவும், பெங்களூரிலுள்ள பெரும்பாலான ஏரிகள் மாசசடைந்துள்ளதாக அதில் உள்ள ஒரு சொட்டு தண்ணீர் கூட குடிப்பதற்கோ, குளிப்பதற்கோ உகந்ததல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெய்ஜிங்

உலக மக்கள் தொகையில் 20% சீனா கொண்டுள்ளது, ஆனால் அங்கு குடி நீர் உபயோகத்துக்கான தண்ணீர் வெறும் 7% மட்டுமே உள்ளது. கடந்த 2014 ஆம் நாண்டு 2 கோடி சீன மக்களுக்கு 145 கியூபிக் மீட்டர்ஸ் அளவு தண்ணீர் இருந்தது. அதுமட்டுமில்லாது 2000 முதல் 2009 வரை 13 % வரை சீனாவில் தண்ணீர் வீழ்ச்சியடைந்துள்ளதாக கொலம்பிய பல்கலைகழகம் தெரிவித்துள்ளது.

ஜகார்தா

பல கடற்கரை நகரங்களை போன்று இந்தோனேசிய தலைநகர் ஜகார்தாவும் கடல் நீர் மட்டம் உயர்வால் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது. நகரில் 1 கோடி மக்கள் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடும் மழை பொழிந்து திறந்தவெளி கான்க்ரீட் நிலங்களால் மழைநீரை நிலம் உறிஞ்சமுடியாத நிலையில் உள்ளது.




கெய்ரோ

உலகின் சிறந்த நகரங்களில் ஒன்றான எகிப்தின் கைரோவில் உள்ள நைல் நதி நவீன காலத்துடன் போராடி வருகிறது. அங்கு அதிகரித்து வரும் மாசினால் அந் நகரம் விரைவில் தண்ணீர் பற்றாக்குறை சந்திக்கும் நிலை உருவாகியுள்ளது.

மாஸ்கோ

ஒரு காலாண்டுக்கு தேவையான தண்ணீரை ரஷ்யா கொண்டிருக்கிறது. எனினும் இந்த நூற்றாண்டின் கடுமையான மாசினால் ரஷ்யா பாதிப்புக்குள்ளாகியுள்ளது. ரஷ்யாவில் உள்ள தண்ணீரில் 35 % முதல் 60% சதவீதம் தண்ணீர் பயன்பாட்டிற்கான தரத்தை பெற்றிருக்க என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்தான்புல்

துருக்கியின் முக்கிய நகரமான இஸ்தான்புல்லில் 2016—ம் ஆண்டு ஒரு நபருக்கு ஒரு ஆண்டுக்குக் கிடைக்கும் தண்ணீர் அளவு 1700 கன மீட்டருக்கும் குறைவாக சென்றுவிட்டது. இதனால் 2030க்குள் துருக்கியில் தண்ணீர் பற்றாக்குறை மோசமாகலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ சிட்டி

மெக்சிக்கோ தலைநகர் மெக்சிகோ சிட்டியில் 2 கோடி மக்களுக்கு குடி நீர் பற்றாக்குறை ஏதும் தற்போது இல்லை. ஆனால் இந்த நகரத்தில் வாழும் மக்களுக்கு சில மணி நேரங்கள் மட்டுமே தண்ணீர் அளிக்கப்படுகிறது. வெறும் 20% மக்களுக்கு மட்டுமே நாள் முழுவதும் தண்ணீர் வழங்கப்படுகிறது. குழாய்களில் ஏற்படும் கசிவுகளால் சுமார் 40%தண்ணீர் வரை வீணாகிறது.

லண்டன்

லண்டனில் ஆண்டுக்கு 600 மில்லி மீட்டர் மட்டுமே மழை பொழிகிறது. இந்த நிலை தொடர்ந்தால் லண்டன் கூடிய விரைவில் தண்ணீர் பஞ்சத்தை சந்திக்கும் என்று கணிக்கடப்பட்டுள்ளது.

டோக்கியோ

ஜப்பான் தலை நகர் டோக்கியோவிலும் கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டோக்கியோவில் 3 கோடி மக்கள் 70 சதவீத நீர் தேவையை ஆறுகள், ஏரிகள், மற்றும் உருகிய பனி ஆகியவற்றை நம்பியே உள்ளனர்.

மியாமி

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள மியாமி நகரமும் இந்த வரிசையில் இடம் பெற்றுள்ளது. நன்கு மழை பெய்யும் இடங்களில் அமெரிக்க புளோரிடா மாகாணமும் ஒன்று. இருப்பினும், மியாமி நகர் தண்ணீர் பற்றாக்குறையை எதிர் கொண்டுள்ளது. கடல் மட்ட உயர்வின் காரணமாக உப்புநீர் ஊடுருவல் காரணமாக அந்த நகரிலுள்ள ஆறு கிணறுகள் மூடப்பட்டுள்ளன.



# கருத்துப் ப(ா)டம்

**கருத்துச் சித்திரம்** கருத்து: ம.வடுகநாதன், வேதாரண்யம்




## சொல்றாங்க... சொல்றாங்க...



"கமல் தலைப்புச் செய்தியாகலாம்; தலைவராக முடியாது!"

**தமிழிசை**

(சரிதான்! நீங்க தலைவியா இருந்தும் கூடத் தலைப்புச் செய்தியாக ஆகலையே!)



"சமஸ்கிருதத்தை விடவும் தொன்மையான மொழி தமிழ்; ஆனால் எனக்கு தமிழில் 'வணக்கம்' மட்டுமே சொல்லத் தெரியும்!"

**மோடி**

தமிழ் நெஞ்சங்களில் இடம்பிடிக்க "வணக்கம்" சொன்னால் மட்டும் போதாதய்யா!)



"துப்பாக்கிச் சூடு சம்பவங்களை தவிர்க்க ஆசிரியர்களுக்கு துப்பாக்கி"

**ட்ரம்ப்**

(உங்களை இந்தப் பதவிக்கு அமர்த்தும்போதே இதெல்லாம் எதிர்பார்த்தோம்! பாவம் மக்கள்!)



"காகிதப் பூக்கள் மலரலாம்! ஆனால் மணக்காது!"

**ஸ்டாலின்**

(மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொன்ன அறிஞர் அண்ணாவின் வழியில் வந்த கழகத்தின் குரலா இது?)

# ஊழல் இல்லா

## வங்கதேசத்தின் ஜனநாயகம் நிலைக்குமா?

வங்கதேசத்தின் முன்னாள் பிரதமரும் வங்கதேச தேசியக் கட்சி (பி.என்.பி.) தலைவருமான பேகம் காலிதா ஜியாவுக்கு ஊழல் வழக்கில் ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஊழல் வழக்கில் வங்கதேச முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தது. இதன் காரணமாக, இந்த ஆண்டின் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் அவர் போட்டியிடும் தகுதியை இழக்கக் கூடும் என்பதால் இந்தத் தீர்ப்பு அவருக்கு ஒரு மாபெரும் அரசியல் பின்னடைவு என்று கூறப்படுகிறது.



இதுகுறித்து, இந்த ஊழல் வழக்கை விசாரித்து வரும் டாக்கா சிறப்பு நீதிமன்ற நீதிபதி முகமது அக்தாருஸாமன் வியாழக்கிழமை அளித்த தீர்ப்பில் தெரிவித்ததாவது:




செயல்படாத அறக்கட்டளையின் பெயரில் பெரும் தொகையை பெற்று மோசடியில் ஈடுபட்டதாக கலீதா ஜியா உள்ளிட்ட 6 பேர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த ஊழல் குற்றத்துக்காக முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவுக்கு 5 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

மேலும், தலைமறைவாகியுள்ள அவரது மகனும், வங்கதேச தேசியவாதக் கட்சியின் துணைத் தலைவருமான தாரிக் ரஹ்மான் மற்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ள 5 பேருக்கு 10 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. கலீதா ஜியாவின் வயது மற்றும் சமூக அந்தஸ்து காரணமாக அவருக்கு மற்ற குற்றவாளிகளைவிட குறைவான சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

அரசியல் அரங்கில் இருந்த முக்கிய எதிர்க்கட்சியின் தலைவியே தண்டனைக்கு உள்ளாகியிருப்பதால், அந்தக் கட்சியின் எதிர்காலம் மட்டுமல்ல, வங்கதேச ஜனநாயகத்தின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி இருக்கிறது. காரணம், இப்போதைய ஆளும் கட்சியான அவாமி லீக் (ஏ.எல்.), வங்கதேச தேசியக் கட்சி (பி.என்.பி.) ஆகியவைதான் 1991 முதல் மாறிமாறி ஆண்டுவருகின்றன.

வங்கதேசத்தைச் சுமார் 10 ஆண்டுகள் ராணுவம் தொடர்ந்து ஆட்சிசெய்தது. 1991—க்குப் பிறகு நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பி.என்.பி. ஆட்சிக்கு வந்தது. 1996—ல் அவாமி லீக் ஆட்சிக்கு வந்தது. 2001—ல் பி.என்.பி. கூட்டணி மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. 2001 முதல் 2006 வரையிலான ஆட்சிக் காலத்தில் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் அதிகமாகின. அத்துடன் எதிர்க்கட்சிகளும் மதச் சிறுபான்மையினரும் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். அவாமி லீக் கட்சியின் பொதுக்கூட்டத்தில் கையெறி குண்டு

# உலகம்

## என்று காண்போம்!

**சஃபர் ஷோபன்**

வீசப்பட்டதில், அக்கட்சியின் மூத்த தலைவர்கள் இருவர் உட்பட 24 பேர் இறந்தனர். 300—க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இப்போதைய பிரதமர் ஷேக் ஹஸீனா நூலிழையில் உயிர் தப்பினார். இந்தத் தாக்குதல் தொடர்பான வழக்கில் காலிதா ஜியாவின் மகன் தாரிக் ரெஹ்மான், அப்போதைய உள்துறை அமைச்சர் லுட்போசமான் பாபர் உள்ளிட்டோர் விசாரிக்கப்படுகின்றனர்.



### பி.என்.பி. எதிர்கொண்ட சவால்கள்

ராணுவ ஆதரவுடன் 11.01.2007—ல் இடைக்கால அரசு ஏற்பட்டது. அத்துடன் பி.என்.பி.யின் அராஜக ஆட்சி முடிவுக்குவந்தது. அதன் பிறகு, கடந்த 11 ஆண்டுகளாக அக்கட்சி எதிர்க்கட்சியாகவே நீடிக்கிறது. முதன்முதலில் ஜனநாயக ஆட்சியைக் கலைத்துவிட்டு, ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியபோது அவாமி லீக், பி.என்.பி. இரண்டுமே ராணுவத்தின் ஒடுக்குமுறைகளால் பாதிக்கப்பட்டன. 2008 டிசம்பரில் தேர்தல் நடந்தபோது அவாமி லீக் அமோக வெற்றிபெற்று ஆட்சிக்குவந்தது. அதேவேளையில், பி.என்.பி. கட்சி தேயத் தொடங்கியது. ஆட்சியில் இருந்த அவாமி லீக், அதைப் பயன்படுத்திக்கொண்டு கட்சியை வலுப்படுத்திக் கொண்டது.

எதிர்க்கட்சிக்கு என்னவெல்லாம் சோதனைகள் வருமோ அது பி.என்.பி.க்கும் வந்தது. 2014 தேர்தலுக்கு




முன்னால் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் பி.என்.பி.யை வலுவான கட்சியாகக் காட்டியதுடன், அது ஆட்சியைப் பிடிப்பதற்கும் சாத்தியக்கூறு இருப்பதாகவும் தெரிவித்தன. இடைக்கால அரசின் தலைமையில் தான் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும் என்ற அரசியல் சட்டத்தை அவாமி லீக் திருத்தியது. 2007—ல் அப்படி இடைக்கால அரசு தலைமையேற்றதும் ராணுவம் ஆட்சிப் பொறுப்பைத் தன் கையில் எடுத்துக்கொண்டுவிட்டது. அப்படி நேராமலிருக்கத்தான் அந்தச் சட்டத்தைத் திருத்தியது அவாமி லீக். உண்மையில், 2014 தேர்தலில் போட்டியிட்டிருந்தால் பி.என்.பி. வெற்றி பெற்றிருக்கும். ஆனால், அக்கட்சியோ இடைக்கால அரசு இல்லாவிட்டால் தேர்தலையே புறக்கணிப்போம் என்று அறிவித்தது. பி.என்.பி.

போட்டியிடாமலேயே தேர்தல் நடந்துமுடிந்தது. அவாமி லீக் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு மீண்டும் வந்தது.

பி.என்.பி.யால் மக்களைத் திரட்டவோ, ஆட்சியை ஏற்குமாறு ராணுவத்தைக் கேட்டுக்கொள்ளவோ முடியவில்லை. அதற்குப் பதிலாகத் தன்னுடைய கோரிக்கையை அரசு ஏற்க வேண்டும் என்பதற்காக ஏராளமான பேருந்துகளைத் தீயிட்டு எரித்தது. அதனால் பலன் ஏற்படவில்லை என்பதுடன் மக்களும் அதன் பொறுப்பற்ற செயலை வெறுத்தனர். அரசின் சொத்துகளைச் சேதப்படுத்தும் உங்களுக்கு நாட்டை ஆளும் தகுதி உண்டா என்று மக்கள் அக்கட்சியைக் கேட்டனர்.

2014—ல் நாடாளுமன்றத் தேர்தலை பி.என்.பி. புறக்கணித்ததால், அவாமி லீக் அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது, வங்கதேச அரசியலில் திருப்புமுனையாக அமைந்துவிட்டது. 2014 முதல் அவாமி லீக் வளர்ந்துகொண்டே வந்தது. பி.என்.பி. தேய்ந்துகொண்டே சென்றது. அரசின் கடுமையான ஒடுக்குமுறை மட்டுமல்லாமல் அக்கட்சிக்குள்ளேயே ஏற்பட்ட முரண்களும், குறைகளும் அதை வலுவற்றதாக்கிவிட்டன. அரசின் அடக்குமுறையும் சாதாரணமானதல்ல. பல பி.என்.பி. தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு மாதக்கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டனர். இது கட்சியின் அமைப்பையே சீர்குலைத்தது. உள்ளூர் தலைவர்களும் தொண்டர்களும் போலீஸுக்கு அஞ்சி தலைமறைவானதால் கட்சியால் மக்களைத் தனக்கு ஆதரவாகத் திரட்ட முடியவில்லை. பி.என்.பி.யை ஒழிக்க வேறொருவர் தேவையில்லை என்ற அளவுக்கு அந்தக் கட்சியே தன்னை அழித்துக்கொண்டது. முக்கிய எதிர்க்கட்சியாக ஜனநாயகக் கடமையை ஆற்றத் தவறியது. அவாமி லீக் மட்டும்தான் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது என்று எண்ண வேண்டாம். பி.என்.பி. கட்சியும் பதவியில் இருந்தபோது இப்படித்தான் நடந்துகொண்டது.

இப்போது பதவியில் இருக்கும் அவாமி லீக் அரசின் பதவிக்காலம் 2019 ஜனவரியுடன் முடிகிறது. பிறகு புதிதாகப் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும். இந்த முறையும் தேர்தலை பி.என்.பி. புறக்கணிப்பதையே அவாமி லீக் விரும்பும். அப்படி நடந்தால், அவாமி லீக் கட்சியால் ஆட்சியில் தொடர்வது எளிதாகிவிடும். அதேசமயம், தேர்தல் சட்டப்படி பி.என்.பி. கட்சியின் அங்கீகாரம் ரத்தாகிவிடும். ஆனால், சர்வதேச சமூகங்களும் இந்தியாவும் பிரதான எதிர்க்கட்சி பங்கேற்காமல் வங்கதேச நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் நடைபெறுவதை விரும்பாது. அவாமி லீக் கட்சியுடன் இந்திய அரசு தோழமை உறவு கொண்டிருந்தாலும், எதிர்ப்பின்றி அக்கட்சி ஆட்சியில் நீடிப்பதை முறையானதாக இந்தியா கருதவில்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.




## இனி என்னவாகும்?

தளர்வுற்ற நிலையில் இருக்கும் பி.என்.பி. போட்டியிட்டால், அது அவாமி லீக் கட்சிக்கே சாதகமாகிவிடும். பி.என்.பி. மிகுந்த வலிமையுடன் தேர்தலில் போட்டியிடுவது அந்நாட்டின் ஜனநாயகத்துக்கு நல்லது. ஜியா தலைமை வகிக்க முடியவில்லை என்றால், பி.என்.பி.க்கு அரசியல் செல்வாக்கு மேலும் குறையும் என்பதும் உண்மை.

ஊழல் வழக்கில் விதிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்ய காலிதா ஜியாவுக்கு அனுமதி கிடைக்காவிட்டாலோ, அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை உறுதிப்படுத்தப்பட்டாலோ அடுத்து வரும் தேர்தலில் போட்டியிடும் தகுதி பறிக்கப்பட்டுவிடும். அதன் பிறகு, பி.என்.பி.யின் அழிவும் நிச்சயமாகிவிடும். தண்டனைக்கு எதிரான அவருடைய மேல்முறையீடு ஏற்கப்பட்டு, தண்டனைக்கும் தடை விதிக்கப்பட்டால் அவரால் பொதுத் தேர்தலிலும் போட்டியிட முடியும், ஆளும் கட்சிக்கும் கடுமையான சவாலை ஏற்படுத்த முடியும்.

காலிதாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனையும் சிறைவாசமும் அவருடைய கட்சித் தொண்டர்களை வேறு கட்சிகளில் சேரத் தூண்டும் என்று அவாமி கருதுகிறது. தொண்டர்கள் விலகினாலே கட்சி கலகலத்துவிடும்.

எது எப்படி இருந்தாலும் வலிமையான போட்டியை பி.என்.பி.யால் தர முடியாது. அதற்காக பி.என்.பி. கட்சிக்கு இரங்கற்பா பாடிவிட முடியாதென்றாலும், இந்நிலையிலிருந்து மீண்டு அரசியல் களத்தில் நீடிப்பதும் அக்கட்சிக்கு எளிதாக இருக்காது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் போட்டியின் விளைவு, வங்கதேசத்தையே பாதிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. இன்னும் ஓராண்டுக்கு பி.என்.பி. தட்டுத்தடுமாறி அரசியல் களத்தில் இருக்கும் என்றாலும், காலிதா இல்லாமல் கட்சி செல்வாக்கிழந்துவிடும். அப்படி பி.என்.பி. களத்திலிருந்து விலகினால் அல்லது இருந்தும் பயனில்லை என்ற நிலை ஏற்பட்டால், அந்த அரசியல் வெற்றிடத்தை வேறு எந்தக் கட்சி நிரப்பும் என்ற அடுத்த கேள்வி எழுந்திருக்கிறது. இது வங்கதேச அரசியல் எதிர்காலத்தை எப்படி வடிவமைக்கும் என்ற கேள்வியும் உடன் எழுகிறது!

*— சஃபர் ஷோபன், 'டாக்கா ட்ரிபியூன்' நாளிதழின் முதன்மை ஆசிரியர். © 'தி இந்து' ஆங்கிலம். தமிழில்: சாரி,*


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
வாழ்த்துக்கள்
9th
BIRTHDAY
HAPPY 9TH
BIRTHDAY!
9

# தலைமை

## ஏற்க

### ஜப்பானியரின் உற்சாகம் பொங்கும் பருவத் திருவிழா !

உலகம் எங்கிலும் பொது விடுமுறை என்பது தேசியத் தலைவர்களின் பிறந்த நாள் அல்லது வசந்த காலப் பெருவிழா, அல்லது கடவுள் — மதம் தொடர்பான நாளாகவே பெரும்பாலும் கொண்டாடப்படுகிறது. பிற நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அந்நாட்டை நோக்கிப் படையெடுப்பதற்கான வாய்ப்பாகவும் பொது



விடுமுறை நாட்கள் அமைந்துவிடுகின்றன. பொது விடுமுறை நாட்களில் எங்கு பார்த்தாலும் கூட்டம், கூச்சல், அன்றாட வாழ்க்கை நிலையில் பிறழ்ச்சி என்பதால் இதுபோன்ற விடுமுறை நாட்களை வெறுப்பவர்கள் உண்டு.




ஜப்பானியர்கள் மலைகளையும் முதியவர்களையும் ஆழ்கடல்களையும் குழந்தைகளையும் பூப்பெய்திய இளம் பெண்களையும் கொண்டாட சில நாட்களை ஒதுக்குவதை இப்படிப்பட்டவர்களால்கூடக் குறை காண முடியாது.

ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தின் இரண்டாவது திங்கள்கிழமை, வயதுவந்த பெண்களைக் கொண்டாடுவதற்காக ஒதுக்கப்படுகிறது. இளம் பெண்கள் பூப்பெய்துவது வெவ்வேறு வயதிலும் நாட்களிலும் இருந்தாலும் எல்லா பருவப் பெண்களும் 20—வது வயது தொடங்கும்போது அதற்காகக் கொண்டாடப்படுகின்றனர்.

1948—ம் ஆண்டு முதல் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டாலும் ‘ஜென்பாகு’ என்ற பெயரில் காலங்கால மாக இது ஜப்பானியரின் மரபுக் கொண்டாட்டமாகத்

# இளமை

தொடர்கிறது. ஜென்பாகுவில் ஆண்களுக்கும் கொண்டாட்டம் உண்டு, தமிழ்நாட்டில் இளவட்டக் கல்லைத் தூக்குவதைப் போல ஜப்பானிய யுவர்கள் அரிசி மூட்டையைத் தூக்கி உடல் வலுவைக் காட்ட வேண்டும். பெண்கள் ஊசியில் நூல் கோத்து விதம்விதமாகத் துணிகளைத் தைத்துக் காட்ட வேண்டும்.

ஜென்பாகு ஒவ்வொரு பெண்ணும்




பூப்படைந்தவுடன் அவரவர் வீடுகளில் நிகழ்த்தப்படும். நம் நாட்டில் மஞ்சள் நீராட்டு போலத்தான் இது. 20 வயது வந்தால்தான் வாலிபம் என்று அதிகாரபூர்வமாக நிர்ணயித்திருக்கிறார்கள். வாலிபர்கள் 20 வயது ஆனால்தான் கடன் அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும், தொலைபேசி இணைப்பை யும் அப்போதுதான் வாங்க முடியும். அது மட்டுமல்ல.. 20—க்குப் பிறகுதான் புகை பிடிக்கவும் மதுபானம் அருந்தவும் அனுமதி உண்டு.

## பல்லவி

இருபது வயதை எட்டியவர்களுக்கு உள்ளாட்சி மன்றங்களில் காலை நேர வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறும். அப்போது நகராட்சி நிர்வாகிகள், இளைஞர்கள் எப்படிப் பொறுப்புடனும் ஊக்கத்துடனும் செயல்பட்டு




முன்னுக்கு வர வேண்டும் என்று அறிவுரையாற்றுவார்கள். பிறகு, இந்த இளைஞர்கள், யுவதிகளின் குடும்பத்தினர் ஆலயங்களுக்குச் சென்று வாழ்க்கையில் வெற்றியும் நல்ல ஆரோக்கியமும் கிட்ட வழிபடுவார்கள்.

மாலையில்தான் மதுபானக் கேளிக்கை விருந்து கள் ஆரம்பமாகும். இந்தக் கேளிக்கை விருந்துகளின் போக்குதான் இப்போது மூத்த ஜப்பானியர்களுக்குக் கலக்கத்தை அளித்துவருகின்றது. குடித்துவிட்டுக் கத்துவது, ஆடுவது, சண்டையில் இறங்குவது, கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மகளிருடன் குலாவுவது போன்ற செயல் கள் வரம்பு



கடந்த ஆண்டு 12.30 லட்சம் பேர் 20 வயதை எட்டினர். 1970 உடன் ஒப்பிடுகையில் இது பாதிதான். ஜப்பானில் முதியோருக்கான தினம் செப்டம்பரில் வருகிறது.

ஜப்பானின் மொத்த மக்கள்தொகையில் 25%—க்கும் மேல் 65 வயது மற்றும் அதைத் தாண்டியவர்கள். 2015 முதல் 2030 — க்குள் மக்கள்தொகை மேலும் ஒரு கோடி குறையவிருக்கிறது. இது நாட்டின் பொருளாதாரத்திலும் எதிரொலிக்கக் கூடும்.




மீறிக்கொண்டே வருவது மூத்தவர்களுக்குக் கவலையை அளித்து வருகிறது.

ஜப்பானில் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருவதும் முதியவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருவதும் அரசுக்குப் பெரிய கவலையாகிவிட்டது.




இயற்கையை நேசிக்கும் ஜப்பானியர் கள் சுற்றுச்சூழல் கெடக்கூடாது என்பதில் அக்கறை உள்ளவர்கள். அதனாலேயே மலைகள், கடல்கள், பசுமைத் தாவரங் களுக்காகவெல்லாம் விடுமுறை அறிவித் துக் கொண்டாடுகின்றனர்.



தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# நீதி

## நதிநீர்ப் பங்கீட்டில் நிலத்தடி நீரைக் கணக்கில் எடுப்பது சரியா?



காவிரி நதிநீர்ப் பங்கீட்டு விவகாரத்தில், தனது இறுதித் தீர்ப்பை வழங்கியிருக்கும் உச்ச நீதிமன்றம், தமிழகத்தில் காவிரி பாயும் மாவட்டங்களில் 20 டி.எம்.சி. அளவுக்கு நிலத்தடி நீர் இருப்பதாகக் கூறியிருக்கிறது. காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி 2007 பிப்ரவரி 5 வரை தமிழகத்துக்கு வழங்கப்பட்டுவந்த 192 டி.எம்.சி. நீரிலிருந்து 14.75 டி.எம்.சி.யைக் குறைத்து தற்போது 177.25 டி.எம்.சி. என்று தனது தீர்ப்பில் கூறியுள்ளது. நிலத்தடி நீரின் கூறுகள் நதி நீரிலிருந்து பல்வேறு வகைகளில் வேறுபட்டவை. இந்நிலையில், மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்ப் பங்கீட்டில் நிலத்தடி நீரைச் சேர்த்து முடிவுகள் எடுப்பது சரியாக இருக்குமா என தெரிந்துகொள்வது அவசியமாகிறது.

ஏன் நிலத்தடி நீரைக் கணக்கில் கொள்ளக் கூடாது?

முதலாவதாக, நிலத்தடி நீரின் இருப்பளவைக் கொண்டு நதி நீர்ப் பங்கீட்டைச் செய்வது துல்லியமாக இருக்காது. எதிர்காலத்தில் இது போன்ற நதிநீர்ப் பிரச்சினைகள் மற்ற மாநிலங்களில் ஏற்படும்போது இதை முன் உதாரணமாகக் கொண்டு முடிவுகள் எடுத்தால் அது பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். மிக முக்கியமாக, நிலத்தடி நீர் என்பது நதிநீரிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அணைக்கு வரும் நதிநீரின் அளவையும், அணையில் உள்ள நீரின் அளவையும் ஏறக்குறைய துல்லியமாக அளவிட முடியும். ஆனால், இதேபோன்று நிலத்தடி நீரின் இருப்பைத் துல்லியமாக மதிப்பிட முடியுமா என்பது சந்தேகம். ஆராய்ச்சியாளர்களே இவ்விஷயத்தில் தெளிவான முடிவை எடுக்க முடியவில்லை.

ஒரு மாவட்டத்தில் குறிப்பிட்ட அளவு நிலத்தடி




# துரோகம்!


அ. நாராயணமூர்த்தி

நீர் இருப்பு உள்ளது என்பதே ஒரு மாயைதான். பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நிலத்தடி நீர் அங்கு இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம், ஏனெனில் நம் நாட்டில் நிலத்தடி நீர் இருப்பை, புவியியல்ரீதியாக அளவிடுகிறார்கள். புவியியல்ரீதியாக உள்ள அளவுக்கும் பூமிக்கு அடியில் இருக்கும் நீரின் அளவுக்கும் பெரிய வேறுபாடு உள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக, காவிரிப் பாசனம் பெறும் தஞ்சை மாவட்டத்தின் நிலத்தடி நீரை அருகிலுள்ள புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் மட்டுமல்லாமல், சிவகங்கை மாவட்ட விவசாயிகள் கூடப் பயன்படுத்தும் வாய்ப்புகள் உண்டு. நிலத்தடி நீரை, குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மட்டும்தான் பயன்படுத்த முடியும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கொடுக்க முடியாது.



மேலும், உச்சநீதிமன்றம் கூறுவதுபோல, தமிழகத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளில் 20 டி.எம்.சி. நிலத்தடி நீர் இருப்பு உள்ளதா என்பதே சந்தேகத்துக்குரிய விஷயம். அப்படியே இருந்தாலும், நிலத்தடி நீர் பெருமளவு பயன்படுத்தப்பட்டுவிட்டதாகவே புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மத்திய நிலத்தடி நீர் வாரியத்தால் 2017 ஜூனில் வெளியிடப்பட்டுள்ள 'இந்தியாவின் மாறுகின்ற நிலத்தடி நீர் வளங்கள்' என்ற விரிவான அறிக்கை, காவிரிப் பாசனம் பெறும் மாவட்டங்களில் நிலத்தடி நீர் அதிகமாக உறிஞ்சப்பட்டுவருவதாகக் கூறுகிறது. உதாரணமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஓர் ஆண்டுக்கு மொத்தமாகப் பயன்படுத்தக்கூடிய நிகர நிலத்தடி நீரின் அளவு 74,652 ஹெக்டேர் மீட்டர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 75,971 ஹெக்டேர் மீட்டர் அளவுக்கு இம்மாவட்டத்தில் உறிஞ்சப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது. அதாவது, எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய நிலத்தடி நீர் தஞ்சாவூர் மாவட்டத்தில் இல்லை என்கிறது இந்த அறிக்கை. காவிரிப் பாசனம் பெறும் மற்ற மாவட்டங்களான நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கரூர், திருவாரூர் போன்றவற்றில்








ஏறக்குறைய இதேபோன்ற நிலைமை உள்ளதாகவும் தெளிவாகக் கூறுகிறது. இந்நிலையில், எப்படி காவிரிப் பாசனம் பெறும் விவசாயிகள் நிலத்தடி நீரை விவசாயத்துக்குப் பயன்படுத்துவது சாத்தியமாகும்?

செலவு அதிகம்

ஒரு பேச்சுக்காக, உச்ச நீதிமன்றம் கூறுவது போல 20 டி.எம்.சி. நிலத்தடி நீர் காவிரிப் பாசனப் பகுதிகளில் இருப்பதாக ஏற்றுக்கொண்டாலும், நதி நீரைப் போல விவசாயிகள் நிலத்தடி நீரை அவ்வளவு எளிதாகப் பயன்படுத்திவிட முடியாது. நதி நீர் மூலமாகக் கால்வாய்ப் பாசனம் பெறும் இந்தியாவில் அனைத்து விவசாயிகளுக்கும் நீர்ப்பாசனம் மிகக் குறைந்த விலையில் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் கிணற்றுப் பாசனத்தை உருவாக்குவதற்கு ஆகும் செலவு இதை விடப் பன்மடங்கு அதிகம் என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. பாரம்பரியமாக நதிநீர்ப் பாசனத்தைப் பயன்படுத்திவந்த விவசாயிகளிடம் நிலத்தடி நீரைப் பயன்படுத்தச் சொன்னால் அதற்கான செலவுகளை எப்படிச் சமாளிப்பார்கள்.

நிலத்தடி நீரைப் பாசனத்துக்காகப் பயன்படுத்தத் தூண்டுவது தமிழகம் போன்ற மாநிலத்துக்கு உகந்ததல்ல என்று மத்திய அரசின் நிலத்தடி நீர் வாரிய அறிக்கையின் புள்ளிவிவரங்கள் எச்சரிக்கின்றன. காவிரியில் கடந்த பல ஆண்டுகளாக நீர்வரத்து குறைந்து வருவதன் காரணமாகக் காவிரிப் பாசனம் பெறும் கரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் திருச்சிராப்பள்ளி போன்ற மாவட்டங்களில் நிலத்தடி நீர் கடுமையாக உறிஞ்சப்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.




ஆற்றில் நீர் ஓடாவிடில் நிலத்தடி நீர் எப்படிச் சுரக்கும்? உதாரணமாக, ஓர் ஆண்டுக்குப் பயன்படுத்தக்கூடிய நிலத்தடி நீரில் கரூர் மாவட்டத்தில் 97%—ம், நாகப்பட்டினத்தில் 101%—ம், தஞ்சாவூர் 102%—ம், திருவாரூரில் 79%—ம், திருச்சி மாவட்டத்தில் 81—ம்%, உறிஞ்சப்படுவதாக மத்திய அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், தமிழகத்திலுள்ள 1,139 வட்டங்களில், வெறும் 429 வட்டங்களில் (30%) தவிர, மற்ற இடங்களில் நிலத்தடி நீர் அதிகமாக உறிஞ்சப்படுவதாகவும், இதன் காரணமாக 35 வட்டங்களில் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறிவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் காவிரிப் பாசனம் பெறும் தஞ்சாவூர், நாகப்பட்டினம், மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் கடலுக்கு அருகில் உள்ள நிலையில், நிலத்தடி நீர் அதிகமாக உறிஞ்சப்பட்டால் அதில் உப்புநீர் கலந்து நீரையும் விளைநிலங்களையும் பாழ்படுத்திவிடாதா?

14.75 டி.எம்.சி. நீரைத் தமிழகம் இழப்பதால், கடைமடையிலுள்ள ஏறக்குறைய 1 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி இல்லாமல் போய்விடும். கடைமடை விவசாயிகள் காலங்காலமாக போதியளவு நீர் கிடைக்காமல் வறுமையில் சிக்கிப் பல்வேறு இன்னல்களைச் சந்தித்துவரும் வேளையில், இந்த நீர்க் குறைப்பு அவர்களின் வாழ்வாதாரத்தில் மேலும் சிக்கல்களை ஏற்படுத்தி விடாதா?

தமிழகத்துக்கு முதல் ஆதாரமாகவுள்ள வடகிழக்குப் பருவ மழை அடிக்கடிப் பொய்த்துப்போவதால், நீராதாரங்கள் சுருங்கிக்கொண்டே வருகின்றன. தமிழகத்தில் தனிநபருக்குக் கிடைக்கூடிய நீரின் அளவு பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவாக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. குடிநீர்ப் பஞ்சம் இப்பொழுதே பல மாவட்டங்களில் தலைவிரித்தாடுகிறது. அத்துடன், பயன்படுத்தக்கூடிய புதிய நீர்த்திட்டங்களுக்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாக உள்ள மாநிலம் தமிழகம் என்பது குறிப்பிடத்தக்கது. உலகெங்கும் பாரம்பரியச் சாகுபடி உரிமை உள்ளவர்களுக்கே நதிநீர்ப் பங்கீட்டில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக வரலாறு கூறுகிறது. இப்படியாக, கண்முன் உள்ள உண்மைகளை மறந்துவிட்டு, நிலத்தடி நீரைக் காரணமாகச் சொல்லி நதிநீர்ப் பங்கீடு செய்வது சரியா?

— அ. நாராயணமூர்த்தி, பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், பொருளியல் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

# iதமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**

# 99





## கோயில்களா? வணிக வளாகங்களா?

கோயில்கள் மக்களால் வழிபடப்படும் இடங்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் கலைக் கருவூலங்களாகும்.

மதுரை மாநகரின் நடுநாயகமாக அமைந்திருக்கிற மீனாட்சியம்மன் கோயிலும் அதன் சிறப்பான சிற்பக்கலை நுணுக்கம் மிகுந்த கட்டமைப்பும் உலகப்புகழ் பெற்றவை. கோயிலுக்குள் நான்கு ஆடி வீதிகளும், கோயில்களைச் சுற்றி நான்கு சித்திரை வீதிகளும், அவற்றைச் சுற்றி நான்கு ஆவணி மூல வீதிகளும், அவற்றையொட்டி நான்கு மாசி வீதிகளும் இவற்றுக்கப்பால் நான்கு வெளி வீதிகளையும் கொண்ட தாமரைப்பூ வடிவில் அமைந்த மூதூர் மதுரையாகும். இம்மலரின் மகரந்தம் போல் விளங்குவது மீனாட்சியம்மன் கோயிலாகும். மாதங்களின் பெயரால் கோயிலைச் சுற்றியிருக்கும் வீதிகளில் அந்தந்த மாதங்களில் திருவிழாக்கள் நடத்தப்பெறுவது வழக்கம். சிவபெருமான் புரிந்த ஆய திருவிளையாடல்கள் அறுபத்துநான்கும் குறிப்பிட்ட நாட்களில் கோயிலுக்குள்ளும், கோயிலுக்கு வெளியிலும் நடத்திக்காட்டப்படும். பெருந்திரளான மக்கள் இந்த விழாக்களில் பங்குபெற்று வழிபடுவார்கள்.

ஆண்டு முழுவதும் திருவிழாக்கோலம் பூண்டு நிற்கும் மதுரை நகரம் கடந்த பிப்ரவரி 3—ஆம் தேதி அதிகாலையில் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி அளித்தது. முதல்நாள் நள்ளிரவில் மீனாட்சிக் கோயிலில் மூண்டெழுந்த பெருந் தீ விபத்தே இதற்குக் காரணமாகும். கோயிலைச் சுற்றித் திரண்ட ஏராளமான பெண்கள் கதறிக்கதறி அழுத காட்சிகளை ஊடகங்களும், பத்திரிகைகளும் வெளியிட்டன. இவற்றைக்கண்ட தமிழக மக்கள் பேரதிர்ச்சி அடைந்தனர்.




மீனாட்சிக் கோயிலில் கிழக்கு இராசகோபுரத்தின் உள்பகுதியான ஆயிரங்கால் மண்டபத்தின் முன்பு உள்ள வீர வசந்தராயர் மண்டபத்தில் இருந்த கடைகளில் நள்ளிரவில் பற்றிக் கொண்ட தீ மிக உயர்ந்த அந்த மண்டபத்தின் முகட்டைத் தொடும் அளவுக்கு கொழுந்துவிட்டு எரிந்தது. இருபுறமும் நெடிதுயர்ந்த 46 தூண்களைக் கொண்ட மிகப்பெரிய மண்டபம் இதுவாகும். இரவு முழுவதிலும் எரிந்த தீ கடும் போராட்டத்திற்குப் பிறகே அணைக்கப்பட்டது. கல்லால் அமைக்கப்பட்ட மேற்கூரையில் 7,000 சதுரடி அளவுக்கு கற்கள் தகர்ந்து கீழே விழுந்தன. 20 தூண்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளன. எப்போது வேண்டுமானாலும் இம்மண்டபத்தின் பல பகுதிகள் இடிந்து விழலாம்.

கி.பி. 1611—ஆம் ஆண்டு இம்மண்டபம் கட்டுவிக்கப்பட்டது. திருமலைநாயக்கரின் தமையனாரான முத்துவீரப்ப நாயக்கர் என்பவர் இந்த வீர வசந்தராயர் மண்டபத்தைக் கட்டுவித்தார். சாமி சன்னிதிக்கு நேராக இது அமைந்துள்ளது. இதைப்போன்ற மண்டபம் அம்மன் சன்னிதியிலும் இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் கி.பி. 1708—இல் சமூகம் மீனாட்சி நாயக்கர் என்பவர் பெரிய மண்டபத்தைக் கட்டுவித்தார். இந்த இரு இம்மண்டபங்களின் தூண்களின் மேலுள்ள விட்டங்களில் பல சிறிய சிற்பங்கள் வரிசையாக அமைக்கப்பெற்றுள்ளன. வீர வசந்தராயர் மண்டபத்தில் கீழ்ப்புறமுள்ள தூண்களில் மிக அழகான பெரிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் நடுவிதானத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. எழிலுற செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றின் சிறப்பினை அனைவரும் கண்டு மகிழ்வதை அடியோடு மறைக்கும் வகையில் இந்த இரு மண்டபங்களிலும் ஏராளமான கடைகள், நெரிசலாக அமைக்கப்பட்டன.

பல ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மண்டபங்களில் இடதுபுறம் சில வளையல் மற்றும் கைவினைப் பொருட்களை விற்கும் கடைகளும், வலதுபுறம் பூமாலைகள் விற்கும் கடைகளும் மட்டுமே இருந்தன. ஆனால், 1967—ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் அறங்காவலர்களாகத் தங்கள் கட்சிகளைச் சேர்ந்தவர்களை நியமித்தபோது ஏராளமான



கடைகள் திறக்கப்பட்டன. மக்கள் நடமாடுவதற்கே திண்டாடும் வகையில் மிக நெருக்கமாக கடைகள் மிகுந்தன. இறைவன் — இறைவி ஆகியோர்களை வழிபட்டுத் தங்கள் குறைகளைப் போக்குவதற்கு பக்தர்களும், கோயிலின் கலையழகைக் கண்டு மகிழ வரும் வெளிநாட்டவரும் கண்டு முகம் சுளிக்கும் அளவுக்கு மீனாட்சிக் கோவில் வணிகமயமாக்கப்பட்டது. கோயிலின் சிற்ப அழகு மறைக்கப்பட்டது.



காந்தியடிகள் காசி விசுவநாதர் கோயிலுக்குச் சென்று வந்ததைக் குறித்து தனது சத்திய சோதனை நூலில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்...

“குறுகிய வழுக்கலான சந்து ஒன்றின் மூலம் கோயிலுக்குச் செல்லவேண்டும். அவ்விடத்தில் அமைதி என்பது அணுவளவும் இல்லை. கடைக்காரர்களும், யாத்ரீகர்களும் எழுப்பிய சத்தமும், ஏகமாய் மொய்த்த ஈக்களும் சகிக்க வொண்ணாதவையாக இருந்தன. தியானத்திற்கும், பிரார்த்தனைக்கும் ஏற்றதாய் இருக்கும் என்று எவரும் எதிர்பார்க்கக்கூடிய அவ்விடம், உண்மையில் அவ்வாறு இல்லவே இல்லை. கோவிலைச் சுற்றித் தூய்மையும், இனிமையுறும்

**பழ. நெடுமாறன்**

சாந்தமும் குடிகொண்டிருக்கச் செய்வது கோயில் பொறுப்பாளர்களின் கடமையாகும். இதற்குப் பதிலாக தந்திரசாலிகளான வியாபாரிகள், மிட்டாய்களும், புது தினுசு விளையாட்டுக் கருவிகளும் விற்றுக்கொண்டிருந்த கடைகளையே நான் அங்கு கண்டேன். கோயிலை அடைந்ததும் நுழைவு வாயிலில் அழுகி நாற்றம் எடுத்த பூக்குவியல்




எனக்கு நல்வரவு கூறிற்று. உட்புறம் சலவைக் கற்களால் போடப்பட்டிருந்த தள வரிசையில் அழகுணர்ச்சியற்ற பக்தர்கள் அக்கற்களை உடைத்து ஆங்காங்கே ரூபாய்களைப் பதித்திருந்தனர். இதன் விளைவாக தரையில் அழுக்குச் சேர்ந்து கிடந்தது.’

விசுவநாதர் கோயிலைப் பற்றி 1920—களில் காந்தியடிகள் கூறியது 98 ஆண்டுகளுக்குப் பிறகும் மீனாட்சிக் கோயில் உட்பட தமிழகத்தில் உள்ள கோயிலுக்கு அப்படியே பொருந்தும் என்பதில் ஐயமில்லை. கோயில்களைக் கூடத் தூய்மையாக வைத்துக்கொள்ள விரும்பாமல் தங்களின் தன்னலத்திற்காக அவற்றை வணிகமயமாக்கிய அறங்காவலர்களும், அதிகாரிகளும், சமூகக் கேட்டிற்குக் காரணமானார்கள். நம்முடைய முன்னோர்கள் எத்தகைய உயர்ந்த நோக்கத்திற்காக

இந்தக் கோயில்களைக் கட்டினார்களோ அந்த நோக்கத்தையே சிதைத்த குற்றத்திற்கு இவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.



மதுரை மீனாட்சிக் கோயில் ஏதோ சில ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட ஒன்றல்ல. கி.பி. 12—ஆம் நூற்றாண்டில் தொடங்கி 18—ஆம் நூற்றாண்டுவரை எழுநூறு ஆண்டு கால கட்டத்தில் பல மன்னர்களாலும், செல்வர்களாலும் பல கட்டங்களில் இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டது. கி.பி. 1168 முதல் கி.பி. 1175 வரை மதுரையை ஆண்ட சடையவர்மன் குலசேகர பாண்டியன் என்பவரே இத்திருப்பணியைத் தொடங்கியவர். 13—ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன், 14—ஆம் நூற்றாண்டில் பராக்கிரம பாண்டியன், 15—ஆம் நூற்றாண்டில் குலசேகர பாண்டியன், மாவலி வாணாதிராயர், ஆகியோரும், 16—ஆம் நூற்றாண்டில் மன்னர் கிருஷ்ண வீரப்ப நாயக்கர், தளவாய் அரியநாதர் ஆகியோரும், 17—ஆம் நூற்றாண்டில் விசுவநாத நாயக்கர், முத்துவீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், 18—ஆம் நூற்றாண்டில் சமூகம் மீனாட்சி நாயக்கர், விசயரெங்க சொக்கநாத நாயக்கர் ஆகியோரும் மேற்கண்ட நூற்றாண்டுகளில் வாழ்ந்த அரசிகள், அமைச்சர்கள், பெருஞ் செல்வர்கள் ஆகியோரும் மீனாட்சிக் கோயிலின் பல பகுதிகளைக் கட்டுவதில் பங்கெடுத்தவர்கள் கட்டியதோடு மட்டுமல்ல, அதன் நிர்வாகத்திற்கும், பாதுகாப்பிற்கும் தேவையான மானியங்களை வழங்கிவிட்டே சென்றிருக்கிறார்கள்.

கீழக் கோபுரத்திற்கு எதிரில் கீழச் சித்திரை வீதிக்கும், கீழ ஆவணி மூல வீதிக்கும் இடையில் புகழ்பெற்ற புது மண்டபத்தை மன்னர் திருமலை நாயக்கர் கட்டுவித்தார். 25 அடி உயரமுள்ள 124 தூண்கள் 4 வரிசைகளாக அமைக்கப்பெற்றுள்ளன. மண்டபத்தைச் சுற்றியிலும் திருவிழாக் காலத்தில் தண்ணீர் தேங்குவதற்கு ஏற்றவாறு சிறிய அகழிகள் கட்டப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் நடுப்பகுதியில் திருமலை நாயக்கர் உள்ளிட்ட நாயக்கர் மன்னர்களின் 11 பேர்களின் உருவச்சிலைகள் அழகுறச் செதுக்கப்பெற்றுள்ளன.




மண்டபத்தின் கிழக்கு — மேற்குப்புறத் தூண்களில் கண்ணைக் கவரும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் மீனாட்சிக் கோயில் கலை நயத்துடனும், சிற்ப ஓவிய அழகு மிளிரமிளிர ஏறத்தாழ 700 ஆண்டு காலத்தில் கட்டப்பட்டு, தமிழகத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ளது.

இக்கோயிலுக்கு வெளியில் இராய கோபுரம் அருகே உள்ள தெருவில் ஏழு கடல் என்ற பெயரில் தெப்பக்குளம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. வைகை ஆற்றிலிருந்து அதற்குத் தண்ணீர் வரும் கால்வாய் கட்டடங்களால் தூர்க்கப்பட்டுவிட்டது. காய்ந்துகிடந்த அந்தத் தெப்பக் குளத்தைக் குப்பைக் கிடங்காக நகராட்சி மாற்றியதன் விளைவாகப் பெரும் சுகாதாரக் கேடு விளைந்தது. அக்குளத்தைச் சுற்றிலும் வாழ்ந்த மக்களின் முறையீட்டின் பேரில் அந்தத் தெப்பக் குளத்தைத் தூர்த்துவிட்டு அந்த இடத்தில் வணிகவளாகம் ஒன்றைக் கட்டுவித்து கோயிலுக்குள் இருக்கும் கடைகளை அங்கு மாற்ற வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது. அவ்விதமே மூன்று மாடி உயரமுள்ள வணிக வளாகம் ஒன்று கட்டப்பட்டு 1985—ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. கோயிலில் உள்ள கடைகளை அங்கு மாற்றுவதற்குப் பதில் புதியவர் பலருக்கு அந்தக் கடைகள் வழங்கப்பட்டுவிட்டன. அப்போதே கோயிலில் உள்ள கடைகள் இடம் மாற்றம் செய்யப்பட்டிருந்தால் பிற்காலத்தில் தீ விபத்தோ, அதனால் ஏற்பட்டுள்ள பேரழிவோ நேர்ந்திருக்காது.

மீனாட்சிக் கோயிலுக்குள்ளும், புது மண்டபத்திற்குள்ளும் 450 கடைகளுக்கு மேல் உள்ளன. இங்குமட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள கோயில்கள் அனைத்திலும் இந்த நிலை உள்ளது. அவற்றை அப்புறப்படுத்தி கோயில்களின் கலை அழகினையும், அமைதியையும் மீட்டுத் தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. தீயினால் ஏற்பட்ட அழிவிலிருந்து வீர வசந்தராயர் மண்டபத்தை பழைமைக் கோலத்தில் புதுப்பிக்க வேண்டிய கடமையும் அரசைச் சார்ந்ததாகும்.

பாரம்பரியப் பெருமை மிக்கத் தமிழர்களின் சிற்பத் திறமைக்கும், கட்டட அறிவியலுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழும் தமிழ்நாட்டுக் கோயில்களின் கலையழகைக் காப்பாற்ற வேண்டியது தமிழக மக்களின் கடமையாகும்.

# வள்ளல் கலைவாணர்!
# என். எஸ். கிருஷ்ணன்




கிருஷ்ணன்–மதுரம்

# நகைச்சுவை

## கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்


நகைச்சுவை நடிகர்கள் என்பவர்கள் திரையில் சும்மா வந்துவிட்டுப்போகிறவர்கள் என்கிற எண்ணத்தை உடைத்து நொறுக்கிய திரையுலகப் போராளி என். எஸ். கிருஷ்ணன் அவர்கள். நாற்பத்தி ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களின் மூலம் மக்களை சீர்படுத்த முயன்றவர் அவர்.

அவருக்கும் காதல் பூத்தது. முதல் திருமணத்தை மறைத்துவிட்டார் கலைவாணர். பின் அதைப்பற்றி கேட்டதும் ,"அவனவன் ஆயிரம் பொய் சொல்றான் நான் ஒரு பொய் சொல்லித்தானே கல்யாணம் பண்ணினேன் !" என்றாரே பார்க்கலாம்!

திருடன் ஒருவன் வீட்டுக்கு வந்து திருட முயன்ற பொழுது மதுரம் சத்தம் போட, அவனுக்கு சோறு போட்டு "இவன் என் நாடக கம்பெனி ஆள் !"என்றவர் என்.எஸ்.கே. இட்லி கிட்லி நந்தனார் கிந்தனார் என்று நக்கல் அடிக்கும் பாணியை



நகைச்சுவை நடிகர்களுக்கு என்று தனி ட்ராக் என்பதை முதன் முதலில் தொடங்கி வைத்தவர் கலைவாணர். அதையும் தன் முதல் படத்திலேயே தானே எழுதிக்கொண்டார். அப்படம் சதி லீலாவதி. பூனா சென்ற பொழுது மதுரம் அவர்களின் நகையை விற்று பணமில்லாமல் இருந்த படக்குழுவினரின் பசியை தீர்த்த என்.எஸ்.கேவுக்கும்





அவரே துவங்கி வைத்தார்.

சீர்திருத்த கருத்துகளை படங்களில் இயல்பாக கொண்டு சேர்த்தார் அவர். தன்னுடைய நிலம் முழுவதையும் ஊர் மக்களுக்குப் பொதுவாக்கி, கூட்டு உழைப்பால் கிடைக்கும் பலனை ஊர் மக்கள் ஒற்றுமையாக பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நல்லதம்பி படத்தில் வலியுறுத்தினார். தீண்டாமை மற்றும் மதுவை எதிர்த்தும் அவர் குரல் கொடுத்தார். கிந்தனார் நாடகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி கற்க வேண்டும்

# வள்ளல்!!!

என்று குரல் கொடுத்தார். இது எதுவும் அறிவுரை போல இருக்காது என்பது தான் கலைவாணரின் முத்திரைக்கு சான்று!


என்.எஸ்.கே தான் எடுத்த படத்தில் எம்.ஆர். ராதாவை வில்லனாக போடாமல் போய் விடவே அவரைக் கொல்ல துப்பாக்கியை தயார் செய்துகொண்டிருந்த விஷயம் தெரிந்து என்.எஸ்.கே நேரிலே வந்து ,"ராதா நீ எவ்வளவு பெரிய



நடிகன்; உன்னை நான் இப்படி நடி அப்படி நடி என அதட்டி வேலை வாங்க முடியுமா?அதான் போடலை!" என்றதும் அவரிடம் துப்பாக்கியை நீட்டி தன்னைச்சுடச் சொன்னார் ராதா .

திரையுலகில் வள்ளல்தன்மையுடன் திகழ்ந்த இருவர் கலைவாணர் என்.எஸ்.கே மற்றும் எம்.ஜி.ஆர். "என்னை மனிதாபிமானி என்று யாராவது அழைத்தீர்களானால் அதற்கு முழு முதற் காரணமானவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்தான்!" என எம்.ஜி.ஆரால் புகழப்பட்ட நகைச்சுவை மேதை, கலைவாணர் என்.எஸ்.கே. இருவரது திரையுலக அறிமுகமும் 1936 ம் ஆண்டு வெளியான சதிலீலாவதி படத்தில்தான் நிகழ்ந்தது.

திரைப்படங்களில் தனக்கென ஒரு பாணியைக் கையாண்டு மக்களைச் சிரிக்கவைத்ததோடு சிந்திக்கவும் வைத்தவர் கலைவாணர். நாகர்கோவில் அடுத்த ஒழுகினசேரியில் 1908ம் ஆண்டு நவம்பர் 29—ம் தேதி பிறந்த என்.எஸ்.கிருஷ்ணன், வறுமையினால் நாடகக் கொட்டகையில் சோடா விற்கும்




பையனாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கியவர். தந்தை சுடலைமுத்துப் பிள்ளை, தாயார் இசக்கி அம்மாள். நாகர்கோவில் சுடலைமுத்துக் கிருஷ்ணன் என்பதன் சுருக்கமே என்.எஸ்.கே. சிறுவயதிலேயே நாடகங்களில் ஆர்வம் ஏற்பட்டு நடிக்கத் தொடங்கினார். சதிலீலாவதியில் அறிமுகமானாலும் முதற்படத்தை முந்திக்கொண்டு அவரது இரண்டாவது படமான மேனகா வெளிவந்தது. மேனகாவின் வெற்றி, பட்டிதொட்டி எங்கும் கலைவாணரின் நகைச்சுவையைக் கொண்டு சேர்த்தது.

முகத்தை அஷ்ட கோணலாக்கி அங்குமிங்கும் ஓடி, அடிபட்டு, உதைபட்டு, கேனைத்தனமாகச் சிரித்து, மக்களைச் சிரிக்கவைப்பதுதான் அதுவரை

தமிழ்சினிமாவில் நகைச்சுவைக் காட்சி என்பதன் வரையறையாக இருந்துவந்தது. என்.எஸ்.கிருஷ்ணன் வருகைக்குப்பின் நகைச்சுவையின் தரம் உயர்ந்தது. நகைச்சுவை என்பது வெறுமனே உடல் மொழி மட்டுமல்ல; உடல் மொழி, வார்த்தை ஜாலங்கள் இவைகளைத் தாண்டி மக்களைச் சிந்திக்கவும் வைப்பது என்பதைத் தன் ஒவ்வொரு படத்திலும் ஆணித்தரமாக முன்வைக்க ஆரம்பித்தார் கலைவாணர். மக்களிடம் அவர் புகழ் கூட ஆரம்பித்தது. நகைச்சுவை நடிகனாக மட்டுமே அவர் சினிமாவைக் கடந்துசென்றுவிடவில்ல. எந்த விஷயத்திலும் தனக்கென ஒரு பார்வையை அவர் கொண்டிருந்தார். நடிப்பு பாடல் புதிய



சிந்தனை பகுத்தறிவு என சினிமாவில் அவர் இயங்கினார். தனிப்பட்ட தன் வாழ்வில் அதிகபட்ச மனிதநேயத்தைப் பின்பற்றினார். திறமைசாலிகளைப் போற்றினார். அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தார். 40 களில் கொடிகட்டிப்பறந்த தியாகராஜ பாகவதர், பி.யு.சின்னப்பா இவர்களுடன் நகைச்சுவையில் கொடிகட்டிப்பறந்தபோதும் தனக்கென ஒரு நாடகக்குழுவையும் நடத்திவந்தார் என்.எஸ்.கே.






என்.எஸ்.கிருஷ்ணன் நாடக வருமானம் என்பது அவரது சினிமா வருமானத்தில் மிகச் சொற்பமே என்றாலும் தனது நாடகக்குழுவில் உள்ளவர்களின் நலனுக்காக அதைத் தொடர்ந்து நடத்தினார். நட்டத்தில் இயங்கும் நாடகக் குழுக்களைத் தானே ஏற்று நடத்துவது அல்லது அந்தக் குழுவின் நாடகங்களில் நடித்து அதைப் பிரபலப்படுத்துவது எனக் கலைஞர்களுக்காகவும் கலைக்காகவுமே தன் வாழ்வை அர்ப்பணித்தார் கலைவாணர். நடிகர்கள் நிறைவாக வாழ்ந்து கலைக்காகவும் கலைஞர்களுக்காவும் பாடுபடவேண்டும் என்பதை விருப்பமாகக் கொண்டிருந்தவர், தானே அதில் முதல்கலைஞனாகச் செயல்பட்டார்.

'வசந்தசேனா' படப்பிடிப்புக்காகப் புனே சென்றபோது காதல் ஏற்பட்டுக் கல்யாணத்தில் முடிந்தது டி.ஏ மதுரத்துடனான அவரது நட்பு. தமிழ்சினிமாவில் முதல் தம்பதிக்கலைஞர்களான இருவரும் இணைந்து நடித்த பல படங்கள் வெற்றிகரமாக ஓடி இவர்களுக்குப் புகழைத் தந்தன.

தோல்வியடையும் எனக் கருதப்பட்ட திரைப்படங்களைக்கூடத் தன் நகைச்சுவைக்காட்சிகளால் வெற்றி பெற வைத்தவர். அந்நாளில் பிரபல நிறுவனங்களின் படங்களில் அவரது குழுவினரின் தனிக்கதைகள் இடம்பெறும். தோல்வியடையும் படங்களைப் போட்டு அதில் கதைக்குத் தக்கபடி தனது நகைச்சுவையை இணைத்து வெளியிடச் செய்வார். படம் பெரும் வெற்றிபெறும். வெறும் நடிகராக மட்டுமன்றி இயக்கம், எடிட்டிங், திரைக்கதை, வசனம், பாடல் எழுதுவது என சினிமாவின் சகல துறையிலும் தேர்ந்தவர் கலைவாணர். அவர் நடத்திய கிந்தனார் கதாகாலட்சேபமும், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றவையும் இதற்குச் சான்று.

பழம்பெருமை பேசி தமிழர்கள்




வீணாகிவிடக்கூடாது என்ற கொள்கை கொண்ட என்.எஸ்.கே தனது திரைப்படம் ஒன்றில் அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி எப்படி இருக்கும் என நகைச்சுவையோடும் சில விஷயங்களைச் சொல்லியிருந்தார். அடுத்த பத்து ஆண்டுகளில் அது நிகழ்ந்து கலைவாணரின் தீர்க்க தரிசனத்துக்குச் சான்றாக அமைந்தது.

கலை என்பது மக்களை மகிழ்விக்க மட்டுமன்றி மக்களைச் சிந்திக்கவைத்து அதன்மூலம் சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதே என்ற கொள்கையுடைய கலைவாணர், தன் படங்களில் சுயமரியாதைக் கருத்துகளையும் பகுத்தறிவுக்கருத்துகளையும் பரப்பினார். ஒரு பெரிய இயக்கம், பல தலைவர்கள் ஒன்றுகூடிச் செய்யவேண்டிய சமூகப்பணியைத் தனி ஒருவனாகத் திரைப்படங்களில் நிகழ்த்திக்காட்டினார் அவர். சுயமரியாதைத் தலைவர்கள், திராவிட இயக்கத்தலைவர்கள், காங்கிரஸ் பேரியக்கத்தவர்கள் என அத்தனை தலைவர்களாலும் கொண்டாடப்பட்டது ஒன்றே அவரது நேர்மையான சமூகத்தொண்டுக்கு அடையாளம். 'கலைஞன் கட்சிக்கு அப்பாற்பட்டவன்' என்ற தன் கொள்கையில் இறுதிவரை உறுதியாக இருந்தார்.


திரையுலகை உலுக்கிய வழக்குகளில் பத்திரிகையாளர் லட்சுமிகாந்தன் கொலைவழக்கு முக்கியமானது. இந்த வழக்கில் அன்றைய சூப்பர்ஸ்டார் தியாகராஜ பாகவதர் பட்சிராஜா ஸ்டுடியோ அதிபர் ஸ்ரீராமுலு நாயுடு மற்றும் கலைவாணர் என்.எஸ்.கே ஆகியோர் மீது வழக்கு பதிவானது. வழக்கின் ஆரம்பத்திலேயே ஸ்ரீராமுலு நாயுடு விடுவிக்கப்பட்டார்.

ஆனால், இந்தவழக்கில் தியாகராஜ பாகவதர் மற்றும் கலைவாணர் என்.எஸ்.கே இருவரும் கைதாகினர்.வழக்கில்சென்னைசெசன்ஸ்கோர்ட்டு இருவருக்கும் ஆயுள்தண்டனை வழங்கியது. 1945 ம் ஆண்டு மே 3ந்தேதி இந்தத் தண்டனை வழங்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தில் செய்யப்பட்ட இந்த வழக்கின் மேற்முறையீட்டில் தண்டனை உறுதியானது. இதையடுத்து சென்னை மத்திய சிறையில் இருவரும் அடைக்கப்பட்டனர்.




லண்டன் பிரிவியு கவுன்சிலில் இந்த வழக்கில் மீண்டும் மேற்முறையீடு செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் இந்த வழக்கை மீண்டும் விசாரிக்கவேண்டுமென பிரிவியு கவுன்சில் உத்தரவிட்டது. வழக்கறிஞர் எத்திராஜ் இவர்களுக்காக வாதாடினார். ஒட்டுமொத்த திரையுலகம் மற்றும் பொதுமக்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய தீர்ப்பு வெளியானது. பாகவதர் மற்றும் என்.எஸ்.கே இருவரும் நிரபராதிகள் என சென்னை உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது. 2 வருடங்கள் 2 மாதங்கள 13 நாள்கள் சிறைவாசத்திற்குப்பின் கலைவாணர் விடுதலையானார்.


இந்த வழக்கிற்காக பலரும் உதவி செய்தனர். இருப்பினும் அன்றைக்கு வழக்குச் செலவு அதிகமாக இருந்தது. பிரச்னைக்கு ஒரே தீர்வாக ஒரு திரைப்படம் தயாரிப்பதென முடிவெடுத்தது கலைவாணரின் குடும்பம். 'பைத்தியக்காரன்'என்ற அந்தப் படத்தில் பலரும் ஊதியம் இன்றி கலைவாணரின் குடும்பத்துக்குச் செய்யும் கைமாறாக எண்ணிப் பணியாற்றினர். தான் பெரிதும் மதித்துவணங்குபவர்களில் ஒருவரான



கலைவாணருக்கு ஏற்பட்ட இன்னலில் தானும் பங்கெடுக்க விரும்பி படத்தில் ஒரு வேடத்தினை ஏற்று நடித்தார் எம்.ஜி.ஆர்.

ஆச்சர்யமாக படம் தயாரிக்கப்பட்டு வந்தநேரத்திலேயே கலைவாணர் விடுவிக்கப்பட்டார். இதனால் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்த மதுரத்தை இரட்டை வேடமாக்கி இன்னொரு மதுரத்துக்கு ஜோடியாகக் கலைவாணரை நடிக்கவைத்தனர். படம் பெரு வெற்றிபெற்றது. படத்தில் தன் சிறை அனுபவங்களை 'ஜெயிலிக்குப் போய் வந்த...' எனப் பாட்டாகப் பாடி மக்களை மீண்டும் மகிழ்விக்கத் தொடங்கினார் கலைவாணர். சிறைமீண்டதற்குப்பின் தனிப்பட்ட வாழ்விலும் திரையுலகிலும் கலைவாணரின் புகழ் இன்னும் பலமடங்கு உயர்ந்தது.

என்.எஸ்.கே—மதுரம் தம்பதிக்கு ஒரு பெண் குழந்தை (கலைச்செல்வி) பிறந்து நான்கே மாதங்களில் இறந்துவிட்டது. அதன் பிறகு, அவர்களுக்குக் குழந்தை இல்லை. அதனால், மதுரம் தன் தங்கை டி.ஏ.வேம்பு அம்மாளை கலைவாணருக்கு மூன்றாவது தாரமாகத் திருமணம் செய்துவைத்தார். அவர்களுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தனர்! 1957 — ம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தல் காஞ்சிபுரத்தில் அண்ணாவை எதிர்த்து நின்றவர்.ஒரு டாக்டர். அண்ணாவுக்குப் பிரசாரத்துக்கு வந்த கலைவாணர்,ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை அந்த டாக்டரை புகழ்ந்து பேசினார். 'இவ்வளவு நல்ல நீங்கள் சட்டசபைக்கு அனுப்பினால் உங்களுக்கு இங்கு வைத்தியம் பார்ப்பது யார்? இவரை உங்கள் ஊரிலேயே வைத்துக்கொள்ள வேண்டும். அதனால், டாக்டருக்கு யாரும் ஓட்டுப் போடாதீர்கள். அண்ணாவையே தேர்ந்தெடுங்கள்' என்றார். அண்ணா உட்பட அனைவரும் கைதட்டி ரசித்தனர்!




'இந்து நேசன்' பத்திரிகை ஆசிரியர் லட்சுமி காந்தன் கொலை வழக்கில், கலைவாணருக்கும் தியாகராஜ பாகவதருக்கும் மறைமுகத் தொடர்பு இருப்பதாகச் சந்தேகத்தின் பேரில் இருவரும் கைதானார்கள் லண்டன் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததில் கலைவாணர் விடுவிக்கப்பட்டார். அவர் எப்படி ரிலீஸ் ஆனார்னு தெரியுமா? கொலை நடந்த அன்று கோவையில் காருக்கு பெட்ரோல் போட்டதுக்கான ரசீது அவரிடம் இருந்தது. அதை வைத்துத்தான் அவர் விடுதலை ஆனார்!

சிறையில் இருந்து விடுதலையான என்.எஸ்.கே—வுக்கு நடந்த பாராட்டு விழாவில் தான் அவருக்கு 'கலைவாணர்' என்று பட்டம் சூட்டப்பட்டது. பட்டம் சூட்டியவர் பம்மல் கே. சம்பந்தம் முதலியார்! சிறையில் இருந்து வெளிவந்த பிறகு தியாகராஜ பாகவதர் நடித்த 'ராஜமுக்தி' படத்தில் என்.எஸ்.கே. தம்பதியரின் நகைச்சுவை இல்லை. 'என்.எஸ்.கே—பாகவதர் ஜோடி பிரிந்துவிட்டதாக' பரபரப்பாக எழுதினார்கள். அப்போது நடைபெற்ற மதுரத்தின் தம்பி திருமணத்துக்கு வந்த பாகவதர், 'எங்களை யாரும் பிரிக்க முடியாது. எம்.என்றால் மதுரம், கே.என்றால் கிருஷ்ணன், டி.என்றால் தியாகராஜ பாகவதர்.

இதுதான் எம்.கே.டி.!' என்று சொல்லி உணர்ச்சிவசப்பட்டார்!

''என்னைச் சிலர் தமிழ்நாட்டு சார்லி சாப்ளினை ஆயிரம் துண்டுகள் ஆக்கினால் கிடைக்கும் ஒரு துண்டுக்குக்கூட நான் ஈடாக மாட்டேன்!'' என்பார் என்.எஸ்.கே. தன்டைக்கமாக!




கலைவாணர் தீராத வயிற்று வலியால் மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எம்.ஜி.ஆர். வெளியூரில் இருந்ததால் அவரால் உடனே வந்து பார்க்க முடியவில்லை. என்.எஸ்.கே—வே எம்.ஜி.ஆருக்கு இப்படித் தகவல் அனுப்பினார், 'நீ என்னைக் காணவராவிட்டால், பத்திரிகைகள் உன்னைப்பற்றித் தவறாக எழுதும். நீ எனக்கு செய்த உதவியை நான் அறிவேன்.

ஒரு கட்டத்தில் கொடுத்துக் கொடுத்தே இல்லாமல் ஆகிப்போனார். அப்போது அவரிடம் வேலை செய்த ஒருவர், 'எனக்குத் திருமணம்' என்று வந்து நிற்கிறார். சுற்றும்முற்றும் பார்த்தபோது கண்ணில்பட்டது. ஒரு வெள்ளி கூஜா. அதை எடுத்துக் கொடுத்து, 'இதை விற்றுத் திருமணச் செலவுக்கு வைத்துக்கொள்' என்றார்!

'தம்பி எவரேனும் என்னிடம் உதவி கேட்டு, நான் இல்லை என்றும் கூறும் நிலை வந்தால், நான் இல்லாமல் இருக்க வேண்டும்!' என்று அடிக்கடி கூறுவார். யார் எவர் என்று கணக்குப் பார்க்காமல் வாரி வழங்கிய வள்ளல்!

தினமும் ஒரு பிச்சைக்காரன் கலைவாணர் வீட்டு வாசலில் வந்து நிற்பாராம். இவரும் பணம் கொடுப்பார். 'அவன் உங்களை ஏமாற்றுக்கிறான்' என்று வீட்டில் உள்ளவர்கல் சொல்லவே, 'அவன் ஏமாத்தி என்ன மாடி வீடா கட்டப்போறான். வயித்துக்குத்தானே சாப்பிடப்போறான். ஏமாத்திட்டுப் போகட்டுமே' என்பாராம்!

சென்னையில் 'சந்திரோதயம்' நாடகம் பெரியார் தலைமையில் நடந்தது. 'நாடகம். சினிமாவால்தான் மக்கள் பாழாகிறார்கள்!' என்று அடித்துப் பேசி அமர்ந்தார் பெரியார். அடுத்துப் பேசிய என்.எஸ்.கே.'பெரியார் சொன்னவை அனைத்தும் சரியே. நாங்கள் கொள்ளை அடிக்கிறோம். எங்களால் நன்மையைவிட கேடுகளே அதிகம்!' என்றார். அந்த நேர்மையும் துணிச்சலும் கலைவாணர் கைவண்ணம்!




## அவர் நடித்த சில திரைப்படங்கள்

'சதிலீலாவதி', 'அம்பிகாபதி', 'சந்திர காந்தா', 'மதுரை வீரன்', 'காளமேகம்', 'சிரிக்காதே', 'உத்தம புத்திரன்', 'சகுந்தலை', 'ஆர்யமாலா', 'கதம்பம்', 'மங்கம்மா சபதம்', 'ஹரிச்சந்திரா', 'ஹரிதாஸ்', 'பர்மா ராணி', 'பவளக்கொடி', 'பைத்தியக்காரன்', 'சந்திரலேகா', 'நல்லதம்பி', 'மங்கையர்க்கரசி', 'தம்பிதுரை', 'பவளக்கொடி', 'ரத்னகுமார்', 'மங்கம்மாள்', 'வனசுந்தரி', 'பணம்', 'அமரக்கவி', 'காவேரி', 'டாக்டர் சாவித்திரி', 'முதல் தேதி', 'ரங்கோன் ராதா', 'பைத்தியக்காரன்', 'ஆர்ய மாலா', 'மங்கையர்க்கரசி', 'ராஜா ராணி', 'பவளக்கொடி', 'சகுந்தலை', 'மணமகள்', 'நல்லகாலம்', 'ராஜா தேசிங்கு'.

## அவர் பாடிய சில பாடல்கள்

'ஜெயிலுக்குப்போய்வந்த','பணக்காரர்தேடுகின்ற', 'ஆசையாக பேசிப்பேசி' (பைத்தியக்காரன்), 'ஒண்ணுலேயிருந்து', 'இடுக்கண் வருங்கால்' (முதல் தேதி), 'சங்கரியே காளியம்மன்' (ரங்கோன் ராதா), 'காட்டுக்குள்ளே', 'ஒரு ஏகாலியைப்', 'ஆரவல்லியே' (ஆர்யா மாலா), 'கண்ணா கமலக் கண்ணா', 'கண்னேந்தன்' (கண்ணகி), 'இருக்கிறது பார் கீழே' (மங்கையர்க்கரசி), 'கண்ணே உன்னால்', 'சந்திர



வந்ததுண்ணு' (மணமகள்), 'சும்மா இருக்காதுங்க' (நல்லகாலம்). சேலம் அருகே தாரமங்கலம் பஞ்சாயத்தில் நடைபெற்ற அண்ணாவின் படத் திறப்பு விழாதான் கலைவாணர் கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி. அதே போல் அண்ணா கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி, கலைவாணரின் சிலை திறப்பு விழா!

கலைவாணர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த சமயம், அவர் இறந்துவிட்டதாக அடிக்கடி வதந்திகள் பரவின, 'மதுரம், நான் சாகலேன்னா இவங்க விட மாட்டாங்கபோல. இவங்க திருப்திக்காகவாவது ஒரு தரம் நான் அவசியம் சாகணும் போலிருக்கே



சூரியன்' (அம்பிகாபதி), 'தீனா..மூனா.. கானாஞ்' (பணம்), 'உன்னருளால்', 'என் சாண் உடம்பில்' (ரத்னமாலா), 'சிரிப்பு இதன் சிறப்பை' (ராஜா ராணி), 'வாதம் வம்பு பண்ண', 'காசிக்குப் போனா கருவுண்டாகுமென்ற' (டாக்டர் சாவித்திரி), 'நித்தமும் ஆனந்தமே', 'விஜய காண்டிபா வீரா', 'அன்னம் வாங்கலையோ', 'இவனாலே ஓயாதத் தொல்லை' (பவளக்கொடி), 'இன்னுக்கு காலையில', 'வெகுதூரக்கடல் தாண்டி' (சகுந்தலை), 'நல்ல பெண்மணி', 'ஆயிரத்திதொள்ளாயிரத்தி', 'சுதந்திரம்



என்றாராம்!

ஒரு கட்டத்தில் என்.எஸ்.கே—வின் உடல்நிலை மோசமானது. மருத்துவர்கள் கைவிரித்துவிட்டனர். மருந்து உண்பதை நிறுத்திவிட்டார். 1957—ம் ஆண்டு ஆகஸ்டு 30—ம் தேதி காலமானார். தமிழகத்தின் ஒவ்வொரு வீடும் துக்கத்தில் மூழ்கிய தினம் அது!

## கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் பற்றிய அரிய முத்துக்கள் பத்து.


□ நாகர்கோவில் ஒழுகினசேரி யில் பிறந்தவர். வறுமையால் 4—ம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போனார். காலையில் டென்னிஸ் பந்து பொறுக்கிப் போடும் வேலை. பகலில் மளிகைக் கடையில் பொட்டலம் மடிக்கும் வேலை. மாலையில் நாடகக் கொட்ட கையில் சோளப்பொரி, கடலை மிட்டாய், முறுக்கு விற்பனை.

□ நாடக மேடை அவரை ஈர்த்தது. மகனின் ஆர்வத்தைக் கண்ட தந்தை அந்த ஊரில் நாடகம் போட வந்த ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சேர்த்துவிட்டார். பல நாடக கம்பெனிகளில் பணியாற்றினார். நாடகத்தில் வில்லுப்பாட்டு போன்ற பல சோதனை முயற்சிகளை மேற்கொண்டவர்.

□ பல நாடகங்களை எழுதி இயக்கியுள்ளார். திரையுலகில் கொடிகட்டிப் பறந்தபோதும் நாடகம் மீதான ஈர்ப்பு குறையவில்லை. மற்றவர்களுக்கு உதவுவதற்காகவே பலமுறை நாடகம் போட்டிருக்கிறார்.

□ இவரது திரையுலக வாழ்வைத் தொடங்கிவைத்த படம் ‘சதிலீலாவதி’. ஆனால், அதன் பிறகு இவர் நடித்த ‘மேனகா’ முதலில் வெளிவந்தது. முதல் படத்திலேயே தனக்கான காட்சிகளை எழுதினார். நகைச்சுவைக்கு என்று தனி ட்ராக் எழுதிய முதல் படைப்பாளி.

□ நடிகை பத்மினி, உடுமலை நாராயண கவியை அறிமுகம் செய்தது இவர்தான். பாலையாவின் நடிப்பை பாராட்டி தன் விலை உயர்ந்த காரை பரிசளித்தார். காந்தியடிகளின் தீவிர பக்தர். அவரது நினைவைப் போற்றும் வகையில் தன் ஊரில் சொந்த செலவில் நினைவுத் தூண் எழுப்பினார்.




□ சார்லி சாப்ளினுடன் ஒப்பிட்டுப் பேசியதற்கு, ‘சாப்ளினை ஆயிரம் துண்டு போட்டாலும் அதில் ஒரு துண்டுக்குகூட நான் ஈடாக மாட்டேன்’ என்று தன்னடக்கத்துடன் கூறினார். இவரது கிந்தனார் காலட்சேபம் மிகவும் பிரபலம்.

□ தமிழ் சினிமா வரலாற்றில் நகைச்சுவையை பாடல்களாகவும் அமைக்க முடியும் என்பதை நிரூபித்தவர். சொந்தக் குரலில் பல பாடல்களைப் பாடியுள்ளார். சில படங்களை இயக்கியுள்ளார். அண்ணாவுக்காக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட இவர், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரு டாக்டரைப் பற்றி புகழ்ந்து பேசினார். கடைசியில், ‘இவ்வளவு நல்ல டாக்டரை சட்டசபைக்கு அனுப்பினால் உங்களுக்கு யார் வைத்தியம் பாப்பாங்க? அதனால் அவரை இங்கேயே வைத்துக்கொண்டு அண்ணாவுக்கு ஓட்டு போட்டு சட்டசபைக்கு அனுப்பிவையுங்கள்’ என்றார்.

□ குறுகிய காலத்தில் சுமார் 150 திரைப்படங்களில் நடித்தவர். 1947—ல் சென்னை திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகம் சார்பில் இவருக்கு ‘கலைவாணர்’ பட்டம் வழங்கப்பட்டது.

□ கலைவாணருக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஆழ்ந்த நட்பு இருந்தது. உதவி என்று கேட்டு யார் வந்தாலும் அள்ளிக் கொடுத்த வள்ளல் இவர்.

□ நகைச்சுவையில் புரட்சியை ஏற்படுத்திய இவரது நினைவாக சென்னையில் உள்ள அரசு அரங்கத்துக்கு ‘கலைவாணர் அரங்கம்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. நகைச்சுவை மூலம் மக்களின் சிந்தனையைத் தூண்டி, இன்றும் மக்களின் மனங்களில் வாழும் என்.எஸ்.கே. 49 வயதில் காலமானார்.

# அறத்தடி நீர்

கைதோண்டும் ஆழத்திலேயே கிடைத்தது நீர்
பின் அம்மாவை நின்றபடி புதைக்கும் ஆழத்திற்கு
போனது
இப்பொழுதோ
நம் மொத்தக் குடும்பத்தையும் நின்றபடி
புதைத்தாலும்
தாகத்திற்கு எட்டிவிடாத தொலைவிலிருக்கிறது

நீர்க்காகங்களோடு எங்கோ போய்விட்டார் அப்பா
நீரொழுக ஆறுகள் லாரிகளில் ஏற்றிச்
செல்லப்படுகின்றன
மீன்கொத்திகள் கூழாங்கற்களை தின்னப்
பழகிவிட்டன
நட்சத்திரங்களுக்கும் நீருக்கும் ஏதோ
தொடர்பிருக்கிறது
சூரியன் சந்தேகத்தோடு எழுந்து குழப்பத்தோடு
மறைகிறது

மனிதர்கள் வயிற்றில் ஈரத்துணியை
சுற்றிக்கொள்வதைப்போல
சுழன்று சுழன்று
கழுகுகள் ஆகாயத்தைச் சுற்றுகின்றன

கிடைத்ததையெல்லாம் உண்டு
வயிறு வீங்கிச் சாகிற கால்நடைகளிலிருந்து
தோலிசைக் கருவிகளை ஆக்கி முழக்கலாம்
நாமின்று
அத்தோடு
முதல்முறையாக நதிக்கரைப்பக்கம் வந்தபோது
நாம் நாகரிகமற்றவர்களாயிருந்தோம்
என்பதையும் நினைவுகூர்ந்து பாடலாம்

நீர் விலையேறிவிட்டது
ஏன் எதற்கென்றெல்லாம் கேட்கக் கூடாது
ஆத்திரத்தில் ஒருவன் நாக்கைப் பிடுங்கி
மேகத்தை நோக்கி வீசுகிறான்
மொத்த ஊரையும் நின்றபடி
புதைத்துக்கொண்டிருக்கிறோம்
ஒரு நீள மண்புழுவாக பூமியினாழத்தில்
நீர் தேடிப்போகிறோம்ஞ்
நீரின் கதைக்கும் இம்மக்களின்
கதைக்கும்
எம் சிறுபிள்ளையே
இந்நிலத்திற்கு மேலே நீ சாட்சியாயிரு
கண்ணீரை வீணாக்கிவிடாதே.
கரித்தாலும் குடி. உயிர்த்திரு.

நீர்க்காகங்கள்
தன் பெயரிலிருக்கும் நீரைப்
பருகுகின்றன
குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றன
வேக வேகமாகப் பறந்து
பெயர்களுக்கு முன்னிருக்கும் நீர்குறித்து
உயிர்கள் யாவிற்கும்
அவை நினைவூட்டுகின்றன.

நீர்க்காகங்கள் சொல்லின,
அப்பா மேற்கு நோக்கிப் போய்
ஒருவழியாக சூரியனை
தொட்டுவிட்டார்
நீர் விற்கப்படுவதற்கு எதிராக
பொருள்மிக்கதோர் தற்கொலையை
நிகழ்த்திவிட்டார்.
நீர்க்காகங்களுக்கு
அவற்றின் பெயர் குறித்து
சொன்னதும்கூட அவர்தான்.

வானிலிருந்து வந்து விழுகிறது ஒரு
நாக்கு
அதிலின்னும் உயிர்
துடித்துக்கொண்டிருக்கிறது
எம் சிறுபிள்ளையேஞ்
அதுதான் இக்கதையை
சொல்லிக்கொண்டிருக்கிறது
வாசித்துக்கொண்டும்.

வெய்யில்



# சாதி மறு ! சண்டையொழி !

சதையறுக்கும் பச்சைவாசம்
ஐயோ சாதிதோறும் வீசவீச,
தெருவெல்லாம் சிவப்புநாற்றம்
முட்டாள்கள் மேல்கீழாய் பேசப்பேச!

மாக்க ளூடே சாதி வேறு
மண்ணறுக்கும் சாதி வேறு
மனிதங்கொல்லும் சாதியெனில் — அதைச்
சாக்கடையில் விட்டெறிடா!

பெற்றவயிற்றில் மூண்ட நெருப்பு
வெற்று சாதிக்காய் மூண்டதுவே,
பத்துமாதம் சுமந்த நெஞ்சில் — தீண்டாமை
தகதிமிதோம் ஆடுதுவே;

ஐயகோ பூமிப் பந்தை
அற்பசாதி அறுத்திடுமோ
ஒட்டைத்தட்டில் வறுமையென்றால்
உயிர்க்கொண்டு அடைத்திடுமோ..?

வீட்டுக்குவீடு சாதிப்பேச்சு
ஊரெல்லாம் ரெண்டாப் போச்சே,
அடேய்; மனிதத்தை விற்காதே, நில்
இனி மிருகங்களே காரி உமிழும்!

மிச்சத்தை மீட்கவேனும்
மனிதர்களாய் ஒன்று கூடு,
அங்கே ஆடையற்று கூட நில்
சாதியோடு நின்று விடாதே;

சாதியை விடு..
சாதி போகட்டும் விடு..
ஓ மனிதர்களே வா'
என் மனிதர்களே வா "நான் சாதியற்றவன்"
சொல் "நான் சாதியற்றவன்"

சாதியற்ற இடத்தில்தான் நாளை
மனிதர்கள் மனிதர்களாகப் பிறக்கக் கூடும்,

மழை நிலா காற்று போல நாமும்
மனிதர்களாக பிறப்போம்;
மனிதர்களாக மட்டுமே மடிவோம்!

**வித்யாசாகர்**

# பள்ளிக்கூடம்

முதுமையில் மறதி என்னமாய்ப்
படுத்துகிறது!
நேற்று நடந்தது இன்று நினைவில்லை;
ஆனால்
'பள்ளிக்கூடம்' என்ற வார்த்தையைக்
கேட்டதுமே
மனம் குதூகலிக்கிறது, தேனுண்ட
வண்டாக!

பள்ளிக்கூடத்தை
நினைத்த மாத்திரத்தில்
ஒன்றன் மேல் ஒன்றாக
அலைஅலையாய்
மலரும் எண்ணங்கள்!
அடுக்கடுக்காய்
தோன்றும்
சிந்தனைகள்!
இக்கணம் நடந்தது
போல்
துளிக்கூட மறக்காமல்
துல்லியமான நினைவலைகள்,
முப்பது வருடங்கள்
முடிந்தோடிய பின்னரும்!




கண்களில் எதிர்காலம் குறித்த
வண்ண வண்ணக் கனவுகளை ஏந்தி
மனக்கவலை ஒரு சிறிதுமின்றி
பட்டாம் பூச்சிகள் போல்
சிறகடித்த காலமல்லவா அது!

அறியாப் பருவத்தில் மலர்கின்ற நட்பில்
ஆதாயம் தேடும் கள்ளத்தனம் இல்லை;
ஆத்மார்த்தமான அன்பு என்றதும்
பட்டென்று நினைவிற்கு வருவது
பள்ளிக்கூடத் தோழி மட்டுமே!

**கலா**



## பிரியா வசூல் வாரியார்!

## அதிரும் லவ்!



## வெல்க சிவா!

## தயாரிப்பாளர் சிவகார்த்திகேயன்!!

மலையாளத்தில் 'ஒரு அதார் லவ்' படத்திலிருந்து 'மானிக்க மலராயா பூவி' என்ற பாடல் வெளியிடப்பட்டது. இதில் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறார் ப்ரியா பிரகாஷ் வாரியர். ஃபேஸ்புக், ட்விட்டர், யூடியூப், கூகுள், இன்ஸ்டாகிராம் என இணையத்தின் சென்சேஷனாக மாறிவிட்டார். தனக்கு கிடைத்திருக்கும் எதிர்பார்ப்பு குறித்து ப்ரியா அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பது: "இப்போது நான் பெண்கள் கல்லூரியில் படிக்கிறேன். இதெல்லாம் சற்று படபடப்பைத் தருகிறது. இவ்வளவு பேர் பின்தொடரும்போது, அது பொறுப்பாக மாறுகிறது. என்னால் முடிந்த சிறந்த நடிப்பைத் தருவேன்!" என்று தெரிவித்திருக்கிறார். சமூகவலைத்தளத்தில் எழுந்துள்ள எதிர்பார்ப்பால், படத்தின் டப்பிங் உரிமையைக் கைப்பற்றுவதற்கும் கடும் போட்டி நடைபெற்று வருகிறது.




திரைத்துறையில் உயரத்தை எட்டியுள்ள நடிகர் சிவகார்த்திகேயன், தற்போது சிவகார்த்திகேயன் புரொடக்‌ஷன்ஸ் என்ற தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியுள்ளார். தனது முதல் படமாக, நண்பரும், பாடகருமான அருண்ராஜ் காமராஜ் இயக்கும் படத்தை தயாரிக்கிறார். இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள சிவகார்த்திகேயன், "திரைத்துறை தான் எனக்கு பெயரும், புகழும் அளித்தது. இந்தத் துறைக்கு நான் நிறைய கடமைப்பட்டிருக்கிறேன். சாதிக்கும் கனவில் நாங்கள் சுற்றிய போது எல்லா நிலைகளிலும் என்னுடன் இருந்த, என் நண்பர்களின் கனவையும் புரிந்து கொள்வது என் கடமையாக உணர்கிறேன்." என்று நெகிழ்கிறார்.

## தங்கமான பொண்ணு!

## தங்கக் காசு பரிசு!

நடிகையர் திலகம் சாவித்ரியின் வாழ்க்கை வரலாறு தமிழ் மற்றும் தெலுங்கில் தயாராகிறது. தமிழில் ‘நடிகையர் திலகம்‘ என்ற பெயரில் வெளியாகிறது. சாவித்ரி வேடத்தில் கீர்த்தி சுரேஷ் நடிக்க, சமந்தா பத்திரிக்கை நிருபர் வேடத்தில் நடித்துள்ளார். துல்கர் சல்மான் ஜெமினி கணேசனாக நடிக்கிறார். நாக் அஸ்வின் இயக்கும் இப்படத்தில் சாவித்ரியாக நடிக்கும் கீர்த்தி சுரேஷ், தன்னுடன் நடித்தவர்களுக்கு தங்கக் காசுகளை பரிசாக கொடுத்து அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார்!



## விசுவாசமான கூட்டணி!

## விசுவாசம் வெளிப்படட்டும்!

அஜித் நடிக்கவுள்ள ‘விசுவாசம்‘ படத்தின் முதற்கட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. முழுமையாக அனைத்து பணிகளையும் முடித்துவிட்டு, ஒரே கட்டமாக மொத்த படப்பிடிப்பையும் முடித்துவிட படக்குழு முடிவு செய்து பணிபுரிந்துவருகிறது. சிவா இயக்கத்தில் அஜித், நயன்தாரா உள்ளிட்ட பலர் நடிக்கவுள்ள இப்படத்தை சத்யஜோதி நிறுவனம் தயாரிக்கவுள்ளது. ‘விசுவாசம்‘ படத்தின் மூலம் நான்காவது முறையாக அஜித்துடன் நயன்தாரா இணைந்து நடிக்கிறார். 2018 தீபாவளிக்கு ‘விசுவாசம்‘ வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## மண்ணும் மனிதனும் சார்ந்த பதிவுகளை

### 41. நிறைவு விழா

இன்று அக்டோபர் 15 ஆம் நாள்!

'அறிவுச் செம்மல்' அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாள்!

இன்றைய தினம் மேதகு கலாம் அவர்களின் பிறந்தநாள் விழாவும், எங்களது நடைப்பயண நிறைவு விழாவும் சேர்த்து 'நல்லோர் வட்டம்' சார்பாக மாலையில் டிரஸ்ட்புரம் பள்ளியில் ஒரே விழாவாக நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்பாக 'அதிரடிச் சேவை' என்ற பெயரில் ஒரு குடையின் கீழ் சில தலைகளாக, ஒரு மரத்தின் சில கிளைகளாக சில சேவைகள் நடைபெற இருக்கிறது.

'நல்லோர் வட்டம்' அமைப்பு செயல்படுத்தவிருக்கும் இத்திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் செயல்படுத்தப்படுமானால், தொட்டதெற்கெல்லாம் அரசை நாடவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும்!.




இந்த அதிரடி சேவையில் நடத்தப்படவிருக்கும் சில சேவைகள்...

மரம் நடுவது, தெருக் கூட்டுவது, சுவர்களில் திருக்குறள் மற்றும் பொன் மொழிகளை எழுதுவது, குப்பைகள் மற்றும் கழிவுகளை அள்ளுவது, வீடுதோறும் சென்று சமூகப் பொறுப்புள்ள நபர்களைத் தேர்வு செய்வது, கண்தானம்,



இரத்த தானம், உடல் தானம், செய்பவர்களைச் சேர்ப்பது, பள்ளி மாணவ மாணவியர்களைக் கல்வியிலும் சமூக நலனிலும் ஆர்வமுள்ளவர்களாக உருவாக்குவது உள்ளிட்ட இன்னும் சில சேவைகள் இன்றைய தினம் நடைபெறவிருக்கிறது.

இதில் சிறப்பம்சம் என்னவென்றால், இதுவெல்லாம் வெறும் 3 மணி நேரத்தில் நடைபெறவிருக்கிறது.


# நினைவு...

41 கொற்றவன்

## பகிர்வுகளாய் முன்வைக்கும் பயணத் தொடர்!

7 மணி முதல் 10 மணிவரை டிரஸ்ட்புரம் பிரதான சாலையில் அமைந்திருக்கும் மாநகராட்சி பள்ளியை ஒட்டிய பகுதியில் நடைபெறவிருக்கிறது.

அக்குரலுக்கு பொருள் கூறும் திரு, பாரதிபாலு ஐயா இன்றைக்கு செயல் வடிவம் கொடுத்து அரிய செயலைச் செய்யவிருக்கிறார்.






காலை 6.50 மணிக்கு நானும் பழனிச்சாமியும் அதிரடி சேவை செய்யவிருக்கும் சமூகச் சேவையாளர்களின் அணிவகுப்பில் நின்றிந்தோம்.

சரியாக 7 மணிக்கு ஒரு விசில் சத்தம்!... அவ்வளவுதான்!...

போர்க்கால அடிப்படையில் வேலைகள் நடைபெறத் தொடங்கியது.

நானும் பழனிச்சாமியும் மரங்கள் நடும் பிரிவில் இணைந்து கொண்டோம்!

பள்ளி நுழைவாயில் அருகே குழி தோண்டி முதல் மரக்கன்றை நட்டோம். அதன் பின் பள்ளியில் பின்புறத்திலும் சில மரங்களை நடத் தொடங்கினோம்.

இப்படியொரு திட்டத்தை 'மதர் இண்டியா பவுண்டேஷன்' அமைப்பின் தலைவர் திரு. ஹரிஹர சுப்பிரமணியன் அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார். 'நல்லோர் வட்டம்' திரு. பாரதிபாலு ஐயா அவர்கள் இத்திட்டத்துக்கு செயல் வடிவம் கொடுத்து திறம்பட நடத்தவிருக்கிறார்.

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல் (664)' —என்கிறது திருக்குறள்.

‘நல்லோர் வட்டம்’ நண்பர்களோடு இப்பகுதி அன்பர்கள் சிலரும் இணைந்து கொண்டதில் மின்னல் வேகத்தில் வேலைகள் நடைபெறத் தொடங்கின.

சில மணித்துளிகள்தான் இந்த அதிரடி! நடந்ததோ வியத்தகு மாற்றங்கள்!

இப்பகுதி மக்களுக்கு மகிழ்ச்சி மட்டுமல்ல; மனமாற்றமும் ஏற்பட்டதை நேரில் காண முடிந்தது. இப்படி அடிக்கடி அதிரடிகள் நடந்தால் நலமாக இருக்கும் என்பதை அனைவரும் தங்களது கருத்தாகப் பிரதிபலித்தார்கள்! எங்கள் அனைவருக்குமே மகிழ்ச்சியாக இருந்தது!



திரு. பாரதி பாலு ஐயா இங்கே ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தார். எங்களது நடைப்பயண அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவே இந்த ஏற்பாடு!

நானும் நண்பர் பழனிச்சாமியும் எங்களது பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம். முறையாகப் பார்த்தால் நாங்கள் மூவர் கலந்துக் கொண்டிருக்க வேண்டும். நண்பர் இராஜன் ஒரு அவசர வேலையாக சென்றிருப்பதால் இந்நிகழ்ச்சியில் அவர் கலந்துக் கொள்ள இயலவில்லை!




இங்கே ராசாத்தி என்ற ஒரு மாணவி சில கேள்விகளை முன்வைத்தாள். அந்தச் சிறுமியின் கேள்வி மட்டுமல்ல, கேட்ட விதமும்கூட மிக முதிர்ச்சியானதாகவே தோன்றியது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் என்னென்ன மாற்றங்களை, மாற்றப்பட வேண்டியவற்றைப் பார்த்தீர்கள்? எல்லா மாவட்டங்கங்ளிலும் நீங்கள் ஒருமித்து கண்டவை என்ன? இப்படி வித்தியாசமான கேள்விகளை அப்பெண் அடுக்கிக் கொண்டே இருந்தாள்.

ராசாத்திக்கு கேள்விகளுக்கு ஓரளவுக்குத்தான் பதில் சொன்னேன். காரணம் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இரண்டு மூன்று நாளுக்குமேல் இப்பயணத்தில் நாங்கள் தங்கிச்செல்ல முடியவில்லை! அதனால் முழுமையாக அறிந்துக் கொள்வது என்பது இயலாததாகவே இருந்தது.

எனவே ஓரளவுக்கு நாங்கள் கண்டு வந்ததைச் சொன்னேன்!

பதிலளிக்கும் தருணத்திலேயே என் எண்ணங்கள் பின்நோக்கி ஓடி இப்பயணம் துவங்கிய முதல்நாளில் இருந்து ஒவ்வொரு நாளாக அலச ஆரம்பித்தது!

நினைவுக் குதிரையை நாம் நினைத்த இடத்தில் நிறுத்துவதும் செலுத்துவதும் எல்லோருக்கும் அவ்வளவு சாமானியப்பட்டதல்ல!

அதிரடி சேவையும் நடைப்பயண கலைந்துரையாடலும் நடந்து முடிந்ததும், மாலையில் டிரஸ்ட்புரம் பொன்மணி மாளிகையில் விழா தொடங்கியது.

எங்கள் நடைப்பயணத்தைக் கொள்ளிடக் கரையில் தலைமைத் தாங்கித் துவங்கி வைத்த குத்தம்பாக்கம் தலைவர் திரு. இளங்கோ அவர்கள்தான், இவ்விழாவுக்கும் தலைமை தாங்குகிறார். ‘அக்கினிச் சிறகுகள்’ நூலினைத் தமிழில் மொழிபெயர்த்த எழுத்தாளர் திரு. மு. சிவலிங்கம் அவர்கள் முன்னிலையில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார் நல்ல சமூகச் சிந்தனையாளரான நடிகர் திரு. விவேக் அவர்கள்.

இசையமைப்பாளர் திரு. நூர்முகமது அவர்களின் அற்புதமான இசையில், குழந்தை பாக்யாவின் நடன நிகழ்ச்சியுடன் விழா சிறப்புறத் தொடங்கியது. இசையும் நடனமும் வந்திருப்பவர்களை வாய் பிளக்கச் செய்தது! களிப்பில் நடமிடச் செய்தது!

இசையும் நடனமும் வெகுவாய் பாராட்டப்பட வேண்டியதாய் இனித்தது! வழங்கிய நூர்முகமது அவர்களையும், பாக்கியாவையும் நடனப் பயிற்றுவிப்பாளரையும் பாராட்டிவிட்டு வந்து அமர்ந்தேன்.

துணையாக இருந்த எனது அருமை நண்பர் திருச்சி செல்வம் அவர்கள் என்னருகில்தான் அமர்ந்திருந்தார் என்றாலும், அவ்வப்போது எழுந்து நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்கும் வேலையையும் கவனித்தபடியே இருந்தார். அழகுத் தமிழில் அருமையாக நிகழ்ச்சியை நெறிப்படுத்திக் கொண்டிருந்த திரு வே. அமிர்தராஜ் அவர்கள், எங்களை மேடைக்கு அழைத்தார்.

நண்பர் பழனிச்சாமிக்கும் எனக்கும் சந்தன மாலை அணிவிக்கச் செய்தும் மேதகு கலாம் அவர்களின் உருவம் தாங்கிய மரத்திலான கேடயத்தையும் பரிசளிக்கச் செய்தார் திரு. பாரதிபாலு ஐயா அவர்கள்.






நடைப்பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன்.

இந்நிகழ்வுக்குப் பிறகு எனது முதல் கவிதைத் தொகுதியான ‘சரித்திரம் அழைக்கிறது’ நூலை திரு. இளங்கோ அவர்கள் வெளியிட, ‘சக்தி தரிசனம்’ ஓவியர் திரு. ஜெ. பிரபாகர் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.

எனது நூலினைத் திறனாய்வு செய்து அற்புதமான உரை நிகழ்த்தினார் திருக்குறள் திரு.தாமோதரன் அவர்கள்! என் எழுத்தின் சிறப்பை எடுத்துரைத்த அந்தப் பெருந்தகையாளரின் பேச்சின் சிறப்பைக் கேட்டபோது, “ஓ! இப்படியா எழுதியிருக்கிறேன்?” என எனக்கே வியப்பு மேலிட்டது!

குறளைத் தன் குரலில் குழைத்தெடுத்து ஊர் தோறும் சென்று உறுமி மேளமாய் இசைப்பவரல்லவா? அவரது வாய்மொழி வழியே வெளிப்பட்டால், கண்ணாடிக் கல்லும் வைரக் கல்லென மாறிவிடும்!

இந்த நூல் அழகு வடிவம் பெறுவதற்கு உற்ற

எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? எவ்வளவு நேரம் சொல்வது?

ஒலிவாங்கி முன் நின்றேன்!

கரவொலி அதிரும் அந்த அரங்கில் என் கண்கள் சிலரைத் தேடியது!

என் தந்தையாரும், கண்ணன் சித்தப்பாவும், ராஜி மாமாவும் அக்கூட்டத்தில் கடைக்கோடி வரிசைகளில் அமர்ந்திருந்தார்கள்! அண்ணன் மோகனராஜன், அக்கா சாவித்திரி ஆகியோரும் வந்திருந்தார்கள். தங்கள் குடும்பத்தில் ஒருவன் சமூக நலன் சார்ந்து இயங்குவதை ஆனந்தமும் ஆச்சரியமும் பொங்கப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிந்தது.



நான் சுருக்கமாகவே பேசினேன். காரணம் ஏற்கெனவே நேரம் கூடிப்போயிருந்தது. நடிகர் திரு. விவேக் அவர்கள் பேச வேண்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு “எங்கள் பயண அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்ள வேண்டுமென்றால் நான் மணிக்கணக்கில், நாள் கணக்கில் பேசவேண்டும்! எனவே இப்பயணத்தில் எங்களுக்கு உற்றதுணையாக இருந்த அணைத்து நல்லுள்ளங்களுக்கும் இப்போது எங்களது நன்றியை மட்டும் முன்வைக்கிறேன்! பயண அனுபவத்தை பின்னர் விரிவாக நூல் வடிவில் தருகிறேன்” என்று நிறைவாக முடித்தேன்.



முன்னதாக, விழா துவக்கத்தில் பாரதிபாலு ஐயா அவர்கள் அற்புதமாக அறிமுகவுரையைத் தந்தார்.

எங்களுக்கான அறிமுகவுரை மட்டுமல்ல அது! சமூகச் சிந்தனை வளர்வதற்கான அறிவுரை அது என்றால் மிகையல்ல; தலைமையுரை நிகழ்த்திய தலைவர் இளங்கோ அவர்களின் உரை, இளைஞர்களைத் தட்டியெழுப்ப வல்ல தகைசால் உரை! அந்தக் கூட்டத்தில் இருக்கும் இளைஞர்களுக்கு புதுரத்தம் பாய்ச்சவல்ல உரை அது!

இப்படிப்பட்ட அரிய மனிதர்களிடம் இருந்து எழும் உள்ளக் கருத்துக்கள் உவப்பானவை! உயர்வானவை! உரம் தருபவை!

இறுதியாக, சிறப்பு விருந்தினர் திரு. விவேக் அவர்கள் தமக்கே உரிய நகைச்சுவையுடன் பேசத் தொடங்கினாலும், சமூக நலன் சார்ந்து நாம் இயங்க வேண்டுமென்பதைத் தன் வார்த்தைகளால் விவரித்தார். “இவர்கள் தண்ணீருக்காக நடந்தவர்கள் என்று மட்டும் நினைக்காதீர்கள்! மக்களுக்காக நடந்தார்கள் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது!” என்றார்.

மக்கள் மறக்கிறார்களோ இல்லையோ நாங்கள் மறந்துவிடக்கூடாது. குறிப்பாக எங்கள் பயணத்தில் எங்களோடு இணைந்திருந்த மக்களை நாங்கள் மறக்க முடியாது! மறக்க இயலாது

அவரது உரையோடு நடைப்பயண விழா இனிதே முடிந்தது!

தொடங்கிய பயணம் விழா மேடையில் முடிந்தது! ஆனால்...

முடிந்த பயணம் என் மனமேடையில் துவங்கியது! —ஆம்!

நிறைவு விழா முடிந்தது!

நினைவு விழா துவங்கியது!

( நடை தொடரும்)



# புத்தக விமர்சனம்

## நகலிசைக் கலைஞன் (அனுபவக் கட்டுரைகள்)

**விலை : ரூ. 130**

**பக்கங்கள் : 288**

**நூல் ஆசிரியர்:**

**ஜான் சுந்தர்**


**வெளியீடு:**

**காலச்சுவடு பதிப்பகம்**

**669 கே.பி.சாலை**

**நாகர் கோவில் – 629001.**



**யா**ராவது ஒரு பாட்டு பாடுங்களேன்' — இந்த வாக்கியம்தான் `நகலிசைக் கலைஞன்' புத்தகம் உருவாவதற்கு விதை. ஒரு மின்வெட்டு நேரத்தில் பாடச் சொன்னபோது முதன்முதலில் இருட்டில் பாடிய ஜான் சுந்தர், இன்றைக்கு இளைய நிலா இசைக்குழுவின் உரிமையாளர்; பாட்டுப் பட்டறை என்னும் இசைப் பள்ளியின் தாளாளர். கவிஞர். மெல்லிசைக் கச்சேரிக் கலைஞர்களின் வலிமிகுந்த அனுபவத் தொகுப்பே இந்தப் புத்தகம். பின்னணியில் எத்தனையோ சங்கீத சாகரங்கள் இருக்கிறார்கள். அந்தக் குறைந்த இடத்தில் அந்தக் கீர்த்திமிக்க கலைஞர்களின் பாத்திரங்களில் தங்களை வார்த்துக்கொள்கிறவர்கள் நகலிசைக் கலைஞர்கள் எனப்படும் மெல்லிசைக் குழு கலைஞர்கள். அதைத்தான் சொல்கிறது இந்தப் புத்தகம்.

ஜான் சுந்தர் எழுதுகிறார்“அங்கீகாரம் கிடைக்கும் வரையில் கலைஞர்களின் வாழ்வு கேலிக்கூத்தாகத்தான் இருக்கிறது. ரசனையுள்ளங்களின் உபசாரத்துக்கும் அனுசரணைக்கும் கைகளைக் குவிக்கும் எளிய கலைஞன், கிடைத்த இடத்தில் உடலைக் கிடத்தி, உசுப்பும் நொடியில் எழுந்துகொள்கிறான். தூங்கி வழியும் மொத்தச் சமூகத்தையும் தட்டி எழும்பும் பொறுப்பு கலைக்கு இருக்கிறது. கலைதான் அதைச் செய்ய முடியும். அது செய்யும்.” ஒரு மெல்லிசைக் கச்சேரி புக் செய்வது முதல், அந்தக் கச்சேரி முடிவடையும் வரைக்கும் நடக்கும் நிகழ்ச்சிகளைத் தொகுத்தால் நமது வாழ்க்கைக்கும் ஒத்துப்போகுமோ என நினைத்துப் பார்க்கிற வகையில் புத்தகத்தில் ஏராளமான இசைச் சம்பவங்கள் இருக்கின்றன. அதில் சம்பவங்களின் சுவாரஸ்யமும் வார்த்தைகளின் துல்லியத்தன்மையும் ஒரு சிறுகதையை வாசிக்கிற அனுபவத்தைத் தருகின்றன. நெஞ்சூறும் இசை அனுபவத்தைத் தந்திருக்கும் ஜான் சுந்தருக்கு வாழ்த்துகள்..!



# காபி கோப்பைக்குள் நிறையும் கடல்

கவிதா ரவிதரன்

செருப்பைக் கழற்றிப் போட்டு விட்டு வீட்டுக்குள் நுழையும்போதே டிகாக்ஷன் இறங்கும் சத்தம் துல்லியமாகக் கேட்டது. வருமா வராதா எனப் போக்குக் காட்டும் மழையின் முதல் துளிபோல் ஒரு சத்தம். மழை கிளர்த்தும் மண்வாசனையைப்போல ஃபில்டர் காபிக்கும் ஒரு வாசம் உண்டு. வீடு முழுவதும் நிறையும். அதுவும் அத்தையின் காபி, தெரு முழுவதும் வாசம் நிறைக்கும்.

இவ்வளவு சீக்கிரமாகவா அத்தையும் மாமாவும் வந்து விட்டார்கள்? கைக் கடிகாரத் தைப் பார்த்தேன். இல்லை, நான் தான் தாமதமாக வந்திருக்கிறேன். எனக்குத்தான் அலுவலகம், வேலை, விடுமுறை எல்லாம். அத்தைக்கும் மாமாவுக்கும் அதெல்லாம் இல்லை. ஆனால், பணிக்குத் தயாராகும் பரபரப்புடனும் நேர்த்தியுடனும்தான் தினமும் கிளம்புவார்கள். மாலை ஐந்து மணிபோல கிளம்பி, சங்கு முகத்துக்குச் சென்றால், திரும்புவதற்கு எப்படியும் ஏழு மணி ஆகும். அவர்கள் கிளம்புவதும் திரும்புவதும் அத்தனை அழகு. விடுமுறை நாட்களில் அதை வேடிக்கை பார்ப்பதுதான் எனது உச்சபட்ச சந்தோஷம்.

மாலை ஐந்து மணியானால் போதும். ஏதோ ரயிலைத்தவறவிட்டுவிடுவோமோ என்ற பதற்றத்தில் அத்தையின் கையைப் பிடித்துக்கொண்டு மாமா பரபரவென வெளியேறும் காட்சி, ஒரு சினிமாவைப்போல் இருக்கும். கடற்கரையில் அப்படி என்னதான் பேசுவார்கள் எனத் தெரியாது. சுமார் ஏழு மணிவாக்கில் திரும்பிவருவார்கள். அப்படி வரும்போது அதிகம் பேசிக்கொள்ள மாட்டார்கள். அத்தை மட்டும் வெடுக்கென உள்ளே நுழைந்துவிடுவார். அடம்பிடிக்கும் குழந்தையைக் கதறக்கதற வீட்டுக்கு அழைத்து வருவதுபோல் இருக்கும் அவரது உடல்மொழி. கூர்ந்து கவனித்தால், அவர் காபி போடும்போது தனக்குள் சின்னதாகப் புன்னகைத்துக்கொண்டிருப்பார். மாமா, அப்படி அல்ல. வாசலில் மணல் துகள்களை எல்லாம் தட்டி ஒருமுறைக்கு பலமுறை கால்களைக் கழுவிய பின்னரே உள்ளே வருவார். அவர் வரும்போது காபி தயாராக இருக்கும். அந்த நேரத்தில் மாமாவின் முகத்தில் அலாதியான அமைதி இருக்கும் இதைத் தாண்டி வாழ்க்கையில் வேறு எதுவும் தேவை இல்லை என்பதுபோல. அந்தப் பரிபூரணமான சாந்தத்துக்குக் காரணம் கடலா காபியா அத்தையா என எனக்குத் தெரியாது.




அத்தை கையில் வைத்த காபி, அலுவலக எரிச்சல்களை எல்லாம் ஆற்றிக்கொண்டிருந்தது. முற்றத்தில் உட்கார்ந்து மாமாவிடம் பேச்சுக்கொடுத்தேன்.

‘போரடிக்கலையா மாமா? ஒரு நாள் விடாம நாப்பது வருஷமா பீச்சுக்குப் போறீங்களே?’ என்றேன்.

‘எங்க ஒரு நாள் விடாம போயிட்டிருக்கோம் நடுவுல ஒரு மூணு மாசம் விட்டுப்போச்சு. அப்போ என்னை சென்னைக்கு டிரான்ஸ்ஃபர் போட்டான். 83—லதானேடி?’ என, உள்ளே

குரல்கொடுத்துவிட்டு, பதிலுக்குக் காத்திராமல் பேச்சைத் தொடர்ந்தார். ‘மூணு மாசம்தான். யார் யாரையோ புடிச்சு, கையில கால்ல விழுந்து, திரும்பவும் இங்கே வந்தாச்சு. அந்த மூணு மாசத்தை எப்படிச் சரிகட்டுறதுனே தெரியலை’ என்றார்.

‘ஏன், சென்னையில் பீச் இல்லையா இதைவிடப் பெருசா இருக்குமே.’

‘இருக்கு இருக்கு. பீச்சா அது? உனக்குப்



புடிச்சிருந்துச்சாம்மா அந்த பீச்?’ என மீண்டும் உள்ளே குரல்கொடுத்தார்


‘ஒருமுறை அவளைக் கெஞ்சிக் கூத்தாடி சென்னைக்குக் கூட்டிட்டு வந்துட்டேன். மூணாவது நாள் ஊருக்குப் போகணும்னு ஒரே அடம். ஜுரமே வந்துருச்சு. நான் லீவு போட்டு, கொண்டுவந்து விட்ட பிறகுதான் டிரான்ஸ்ஃபருக் கான வேலையைப் பார்க்க ஆரம்பிச்சேன்.’

அத்தை ஏதோ வேலையாக இருக்கிறார் போலிருக்கிறது. இன்று எங்களது பேச்சில் அவர் கலந்துகொள்ளவில்லை. நான் அலுவலகத்தில் இருந்து எடுத்துவந்த ஒரு பிரின்ட்அவுட்டை மாமாவிடம் நீட்டினேன். ‘இன்னிக்கு நெட்ல இந்தச் செய்தியை அனு காட்டினா மாமா. ரொம்ப உன்னதமான காதல் இல்ல? நீங்க அவசியம் படிக்கணும்னு எடுத்துட்டு வந்தேன்’ என்றேன்.

75 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாக மரணித்த ஜோடி ஒன்றைப் பற்றிய செய்தி அது. படித்துவிட்டு மாமா வெகுநேரம் பேசாமல் இருந்தார்.

‘இதை எப்படிம்மா ‘உன்னதமான காதல்’னு சொல்றே?’ என்றார் மெதுவாக. எப்போதும் கணீரெனக் ஒலிக்கும் குரல் அது. இப்போது அதில் கமறலோ அழுகையோ ஏதோ ஒன்று இருந்தது.

‘உனக்கு நான், எனக்கு ‘நீ’ங்கிறதுதான் வாழ்க்கை, உறவு எல்லாம். ஆனா, ‘உனக்கு மட்டும்தான் நான் எனக்கு மட்டும்தான் நீ’னு எப்படி இருக்க முடியும்? அந்த வாழ்க்கை கொஞ்ச நாளிலேயே சலிப்பு அடைஞ்சுடாதா லதா?’




என்னிடம் பதில் இல்லை.

‘காதல்ங்கிறது, ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டே இருக்கிறது இல்லை லதா. ஒருகட்டத்துக்கு மேல அதுதான் ரொம்ப போரடிக்கும். ரெண்டு கண்களும் சேர்ந்து ஒரே பாதையைப் பார்க்கிறது. அதில் நெருக்கம் முக்கியம் கூடவே கொஞ்சம் விலகலும். உங்க அத்தையும் நானும் பல விஷயங்களில் அனுசரிச்சுப்போயிடுவோம். ஆனா, சில விஷயங்களில் அவ ரசனை வேற என் ரசனை வேற. அந்த வேறுபாடுகளைப் பார்த்துக்கிட்டு இருந்தா, நாங்க சண்டை மட்டும்தான் போட்டுக் கிட்டு இருப்போம். அவ ரசனைக்கு ஏற்றமாதிரி ஒரு நட்பு வட்டம் இருக்கு அதே மாதிரி எனக்கும். அந்த இடைவெளி இருக்கிறதாலதான், இந்த நாப்பது வருஷம் பெரிய விஷயமாத் தெரியலை’ என்றார்.

‘ஆனா மாமா, இந்த ஜோடி ஒண்ணா சாகிற

அளவுக்குக் காதல் இருந்திருக்கே. இதை ஏன் நீங்க மறுக்கிறீங்க?'

'அவங்க காதல், 'ஒருத்தர் செத்தா இன்னொருத்தரும் சாகணும்'னு சொல்ற காதல். அது சரியா தப்பானு சொல்லத் தெரியலை. அதுல எனக்கு உடன்பாடும் இல்லை, அவ்வளவுதான். எங்க காதல், எங்கள்ல ஒருத்தர் செத்த அப்புறமும் இன்னொருத்தர்கிட்ட ஏதோ ஒரு வடிவத்தில் இருக்கணும்னு நினைக்கிறேன். இருக்கும் நிறைய வடிவங்களில் இருக்கும். இன்னொருவரும் இறக்கிற வரைக்கும் அந்தக் காதலில் திளைக்கணும். பிரபுகூட எங்க காதலின் ஏதோ ஒரு வடிவம்தானே?'

நான் சிரித்தேன்.

'அதனாலதான் அவரை, உங்கக்கூட பீச்சுக்குக் கூட்டிக்கிட்டுப் போக மாட்டேங்கிறீங்களா?'

சூழல், சட்டென இலகுவானது.

"அது வேற இது வேற லதா. நீயும் அவனும் பீச்சுக்குப் போயிட்டு வாங்க. நிச்சயமா, 'நாங்களும் கூட வர்றோம்'னு சொல்ல மாட்டோம்' என மாமா சிரிக்கவும், பிரபு வீட்டுக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

"அது சரி' என்றபடியே உரையாடலில் இணைந்தான் பிரபு.

நான் ஏற்கெனவே பல முறை கேட்டிருந்த அந்தக் கதையை மீண்டும் சொல்லத் தொடங்கினான். அவனுக்கு 15 வயது இருக்கும்போது, ஒரு நாள் பள்ளிக்கூடம் விட்டு வந்தவுடன் வேறு உடைக்கு மாறித் தயாராக இருந்திருக்கிறான்.

'எங்க கிளம்பிட்டே?' என மாமா கேட்டிருக்கிறார்.

'பீச்சுக்குதான். உங்களோட இன்னிக்கு நானும் வர்றேன்.'

மாமா, பதில் ஒன்றும் பேசாமல் பெட்ரூமுக்குச் சென்றார். வெளியே வரும்போது அவர் கையில் பணம்

அதை பிரபுவின் சட்டைப்பைக்குள் திணித்துவிட்டுச் சொன்னாராம், 'பீச் ரொம்பப் பெருசுடா கண்ணா. நீ வேற பஸ்ஸுல போ வேற இடத்துல உட்காரு. எட்டு மணிக்குள்ள வீட்டுக்கு வந்துடு என்ன? ஆயாகிட்ட நான் சொல்லிக்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்.




"அடடா, நீ இன்னும் அதை மறக்கலியா?' எனச் சொல்லிக்கொண்டே அத்தை, பிரபுவுக்குக் காபி எடுத்து வந்தார்.

மறக்கவில்லை. ஆனால், பிரபு அதை ஏற்றுக்கொண்டுவிட்டான் என்றே தோன்றியது. என் கைகளைப் பற்றிக்கொண்டே கடந்த முறை பிரபு இந்த விஷயத்தைச் சொன்னபோது, அதில் ஒரு சின்னப் பெருமிதம் இருந்தது. 'என் அப்பாவைப்போலவே நானும் இருப்பேன்' என எனக்கு சன்னதம் சொல்வதுபோல.

பிரியத்தை, 'பிரியம்' என நேரடியாகச் சொல்ல வேண்டியது இல்லையே. இப்போதும் அவன் அதைச் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. ஆனால், நான் உணர்ந்துகொண்டிருந்தேன். காபியின் மணம், மாமாவின் பேச்சு, பிரபுவின் புன்னகை. இந்த வீட்டில் காதலும் ஓர் உறுப்பினர்போல. வெகு இயல்பாக விளையாடவும் சீண்டவும் செய்துகொண்டிருக்கிறது. இன்னதென அதற்கு எந்தப் பாகுபாடும் இல்லை. எங்கள் எல்லோரிடத்திலும் ஒரு குழந்தையைப்போல அது ஆடிக்கொண்டிருந்தது. மனம், ஒரு நெகிழ் நிலையில் இருந்தது.

இந்தத் தருணத்தை நீட்டிக்க வேண்டும்.

'சொல்லுங்க மாமா, அத்தையை எப்போ பார்த்தீங்க?'

கேட்கச் சலிக்காத கேள்வி அது. மாமாவும் பதில் சொல்ல சலிப்பது இல்லை.

'இந்தக் கிராமத்திலேயே காலேஜுக்குப் போன முதல் பொண்ணு அவ. அவங்க அப்பா தைரியமா அனுப்பிவைச்சாரு' எனத் தொடங்கினார்.

அப்போதுதான் மாமாவுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைத்திருந்தது உத்தியோக நிமித்தமாக காரும். பேருந்து நிலையத்தில் இருந்து காலேஜுக்கு நடந்துபோகும் அத்தைக்குப் பின்னால் மாமாவின் காரும் ஊர்ந்துபோவதை தெருவே வேடிக்கை பார்க்குமாம். இருவரும் பேசிக்கொண்டதே இல்லை.

ஒருநாள் அத்தையின் வீட்டுக்குப் போய் பெண் கேட்டிருக்கிறார் மாமா. அத்தைக்கு, அப்பா மட்டும்தான். அவருக்கு, மாமாவின் தைரியத்தைப் பார்த்து சரியான கோபம்.

"கவர்மென்ட் உத்தியோகம்னா, கண்ணை மூடிக்கிட்டு பொண்ணைக் கொடுத்திடுவோமா? முடியாது போ" என விரட்டியிருக்கிறார்.

'நீங்க சரின்னா, நீங்க சொல்ற தேதியில கல்யாணம். இல்லைன்னா அடுத்த முகூர்த்தம். எப்படி இருந்தாலும் கல்யாணம் நடக்கும்' எனச் சொல்லிவிட்டு விறுவிறுவென வெளியேறி விட்டாலும், உடல் எல்லாம் நனைந்துவிட்டது மாமாவுக்கு.

அன்று இரவு தூங்கவே இல்லை. அடுத்து என்ன நடக்கும் என்ற பதற்றம். எல்லாவற்றுக்கும் மேல் அத்தைக்கு இதில் விருப்பம் இருக்குமா என்ற கேள்வி, அவரைக் குடைந்துகொண்டே இருந்தது. அடுத்த நாள் காலை, கல்லூரிக்குப் போக வேண்டாம் என முடிவெடுத்திருந்தார். அலுவலகத்தில் வேலையும் ஓடவில்லை. முன்மதிய பொழுதில் பியூன், அவரிடம் வந்து 'ஒரு இளம் பெண் உங்களைத் தேடி வந்திருக்காங்க' எனச் சொன்னார்.



'காலையில் ஏன் வரல?' — அத்தை, மாமாவிடம் பேசிய முதல் வார்த்தை. அட்சரம் பிசகாமல் அதே தொனியில் இப்போதும் சொல்லிக்காட்டுவார் மாமா.

'இல்ல அது வந்து' என அவர் முடிக்கும் முன்பே அத்தையே மீண்டும் பேசியிருக்கிறார்.


'அப்பா, உங்களை வரச் சொன்னாரு.'

'இப்பவேவா?' என, பார்த்துக்கொண்டிருந்த ஃபைலை மூட எத்தனிக்கும்போதே இடைமறித்திருக்கிறார்.

'அவசரம் இல்லை. வேலை எல்லாம் முடிச்சுட்டு சாயங்காலம் பதறாம வாங்க. 'கவர்மென்ட் வேலை கொஞ்சம் கெடுபிடியா இருக்கும்'னு அப்பாகிட்ட சொல்லியிருக்கேன்' என்றார்.

மாலை வருவதற்குள், நூறு முறை செத்துப் பிழைத்திருப்பார் மாமா. முதல் நாள் இருந்த வெட்டி ஜம்பத்தை எல்லாம் விட்டுவிட்டு, காரையும் தூரத்திலேயே நிறுத்தி, ஐந்து நிமிடங்கள் நடந்து, அத்தையின் வீட்டை அடைந்திருக்கிறார். பதவிசாக அவர் சேரில் உட்கார்ந்த விதத்தைப் பார்த்து, அத்தை உள்ளுக்குள் சிரித்திருக்க வேண்டும். அரை புன்னகையுடனேயே காபியைக் கொண்டுவந்து தந்தார். இப்போதும் மாறாத அதே சுவை.

பிறகு, அத்தையின் அப்பா வந்திருக்கிறார். அன்று மாமாவிடம் இருந்து வெளிப்பட்ட அதீத மரியாதையுணர்வு அவரை ஆச்சர்யப்படுத்தியிருக்க வேண்டும்.




'நான் உங்க ரெண்டு பேரு ஜாதகத்தையும் பார்த்து, நாள் குறிக்கிற வரைக்கும் வெயிட் பண்ண முடியுமா இல்லை, அடுத்த முகூர்த்தத்திலேயேதான் வெச்சுக்கணுமா?' என எடுத்தவுடன் அவர் கேட்டதும் மாமா குழம்பிவிட்டார்.

'என்னது?' என அவர் கேட்க

'உங்க கல்யாணம்தான்' எனச் சிரித்துக்கொண்டே பதில் சொல்லியிருக்கிறார். ஒரே நாளில் எப்படி இந்த மாற்றம் என மாமாவுக்குப் புரியவேயில்லை. புதிரை, அவரே விடுவித்திருக்கிறார்.

'நேத்திக்கு நீங்க போனவுடன், அரை மணி நேரம் வீடே அமைதியா இருந்துச்சு தம்பி. அப்புறம் காபியைக் கொண்டுவந்து கொடுத்து என் பொண்ணு பேச ஆரம்பிச்சா.'

இதுதான் அத்தை சொன்னது, 'உங்களுக்கு அவரைப் புடிக்கலைனு தெரியுதுப்பா. பரவாயில்லை. நீங்க யாரையாவது பாருங்க. நான் கட்டிக்கிறேன். ஆனா, அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா மட்டும்தான் நான் சாகிற வரைக்கும் சந்தோஷமா இருப்பேன். நான், உங்க பொண்ணுப்பா; விரோதி இல்லை. அப்படி ஆக்கிடாதீங்க' எனச் சொல்லிவிட்டுப் பூஜை அறைக்குள் சென்றவள்தான்.

தண்ணீர் இல்லை, சோறு இல்லை, தூக்கம் இல்லை. அடுத்த நாள் காலையில் அப்பா வந்து அழைக்கும் வரை பூஜை அறையில் இருந்து அத்தை வெளியே வரவே இல்லை.

எத்தனை முறை சொன்னாலும் இதைச் சொல்லும்போது குரல் கமறும் மாமாவுக்கு.

'சாகிற வரைக்கும் அவளைச் சந்தோஷமா வெச்சிருக்கணும்' என்றார் அத்தைக்கு எட்டாத குரலில்.

அடுத்த நாள், வழக்கம்போல அத்தையை கார் தொடர்ந்தது. வழியில் வாகை மரத்தடியில் அத்தை நின்றுவிட்டார். தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மாமா பேசினார். 'உன்னைப் பற்றி எதுவுமே தெரியாது. உனக்கு என்ன பிடிக்கும் எது செஞ்சா நீ சந்தோஷமா இருப்ப?' எனக் கேட்டிருக்கிறார்.

ஒரு நொடிகூட அத்தை யோசிக்கவில்லை. 'கடற்கரைக்குப் போகணும்' என்றிருக்கிறார்.

சின்ன வயதில், அப்பா — அம்மாவோடு போனது. வளர்ந்த பிறகு, 'பெண் குழந்தை எல்லாம் கடற்கரைக்குப் போவது உசிதம் அல்ல' என, அத்தையின் அப்பா தடுத்துவிட்டார். அன்று முழுவதும் கடற்கரையில் அத்தை ஆடித் தீர்த்தார். சொல்லும்போதெல்லாம் மாமாவுக்குக் கண்கள் நிறையும்.

'அவ்வளவு சந்தோஷம் அவ முகத்துல' என்றார்.

'கல்யாணத்துக்கு அப்புறம் 'உன்னைத் தினமும் கடற்கரைக்குக் கூட்டிக்கிட்டு வர்றேன். நீ இதே மாதிரி சந்தோஷமா இருப்பேன்னு சத்தியம் செஞ்சு கொடு' என, தலையில் அடித்து மாமா சத்தியம் வாங்கியபோதுகூட, அந்த வாக்கை இவ்வளவு தூரம் அவர் காப்பாற்றுவார் என அத்தை நினைத்திருக்க மாட்டார்.




எத்தனை முறை கேட்டாலும் கண்ணீரைத் துளிர்க்கவைக்கும் கதை அது. அத்தையின் கையைப் பிடித்து அவரது நெற்றியில் முத்தமிட வேண்டும் என நினைத்தேன். ஆனால், அத்தை கூச்சப்படுவார். மாமா தவிர, வேறு யாரிடமும் இயல்பாகப் பேசுவாரா என்றே தெரியவில்லை. பிரபுவிடம் ஓரளவுக்குப் பேசுவாராக இருக்கலாம். அத்தையைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். பாத்திரங்களை ஒழுங்குப்படுத்திக்கொண்டு இருந்தவரிடம் காரணம் இல்லாத ஒரு சின்னப் புன்னகை. சன்னமான வெளிச்சத்தையே கொண்ட சமையலறையில், அந்தப் புன்னகை கோயில் விளக்கின் ஒளியைப்போல் இருந்தது. அரூபமான இரண்டு கைகள் அந்த ஒளியைக் காப்பாற்றிக்கொண்டிருப்பது போலவும்.

மாமாவைப் பார்த்தேன். பிரபுவுடன் அவனது அலுவலகம் பற்றி ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.

அன்று அலுவலகத்தில் வழக்கத்துக்கும் அதிகமான வேலை. சென்னையில் இருந்து அதிகாரிகள் வருகிறார்கள். மீட்டிங்கில் இருந்ததால், பிரபு கால் செய்ததைக் கவனிக்கவில்லை. அரை மணி நேரத்தில் தொடர்புகொண்டபோது அவன் பதற்றத்தில் இருந்தான்.

'அப்பாவுக்கு நெஞ்சுவலி லதா. சாமி ஹாஸ்பிட்டலில் சேர்த்திருக்கோம்.'

நான் உடனடியாகக் கிளம்பிவிட்டேன். ஆட்டோவைப் பிடித்து மருத்துவமனைக்குள் நுழைவதற்குள் எல்லாமே முடிந்திருந்தன. மாமா, ரசனையும் அன்பும் நிறைந்தவர். கேரளாவிலும் சென்னையிலும் சிதறியிருந்த அவரது நட்பும் சுற்றமும் வந்த பிறகே, அடுத்தடுத்து வேலைகள் நடக்கத் தொடங்கின.

மறுநாள் மதியம்போல மாமாவை நெருப்புக்கு அள்ளிக்கொடுத்துவிட்டு, வீடு வந்து சேர்ந்தான் பிரபு. அழுகை, கொஞ்சம் அடங்கியிருந்தது. மிக வேண்டியவர்கள் தவிர, வீட்டில் யாரும் இல்லை.

காதல் கொஞ்சி விளையாடிய வீட்டில், இப்போது மயானத்தின் பேரமைதி தனது பகடைக்காய்களை உருட்டுகிறது. எனக்கு நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது. அமைதியை உடைத்து பெருங்குரலெடுத்து அழத்

தொடங்கினேன். அத்தை மெதுவாக என் தலை வருடினார். பிறகு, கைகளைப் பற்றிக்கொண்டு, 'நான் போயிட்டு வர்றேன்' என்றார். அப்போதுதான் கடிகாரம் பார்த்தேன். மணி ஐந்து.


"நான் வேணும்னா வரட்டுமா அம்மா?' என பிரபு கேட்டான்.

அத்தை வேண்டாம் என்றுதான் சொல்வார். நான் சமையலறைக்குள் நுழைந்து காபிப் பொடியை எடுத்தேன்!

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!






* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

editor@ithamil.com

# அறிவோம் தமிழர்

## கலைவாணர் ஒரு புரியாத புதிர்!

(தன் வாழ்வின் இக்கட்டான நேரங்களில் என்.எஸ்.கே வின் அறிவுரையைக்கேட்டு நடப்பது எம்.ஜி.ஆரின் வழக்கம். எம்.ஜி.ஆரின் வாழ்க்கையில் சிறப்பான குணங்களாக நாம் பேசுகிற விஷயங்களுக்குச் சொந்தக்காரர் என்.எஸ்.கே. இப்படி தன் வாழ்வின் முக்கிய பங்கு வகித்த கலைவாணர் குறித்து 1966 ம் ஆண்டு ஆனந்த விகடன், தீபாவளி மலரில் எழுதியது இது.)

ஒரு மனிதன் தனது வாழ்க்கையைத் தெரிந்தோ தெரியாமலோ இருவிதத் தன்மைகளைக் கொண்டதாக அமைத்துக் கொள்ளுகிறான்.

ஒன்று: தனக்காக. இன்னொன்று: பிறருக்காக. தனக்கு என்று அமைத்துக்கொள்ளும் வாழ்க்கையில் அவனுடைய உடல் முக்கிய குறிக்கோளாக அமைகிறது. அந்த உடலைப் பேணிக் கொள்ளும் முயற்சிகளை அவன் பலவாறு மேற்கொள்ளுகிறான். கவர்ச்சியாக அலங்காரம் செய்து கொள்வதும், விதம் விதமான உடைகளை உடுப்பதும், அணிவகைகளில் ஆர்வம் செலுத்துவதும் அவன் தனக்காகச் செய்து கொள்ளும் செயல்கள். மேலும், தனக்குப் பிடித்தமானதைத் திரட்டிக் கொள்வது, தன் மனைவியை விரும்பிக் காப்பது, தன் குழந்தைகளைப் பராமரிப்பது, தன் உற்றாரை ஆதரிப்பது, இவை எல்லாம் கூட அவன் தனக்காகத் தன் வசதிக்காகச் செய்து கொள்ளும் சில காரியங்கள்தான்.

இதேபோல் பிறருக்காக அவன் செய்கின்ற காரியங்களும் உண்டு. பிறர் என்ற இந்தச் சொல், அவனைத் தவிர மற்றவர் என்ற பொருளில் குறிப்பிடப்படவில்லை. அவனுக்கு உற்றாராக, நலம் தருவோராக, பயன்படுவோராக இருப்பவர்கள் பிறர் என்ற சொல்லால் அழைக்கப் படக்கூடியவர்கள் அல்ல; அவனைச் சேர்ந்தவர்கள் அவர்கள். அவனுடன் எந்தத் தொடர்பும் கொள்ளாமல், ஏன், அவனுக்குச் சிறிதளவும் பழக்கமே இல்லாதவர்கள்தான் இந்தப் பிறர். அத்தகையவர்களுடைய மகிழ்ச்சியைக் கண்டு திருப்தி அடைவதும், அவர்களின் நன்மைக்காகத் தன்னை, தன் பொருளை, தன் அறிவை அளிக்க முன்வருவதும் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தருவதற்காக. தனக்காக மற்றவரிடம் ஒன்றை வேண்டுவது யாசகம். பிறருக்காகப் பிறரிடம் ஒன்றை வேண்டுவது பெருந்தன்மை. முதலாவது உடலுக்காக, இரண்டாவது உள்ளத்திற்காக.




இவ்வாறு இருவகைப்பட்ட வாழ்க்கை அமைப்புக்களையும் கலைவாணர் நன்றாக அறிந்தவர். அறிந்தே அவற்றைத் தன் புகழ் வந்ததனால் அவர் அதிலே செருக்குக் கொண்டது கிடையாது. அந்தப் புகழ் எத்தகையது; அதன் ஆக்கிரமிப்பால் விளையக்கூடிய முடிவுகள் என்ன என்பதை முற்றும் உணர்ந்தவர். புகழ் மிகுதியின் அடித்தளத்தில் அவரது அறிவும் பண்புமே அவரை நேர் வழியில் இயக்கிக்கொண்டிருந்தன. வந்து குவிகின்ற புகழ் வராமல் போனாலும் ஏமாற்றத்தால் துன்பப்பட்டுத் தவிக்கின்ற பலவீனமான நிலைமை அவரிடம் இருக்கவே இல்லை.

மகாத்மா காந்தியை உண்மையிலேயே மதித்தவர் அவர். கதரும் கட்டுவார். ஆனால், காங்கிரஸ்காரர் அல்ல. அறிஞர் அண்ணா அவர்களைத் தலைசிறந்த தீர்க்க தரிசியாக, மக்கள் நலத்தின் வழி காட்டியாகப் போற்றியவர் அவர்; ஆனால் தி.மு.கழக உறுப்பினர் அல்ல.

பெரியார் ராமசாமி நாயக்கர் அவர்களை அரசியல் வழிகாட்டியாகக் கருதினார். ஆனால், திராவிடக் கழகத்தில் அங்கத்தினர் அல்ல.மக்களால் போற்றப்பட்ட அவர், மக்களிடம் காணும் குறைகளை எடுத்துக் காட்டத் தயங்குவதில்லை. தங்கள் குறைகளை இடித்துக் கூறுகிறாரே என்று யாரும் கலைவாணரைக் குறை கூறுவதில்லை. அதற்கு மாறாக போற்றவே செய்வார்கள். சக நடிகர்களிடம் கூட குறைகண்டால் எடுத்துக் கூறித் திருத்துவார். ஆனால், அவர்களால் போற்றி, மாலைகளே சூட்டப்படுவார்.

இப்படி எல்லோரும் போற்றும் ஓர் அதிசயச் சக்தியாகத் திகழ்ந்த அவர் ஒரு புரியாத புதிர் என்று


# பெருமை

## எம்.ஜி.ஆர்.

நான் சொல்லும்போது, உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். கலைவாணரைப் பற்றி எல்லாம் புரிந்ததுதானே, புரியாத ஒரு புதிராக அவர் இருந்தது எப்படி என்று கேட்கவும் செய்யலாம். கலைவாணருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்து வைத்துக்கொண்டு பார்த்தால்தான் நான் சொல்லும் உண்மையை விளக்க முடியும். இங்கே சில அனுபவங்களை, எக்காலத்திலும் மறக்க முடியாத சில நிகழ்ச்சிகளை உங்கள் முன் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாய மச்சேந்திரா படத்தில் நடிப்பதற்காக நாங்கள் எல்லோரும் கல்கத்தாவில் தங்கியிருந்தோம். டைரக்டர் ராஜா சந்திரசேகர் அவர்கள்தான், பட கம்பெனிச் சொந்தக் காரரான பி.எல்.கேம்கா அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் பாலமாக இருந்தார். பணம் வேண்டுமென்றாலும், வேறு எது வேண்டும் என்றாலும் அவர் மூலமாகத்தான் நாங்கள் பெறுவோம். பாடல்களை கிராமபோன் ரெக்கார்டிங்கில் பதிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. கலைவாணர், பின்னணி இசைக் கலைஞர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள், அந்தப் பாட்டுப்பதிவுக்காக ஏதும் ஒரு தொகை தங்களுக்குத் தரப்படவேண்டும் என்று கேட்டார்கள். முதலாளி மறுத்துவிட்டார் என்று டைரக்டர் கூறினார்.

பாடல் பதிவுக்கு எந்த நாள் குறிக்கப்பட்டதோ அதற்கு முதல் நாள் வரை, பேச்சு நடந்தது. அதற்குப் பயனில்லாமல் போகவே, மறுநாள் அந்தப் பணியில் கலந்து கொள்ள முடியாது என்று கூறி விட்டார்கள்.






மறுநாள் விடியற் காலையிலேயே எல்லாரும் எழுந்தார்கள். எழுந்தார்கள் அல்ல; எழுப்பப் பட்டார்கள். வேறு யாராலும் அல்ல, கலைவாணரால் தான்.என்ன? என்று கேட்டார்கள்.

இன்னைக்கு ரெக்கார்டிங் இல்லே? போக வேண்டாமோ? என்றார் கலைவாணர். யாருக்குமே ஒன்றும் புரியவில்லை. நீங்களும் தானே சம்மதித்தீர்கள்! பணம் வாங்காமல் யாருமே வேலை செய்ய மாட்டோம் என்று அவர்களிடம் சொன்னீர்களே! ஏன் இப்போது போகச் சொல்லுகிறீர்கள்? பணம்தான் தரவில்லையே! போனால் அவமானம் இல்லையா? டைரக்டர் கேலிபண்ண மாட்டாரா? என்று எல்லோரும் கலைவாணரைப் பார்த்துக் கேட்டார்கள்.

அப்போது கலைவாணர் சொன்ன பதில் இதுதான்;

‘நம்மை யார் கேலி பண்ணப் போறாங்க! ராஜா சந்திரசேகர்தானே! அவர் நம்ம ஆளுதானே! ஆனால் முதலாளி யாரு தெரியுமா? கல்கத்தாக்காரர்! நம்மைப் பற்றி அவருக்கு என்ன தெரியும்? தமிழ் நாட்டிலிருந்து வரும் கலைஞர்கள், நடிகர்கள் அவர்களுக்கு ஒரு யூனிடி கிடையாது; ஒற்றுமை கிடையாது; கட்டுப்பாடு கிடையாது. தமிழ்நாட்டு ஆளுங்க எல்லோருமே இப்படித்தான் இருப்பாங்க என்று எண்ணி இழிவாகப் பேசினா, அந்தக் கறையை எப்படித் துடைக்க முடியும்? முதலில் நாம் செய்ய வேண்டியதைச் செய்துவிடுவோம், அப்புறம் போராடி நம்ம உரிமையைக் கேட்டுக் கொள்வோம். அதன் பிறகு எல்லோரும் பாடல் பதிவில் கலந்துகொண்டார்கள். நானும் கூடப் போனேன். நான் பாடப் போனேனா என்று கேட்டு விடாதீர்கள்!



ராஜா சந்திரசேகர் கொஞ்சம் தாமதமாக வந்தார். கலைவாணரைப் பார்த்தவுடனே அவருடைய கண்கள் தெரிவித்த நன்றி இருக்கிறதே, அதை எந்த வார்த்தையாலும் விவரிக்க முடியாது. எது எப்படி இருந்தாலும் பாட்டுப் பதிவில் கலந்துக் கொள்ளமுடியாது என்று சொல்லி, கலைவாணருடைய கருத்துப்படி போய்க் கலந்துக் கொண்டார்களே, அவர்களுக்கும், எனக்கும் கலைவாணர் ஒரு புரியாத புதிராகத் தோன்றினார். ஏன் முதலில் போராட்டத்தில் கலந்து கொண்டார்! மற்றவரையும் போராடும்படி சொன்னாரே! ஆனால், பின்பு ஏன் திடீரென்று பாடல் பதிவில் கலந்து கொள்ள வற்புறுத்தினார்?

அன்று யாருக்குமே புரியாத ஒரு புதிர்தான் அது. சிலர் இப்படியும் சொன்னார்கள் மறைவாக; கலைவாணர், தான் நல்ல பேர்வாங்கிக் கொள்வதற்காக நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டார் என்று. ஆனால் சில நாள்களுக்குப் பிறகு, அந்தப் பாடல் பதிவில் கலந்து கொண்டவர்களுக்கு ஏதோ ஒரு பணம் வந்து சேர்ந்தபிறகுதான், அவர் தனக்காக அப்படிச் செய்யவில்லை; மற்றவர்களுக்காகவும் தான் செய்தார் என்பதைப் புரிந்துகொண்டார்கள். இவர்தான் கலைவாணர்.




நியாயம் என்று தனக்குத் தெரிந்த எதையும் வெளியில் சொல்லாமலே அதற்காகப் போராடாமலே அவரால் இருக்க முடியாது; இருக்கவும் மாட்டார். இதுதான் கலைவாணரின் உள்ளம். ஆனால், ஒரு செயல் நிகழும்போது அவரைப் பற்றி ஒரு புதிராகத்தான் நினைப்பார்கள். முடிவுக்குப் பிறகுதான் உண்மை விளங்கும்.

லட்சுமணதாஸ் என்ற சிறப்புப் பெற்ற கதையாசிரியர் (உரையாடல் ஆசிரியர், பாடலாசிரியர்) கலைவாணரை என்னடா கிருஷ்ணா என்று தான் அழைப்பார், எல்லோருக்கும் கலைவாணரை அவர் டா போட்டு அழைப்பதும் அதைப் பற்றிக் கலைவாணர் சிறிதும் பொருட்படுத்தாமல் சகஜகமாகப் பழகுவதும் வியப்பாக மட்டுமல்ல, வேதனையாகவும் கூட இருந்தன. சிலருக்கு அளவுக்கடங்காத கோபம் கூட உண்டாயிற்று. அவர் எப்படிக் கலைவாணரை ஏக வசனத்தில் அழைக்கலாம்? இதுவே அவர்களின் சினத்திற்குக் காரணம்.

ஒரு நாள் சிலர் லட்சுமணதாஸ் அவர்களைத் தனியாக அழைத்து இழிவாகப் பேசி பயமுறுத்தவும் செய்தனர். மறுநாள் கலைவாணர் எல்லோருடனும் சாப்பிடுகையில் கவி லட்சுமணதாஸைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு மற்றவர்களிடம், “லட்சுமணதாஸ் யார் தெரியுமா? ஓர் ஊரில் ஒரு சமயம் காண்ட்ராக்டர் எங்களுடைய பல நாடகங்கள் நடந்து முடிச்சதுக்கப்புறம் எங்களை விடுவதாக இல்லை. கையில் காசு இல்லாமல் ஊர் திரும்ப முடியாது. அப்போ லட்சுமணதாஸ் என்ன செய்தார் தெரியுமா? அந்தக் காண்ட்ராக்ட்ரோட போராடிப் பணத்தை வசூல் பண்ணி, நாங்கள் எல்லோரும் ஒழுங்கா ஊர் திரும்ப வழி செய்தார்.

அப்போது நான் இப்போ மாதிரி பெரிய ஆர்ட்டிஸ்ட் இல்லே! சாதாரண நடிகன்தான். அப்பவே அவர் பெரிய கவிஞர். அவர் என்னைப்

பெரிய மரியாதையோட பேசணுமின்னு நான் எதிர்பார்க்க முடியுமோ? 'என்னடா கிருஷ்ணா?'ன்னு அவர் கூப்பிடாம வேறுயாரு கூப்பிடறது?" என்றார். எல்லோருக்கும் அந்த விளக்கத்தின் மூலம் புரியாதிருந்த புதிர் புரிந்தது. இதில் ஒரு புதிய விளைவு என்ன வென்றால், கவி லட்சுமணதாஸ் அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கலைவாணரை என்னப்பா! வாப்பா! என்று முறையை மாற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்.

தஞ்சையில் புயல் விபத்து நேரிட்டது அல்லவா? அதைப் பற்றி அவசரமாகக் கலைவாணரிடம் பேசச் சென்றேன். அவரிடம் புயல் விபத்து பற்றியும், அதனால் ஏற்பட்ட சேதங்கள் பற்றியும், ஏழை மக்கள் படும் அல்லல் பற்றியும் நான் பேசியபோது அவர் கண்ணீர் விட்டார். அப்போது தாங்க முடியாத துயரத்தோடு அவர் சொன்னார்; இந்நேரம் அரிசி மூட்டைகள் வாங்கிக் கொடுத்திருக்கணுமே? துளித்து விட்டது. அவருடைய கண்ணீரின் காரணம் என்ன என்பதை அறிந்த பிறகு யாரால்தான் கண்ணீர் விடாமல் இருக்க முடியும்!

அவர் தன் வாழ்வுக்காகவா கண்ணீர் சிந்தினார்? தன் புகழுக்காவா கண்ணீர் விட்டார்! இல்லையே! தன் நாட்டு மக்களில் பலர் அவதிப்படுகிற நிலையையும், அந்தத் துன்பத்திலிருந்து அவர்களை மீட்டுக் காக்கும் பணியை உடனடியாகத் தன்னால் செய்ய முடியாத சூழ்நிலையையும் பற்றி நினைத்தல்லவா கண்ணீர் சிந்தினார்!

கலைவாணர் தனக்காகக் கண்ணீர் விட்டதாக எந்த ஒரு நிகழ்ச்சியையும் சொல்ல முடியாது. அவர் அனுபவிக்காத உலக வாழ்க்கை கிடையாது. அவர் வைரம் பூண்டிருந்தார். ஆனால், அது நிரந்தரமானது என்று நினைத்ததில்லை. அதுதான் தன்னை உயர்த்துகிறது என்று நம்பியதும் இல்லை. யாரையோ திருப்திப்படுத்தவே அவர் அதை அணிந்தார்.

கொள்கையைச் சொல்வதிலும், மற்றவர்களுக்குக் கொடுப்பதிலும் அவர் கொண்டிருந்த ஆர்வம் கடலிலும் பெரியது; மலையிலும் உயர்ந்தது. அவர் தனக்காக எதையும் செய்யவில்லை; பிறருக்காகவே செய்தார். அவர் முன்னேறியது அவரது உழைப்பால் அவருக்கு இருந்த நம்பிக்கையால். பிறருடைய சக்தியை வைத்துக்கொண்டோ பாதுகாப்பிலோ முன்னேறவில்லை. அவருக்குப் பல கலைகளும் தெரியும். பாட்டு எழுதித் தருபவர் பாட்டை எழுதித் தராவிட்டால் அவரே பாட்டெழுதி விடுவார். ஆனால், பாடல் எழுதுபவருக்குச் செய்ய வேண்டிய உதவியைச் செய்யாமல் இருந்து விடமாட்டார். இதுபோல் அவரிடம் வந்து சேர்வோர் அனைவருமே அவருடைய ஆற்றலைச் சிறிது நேரத்திற்குள் தெரிந்துகொண்டு விடுவார்கள். ஆனால், அந்த அடித்தளத்தில் எத்தகைய புரட்சிப் பண்பு படிந்திருக்கிறது என்பதை நடக்க நடக்கத்தான் புரிந்துகொள்வார்கள்.

கலைவாணர் அவருடைய கடைசி காலகட்டத்தில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருந்தாரே, அப்போது ஒரு நிகழ்ச்சி. அவரைக் காண அங்கு சென்றவர்களில் குறிப்பிட்ட பலரிடமும் ராமச்சந்திரனைப் பார்க்கணும்; அவனை வரச்சொல்லுங்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார். மதுரம் அம்மையார் அவர்களும் போன் வழியாக எனக்குத் தகவல் கொடுத்தார். யாரும் அவரைப் பார்த்துத் தொந்தரவு செய்யக் கூடாது என்று டாக்டர் அட்வைஸ் செய்திருப்பதாக அறிந்ததால், நான் நேரில் போய்ச் சந்திக்கத் தாமதித்தேன். ஆனால் உடனடியாக நேரில் போய்க் கலைவாணரைப் பார்க்கவில்லையே தவிர, அவருடைய நலத்திற்கான ஆர்வமும் எல்லாவிதத் தொடர்பும் கொண்டிருந்தேன். பிறகு இரண்டொரு நாள்களிலேயே நேரில் பார்க்கச் சென்றேன்.




அவர் என்னைப் பார்த்ததும், "ராமச்சந்திரா, நான் எதுக்காகக் கூப்பிட்டனுப்பினேன் தெரியுமா? பல பேர் வராங்க. வந்து பார்த்துட்டுப் போறாங்க. பத்திரிகைக்காரங்க, அவர் வந்து பார்த்தார். இவர் போய்ப் பார்த்தார் என்று செய்தி வெளியிடறாங்க. நீ மட்டும் வந்து பார்த்ததாகச் செய்தி வர்றதில்லை. அதனால் நீ வந்து பார்க்கலைங்கற செய்திதான் வெளியே தெரியும். எனக்காக நீ செய்து வருகிற காரியங்கள் எல்லாம் யாருக்கும் தெரியாது. நீ வரலைன்னா மக்கள் தவறாக நினைப்பாங்க. அந்தக் கெட்ட பேர் உனக்கு வேண்டாம்தான் உன்னை வரச்சொன்னேன்." என்றார்.

என்னை வற்புறுத்தி அழைத்ததன் காரணம் இதுதான் என்பது எனக்கு மட்டுமல்ல; யாருக்குத்தான் இந்த வகையில் புரிந்திருக்க முடியும்? அவர் தனக்காவா என்னை அழைத்தார்? எனக்காக அல்லவா என்னை அழைத்திருக்கிறார்! அந்தப் புரியாத புதிரைப் பற்றி என்ன சொல்வது! எப்பேர்ப்பட்ட ஒரு மாபெரும் பண்பு அவரது அந்த அழைப்பில் வெளிப்பட்டது!

அப்படிப் புரியாத புதிராக இருந்த காரணத்தால்தான் என்றென்றும், வரலாறு உள்ள வரைக்கும் நிலைத்து விளங்கும் தகுதி அவரிடம் நிறைந்திருக்க முடிந்தது!




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# விடுதலை 17

வியர்க்க விறுவிறுக்க மூச்சுவாங்கிக் கொண்டு வந்த சத்ருக்னனின் முகத்தை மூவிரண்டு கண்கள் இமையையும் அசைக்காமல் ஆவலுடன் உற்று நோக்கின.

ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கு ஒரு கணநேரம் கூட கொடுக்காமல், "சத்ருக்னா! யாருக்கு என்ன செய்தி கொண்டு வந்தாய்?" என்று தேவி கேட்டாள்.




"தாயே! இங்குள்ள மூன்று பேருக்கும் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறி மூவருக்கும் வணக்கம் செலுத்தினான் சத்ருக்னன்.

பின்னர், "தேவி! மகேந்திர பல்லவரின் முதல் செய்தி தங்களுக்குத்தான்! வீர பத்தினி என்னும் பெயருக்கு இதுகாறும் தாங்கள் உரிமை பெற்றது போல் வீரத்தாய் என்னும் பெயருக்கும் உரிமை பெற வேண்டிய காலம் இப்போது வந்து விட்டது என்று தங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னார். எட்டு மாதங்களுக்கு முன்பு அகமும் முகமும் மலர்ந்து பதியைப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தது போல் இன்று தங்களுடைய அருமைப் புதல்வரை அனுப்பி வைக்க வேண்டிய காலம் வந்து விட்டதாகத் தெரிவிக்கச் சொன்னார்!" என்றான் சத்ருக்னன்.




விவரிக்க முடியாத உணர்ச்சி வெள்ளம் உள்ளத்தில் பொங்க, தோள்கள் பூரித்து வீங்க, தேகமெல்லாம் சிலிர்க்க, மாமல்ல நரசிம்மர் அன்னையின் அருகில் பாய்ந்து சென்று அவளுடைய பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டார்.

"அம்மா! சக்கரவர்த்தியின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள் அல்லவா? அவர் எனக்கு அளித்த விடுதலையை நீங்களும் மனமுவந்து அளிப்பீர்கள் அல்லவா?" என்று கேட்டார் மாமல்லர்.

"பொறு, குழந்தாய்! செய்தியை முழுதும் கேட்போம்!" என்றாள் தேவி.

மாமல்லர் உடனே திரும்பி, "சத்ருக்னா! எனக்கு என்ன செய்தி கொண்டுவந்தாய்?" என்று கேட்டார்.

"நல்ல செய்திதான், பிரபு! தங்கள் மனத்திற்கு உகந்த செய்திதான். நன்றிகொன்ற பாதகனாக கங்கநாட்டு மன்னன் துர்விநீதன் சளுக்கப் புலிகேசிக்கு முன்னால் காஞ்சியை அடைந்து விட வேண்டுமென்ற துராசையினால் விரைந்து வந்து கொண்டிருக்கிறான். பல்லவ குலத்துக்குக் கங்கர் குலம் பட்டிருக்கும் நன்றிக் கடனையெல்லாம் மறந்துவிட்டு இந்தப் படுதுரோகமான காரியத்தில் அவன் இறங்கியிருக்கிறான். அந்தத் துர்விநீதனுக்குத் தக்க தண்டனையளிக்கும் பொறுப்பைத் தங்களுக்குச் சக்கரவர்த்தி அளித்திருக்கிறார். கழுக்குன்றத்திலுள்ள படையுடன் தாங்கள் புறப்பட்டுச் சென்று, துர்விநீதன் காஞ்சியை அணுகுவதற்கு முன்னால் அவனை முறியடிக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பி இருக்கிறார்!"

மாமல்லர் ஆவேசம் வந்தவரைப் போல் சத்ருக்னனிடம் ஓடிச் சென்று அவனைத் தழுவிக்கொண்டு, "சத்ருக்னா! இவையெல்லாம் உண்மைதானே? நான் கனவு காணவில்லையே? நிஜமாகத்தானே சக்கரவர்த்தி என்னைக் கங்க நாட்டுப் படையுடன் போராடுவதற்குப் போகச்




சொல்லியிருக்கிறார்?" என்று பரபரப்புடன் கேட்டார்.


"ஆம், பிரபு! இதெல்லாம் கனவல்ல, உண்மைதான். இதோ 'விடைவேல் விடுகு'ம் கொடுத்தனுப்பியிருக்கிறார்!" என்று சத்ருக்னன் ஓலை ஒன்றை அவரிடம் எடுத்துக் கொடுத்தான்.

பல்லவ குலத்தின் சின்னங்களாகிய விடை (ரிஷபம்)யும் வேலும் பொறித்த அந்த ஓலையை மாமல்லர் படிக்கும்போது அவர் முகத்தில் உற்சாகம் பொங்கிற்று. படித்து முடிக்கும் சமயத்தில் அவருடைய புருவங்கள் சிறிது நெறிந்தன.

நிமிர்ந்து பார்த்து, "சத்ருக்கனா! உன்னிடம் ஏதோ வாய்மொழியாகச் செய்தி னுப்பியிருப்பதாகச் சக்கர வர்த்தி எழுதியிருக்கிறாரே, அது என்ன?" என்று கேட்டார்.

"ஆம், பிரபு! எத்தனையோ சாம்ராஜ்யக் கவலைகளுக்கிடையே பல்லவ நாட்டின் கலைச் செல்வத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் சக்கரவர்த்தியால் மறக்க முடியவில்லை. ஆயனச் சிற்பியாரும் அவர் மகளும் காஞ்சிக்கு வந்துவிட்டார்களா என்று என்னைக் கேட்டார். 'இல்லை' என்று நான் தெரிவித்தேன். தாங்கள் போர்க்களத்துக்குக் கிளம்புவதற்கு முன்னால் நேரில் ஆயனர் வீட்டுக்குச் சென்று அவர்களைக் காஞ்சிக்கு அனுப்பிவிட்டுப் போகவேண்டும் என்று தெரிவிக்கச் சொன்னார்."

மாமல்லரின் மகிழ்ச்சி பூரணமாயிற்று. யுத்தத்துக்குப் போவதற்கு முன்னால் சிவகாமியைப் பார்த்து விடை பெற்றுக்கொண்டு போக அவர் விரும்பினார். இப்போது தயக்கமின்றி ஆயனர்



வீட்டுக்குப் போகச் சௌகரியம் ஏற்பட்டுவிட்டது. சிவகாமியின் விஷயத்தில் தம் மனநிலையை அறிந்துதான் சக்கரவர்த்தி அவ்விதம் செய்தியனுப்பியிருப்பாரோ என்று ஒரு கணம் அவருக்குத் தோன்றியது. ஆனால், அவருக்குத் தன் மனநிலை எப்படித் தெரிந்திருக்க முடியும்? ஆ! தம் அருமைத் தோழர் பரஞ்சோதிதான் சொல்லி அனுப்பியிருக்க வேண்டும். இந்த எண்ணத்தினால் பரஞ்சோதியின்மேல் அவருக்கிருந்த சிநேக உணர்ச்சி பன்மடங்கு பெருக, அருகேயிருந்த அவருடைய கரத்தைப் பற்றித் தம் நன்றியைத் தெரிவிப்பதற்கு அறிகுறியாக அழுத்திப் பிடித்தார்.

பரஞ்சோதியோ, மனக்குழப்பத்துடன் சத்ருக்னனைப் பார்த்து "ஐயா! எனக்கும் ஏதோ செய்தி இருப்பதாகச் சொன்னீரே! அது என்ன?" என்று கேட்டார்.

"லக்ஷ்மணன் இராமனைப் பின் தொடர்ந்தது போல் மாமல்லரைத் தொடர்ந்து உங்களைப் போகும்படி சொன்னார். காஞ்சிக்குச் சக்கரவர்த்தியே சீக்கிரத்தில் வந்து கோட்டைப் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்வதாகச் சொன்னார்."

"ஆஹா என் அருமைத் தோழரும் என்னுடன் வருகிறாரா?" என்று மாமல்லர் மேலும் பொங்கிய மகிழ்ச்சியுடன் பரஞ்சோதியைத் தழுவிக்கொண்டார். பிறகு, அன்னையை நெருங்கி அவருடைய பாதங்களில் நமஸ்கரித்து, "அம்மா! விடை கொடுங்கள்" என்றார்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி கண்களில் அப்போது கண்ணீர் துளித்தது. "குழந்தாய்! வெற்றிமாலை சூடி க்ஷேமமாய்த் திரும்பி வா!" என்றார்.

மாமல்லர் எழுந்து நின்றார், ஏதோ சொல்ல எண்ணியவர் சிறிது தயங்கினார். "மாமல்லா! இன்னும் ஏதாவது சொல்ல வேணுமா?" என்று தேவி கேட்டார்.

"ஆம், அம்மா! ஆயனரையும் சிவகாமியையும் பற்றித் தந்தை சொல்லியனுப்பியதைக் கேட்டீர்களல்லவா?"

"கேட்டேன், நரசிம்மா! அதைப்பற்றி என்ன?"

"அவர்களைக் காஞ்சிக்கு அனுப்பிவிட்டு நான் போர்க்களம் போகிறேன், அம்மா."




"அப்படியே செய், குழந்தாய்!"

"சிவகாமி இங்கே இருக்கும்போது அவளைத் தாங்கள் மருமகளைப் போல் பார்த்துக்கொள்ள வேண்டும்!"

"மருமகளைப் போலவா? முடியவே முடியாது. அந்தத் தாயில்லாப் பெண்ணை என் சொந்த மகளைப் போலவே பார்த்துக் கொள்கிறேன், மாமல்லா!"

இதைக்கேட்ட மாமல்லர் புன்னகையுடன், "இல்லை அம்மா! மருமகளைப் போல் பார்த்துக் கொண்டால் போதும்!" என்றார்.

புவனமகா தேவியின் புருவங்கள் அப்போது நெறிந்தன. "ஏன் அப்படிச் சொல்கிறாய், குமாரா! மகளைப்போல் பார்த்துக் கொள்கிறேன் என்று நான் சொன்னதை ஏன் மறுக்கிறாய்? ஒரு வேளை..." என்று கூறிவிட்டுத் தேவி பரஞ்சோதியை நோக்கினாள். உடனே, அவளுடைய முகத்தில் மலர்ச்சி காணப்பட்டது. "ஓஹோ! புரிந்தது! ஆயனரிடம் சிற்பம் கற்க வந்த பரஞ்சோதி, ஆயனரின் மிகச் சிறந்த சிற்ப வடிவத்தையே கொள்ளை கொள்ளப் பார்க்கிறானா?" என்றார்.


மாமல்லர், பரஞ்சோதி இருவருடைய முகங்களும் அப்போது பெரிதும் வேதனையைக் காட்டின. "இருக்கட்டும், அம்மா! தாமதிக்க நேரம் இல்லை. நாங்கள் புறப்படவேண்டும் விடை கொடுங்கள்" என்றார் மாமல்லர்.

சத்ருக்னன் காஞ்சிக்கு வந்து இரண்டு நாழிகைக்குள்ளே, குமார சக்கரவர்த்தியும், தளபதி பரஞ்சோதியும் காஞ்சிக் கோட்டையின் வடக்கு வாசல் வழியாகப் புறப்பட்டார்கள். திருக்கழுக்குன்றம் சென்று அங்கிருந்து தற்காப்புப் படைகளை மறுநாள் அதிகாலையில் புறப்பட ஆயத்தமாகும்படிக் கட்டளையிட்டார்கள். அன்று மாலையே ஆயனரின் வீட்டுக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடவேண்டுமென்றும், மறுநாள் அதிகாலையில் சைனியத்துடன் தாங்களும் கிளம்பிவிட வேண்டுமென்றும் உத்தேசித்து, நரசிம்மரும் பரஞ்சோதியும் புரவிகள் மீதேறி, ஒரு சிறு குதிரைப் படை தங்களைப் பின்தொடர, விரைந்து சென்று ஆயனர் வீட்டை அடைந்தார்கள்.

போகும்போது, சிவகாமியிடம் இப்படி இப்படிப் பேச வேண்டும், இன்னின்ன சொல்லவேண்டும் என்பதாக மாமல்லர் எவ்வளவோ மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டு போனார்.

ஆனால் ஆயனரின் அரண்ய வீட்டை அடைந்தபோது, அவருடைய ஆகாசக் கோட்டைகள் எல்லாம் சிதறி விழுந்தன. வீட்டின் முன் கதவைப் பெரிய பூட்டுப் போட்டுப் பூட்டியிருந்தது! வீட்டிற்குள்ளேயும் வெளியிலும் பூரண நிசப்தம் குடிகொண்டிருந்தது!

(சபதம் தொடரும்)



9
HAPPY
9th
BIRTHDAY!
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# வாசிப்பை

வழிகாட்டியாகட்டும் வாசிப்புப் பழக்கம்

**ப**ல்வேறு நகரங்களில் சமூக ஆர்வலர்கள் மற்றும் பதிப்பகத்தினர் புத்தக கண்காட்சிகளை பெரும் பொருள் செலவில் நடத்தி வருகின்றனர். இதற்கு தற்போது கிடைத்து வரும் வரவேற்பைப் பார்த்தால் வாசிப்பை நேசிப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்ற மகிழ்ச்சி மேலோங்குகிறது.

என்ன செய்தார்கள் என்பதையும், பின்னடைவைச் சந்தித்தவர்கள் எவ்வாறு மேலெழுந்தார்கள் என்பதையும் அறிந்து கொள்வது மிக அவசியம் என்ற உணர்வை சிறுவர்களுக்குப் புகட்ட வேண்டும். இன்றைய சமூகம் உள்ள இருப்பில், புத்தகங்களே சிறந்த வழிகாட்டிகளையும் முன்மாதிரிகளையும் நமக்கு அடையாளம் காட்டித் தருபவையாக உள்ளன.




இளைய தலைமுறையினருக்கு நாம் சொல்ல வேண்டியது இதைத்தான் } பாட நூல் கழகங்கள், பல்கலைக் கழகங்கள் வழங்கும் புத்தகங்கள் அந்தந்த படிப்பு குறித்த அறிவை மட்டுமே தரும். நம் தவறுகளைக் களைந்து, திறன்களை மேம்படுத்த வேண்டுமானால் அதற்கு பாடப் புத்தகத்தை தாண்டிய அறிவு அவசியம்.

அத்தகைய பல்திறன் சார்ந்த அறிவினை வழங்குபவைகள்தான் நூல்கள். வாழ்க்கைக்குத் தேவையான அறிவையும், உயர்நிலையில் இருப்பவர்கள் அந்த நிலையை அடைவதற்கு




நாளிதழ்கள் வெளியிடும் தலையங்கங்கள், கட்டுரைகள், பதிப்பகத்தார் வெளியிடும் நூல்கள், சமூகம் குறித்தும், பொருளாதாரம் குறித்தும், அரசியல் குறித்தும் ஏராளமான தகவல்களுடன் வெளிவரும் பருவ இதழ்கள் என அனைத்தையும் வாசிக்கும் பழக்கம் இருப்பவர்களால் மட்டுமே அனைத்து வகை தேர்வுகளையும் எதிர்கொள்ள முடியும் என்பதுடன் உயர் பதவியையும் எட்ட முடியும் என்பது, மிக உயர்ந்த பதவியில் இருக்கும் அல்லது உயர்ந்த நிலையில் இருக்கும் பலரும் தெரிவிக்கும் கருத்தாக உள்ளது.


இப்படி வாசிப்புடன் ஒன்றியிருந்த நம்மை வாசிப்புக்கு அந்நியமாக்கி, ஏன், வாசிப்பை அடியோடு நிறுத்தச் செய்த பெருமை முதலில் தொலைக்காட்சிகளைத்தான் சேரும். அதன்

# சுவாசிப்போம்

வி.குமாரமுருகன்

பின்னர் வந்த சமூக ஊடகங்கள் இன்றைய இளைஞர்களை ஒட்டுமொத்தமாகப் பல விஷயங்களில் புரட்டிப் போட்டு விட்டன என்றே சொல்லலாம். அப்படி புரட்டிப் போடப்பட்ட விஷயங்களில் மிக முக்கியமானது வாசிப்புப் பழக்கம்தான்.

முன்பெல்லாம் முழு நீள நாவலை ஒரே மூச்சில் படித்தவர்கள் பல பேர். நாளிதழ்களை வரி விடாமல் வாசிப்பவர்கள் பலர். ஆனால்,





அவை ஒவ்வொன்றாகக் குறைந்து, நாவல் என்பது குறுநாவலாகி பின் தொடர்கதையாகி, தொடர்ந்து சில பக்க அளவிலான கதையாக குறைந்து, பின் சிறுகதையாக வடிவெடுத்து, அதன் பின் ஒரு பக்கக் கதையாக சுருங்கி, இப்போது மைக்ரோ கதையாக சிறுத்து, சிதைந்து கிடக்கிறது.

அப்படிச் சுருங்க கொடுத்தாலும் கூட படிப்பதற்கு ஆளில்லை என்ற நிலையை இன்றைய சமூக ஊடகங்கள் உருவாக்கி விட்டன. முகநூல், கட்செவி அஞ்சல், யூடியூப் என உலகத்தைச் சுருங்க செய்து விட்ட சமூக ஊடகங்களால் வாசிப்பு என்பது வசப்படாமலேயே போய்விட்டது என்று அங்கலாய்த்தால் அது முற்றிலும் தவறு என்று தள்ளிவிட முடியாது. போதாக் குறைக்கு




விரல் சொடுக்கில் கூகுள் கொடுக்கின்ற விஷயங்களாலும், பாட விஷயத்தைத் தவிர பிறவற்றுக்குப் புத்தகத்தை நாடிப் பக்கங்களைப் புரட்ட வேண்டிய தேவையே இல்லையென்று இளைஞர்களுக்குத் தோன்றிவிட்டதோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

வாசிப்பும், புதிய தேடலும் குறையக் குறைய, இளைய தலைமுறை ஒருவித சோம்பேறித்தனத்துக்கு அடியாகிவிடுகிறது. இதனால், சமூக ஊடகங்களுக்கு மனது அடிமையாக மாறி வருகிறது. எதிர்கால தலைமுறை யாருக்கும் அடிமையாகாமல் உயர, வாசிப்புப் பழக்கத்தை நமது பிள்ளைகளுக்கு முறையாக கற்றுத் தர வேண்டும். அறிவை வளர்க்கும் அடிப்படை விஷயம் வாசிப்பு




மட்டும்தான் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

ஒருவகையில், தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் நடைபெறும் புத்தகக் கண்காட்சிகளுக்கு கிடைத்து வரும் வரவேற்பு ஊக்கமும் ஆறுதலும் அளிக்கிறது. வாசிப்புப் பழக்கத்தை இன்றைய மாணவர்கள் மத்தியில் கொண்டு வர பதிப்பகங்களும், எழுத்தாளர்களும் பெரும் முயற்சி எடுத்து வருவது மன நிறைவைத் தந்த போதிலும், பள்ளிகளில் இருக்கும் நூலகங்கள், புத்தகங்கள் தூங்கும் அறையாக மட்டுமே இன்றும் இருந்து வருவது வேதனை. மாணவர்கள் இடைவேளை நேரங்களைப் பயனுள்ளதாகக் கழிக்க கதைகளை வாசிக்க, புத்தகங்களை படிக்க அந்த நூலகங்களை செயல்படுத்த வேண்டும். அதற்குப் பள்ளிகள்தோறும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை வழங்கினால் மட்டும் போதாது. அதை நிர்வகிக்க நூலகரையும் நியமிக்க வேண்டும்.




இன்றோ பள்ளிகள் பலவற்றில் மதிப்பு மிக்க, கிடைப்பதற்கரிய நூல்கள் பல பாதுகாக்கப்படாமல் சேதமுற்று கிடக்கின்றன. பொது நூலகங்களில் பல நூலகங்கள் தனியார் கட்டடத்தில் எந்தவிதப் பராமரிப்பும் இன்றி செயல்பட்டு வருகின்றன. அவை ஊருக்கு ஒதுக்குப்புறமாகவோ அல்லது கிடைக்கும் இடத்திலோ பெயரளவில் செயல்பட்டு வருகின்றன.

அவற்றை எல்லாம் மக்கள் பயன் பெறும் வகையில் நகரப்பகுதிக்குள் சொந்தக் கட்டடத்தில் செயல்படச் செய்தால் நூலகங்களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரிக்கும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களின் தொகுதி வளர்ச்சி நிதியின் மூலம் நூலகக் கட்டடம் கட்டுவதற்கும், புத்தகங்கள் வாங்குவதற்கும் முன்னுரிமை கொடுக்கும் வகையில் நிதி




செலவீட்டை அறிவித்தால் நூலகங்களின் தரம் உயர்த்தப்பட்டுவிடும்.

அதைவிட நாம் ஒவ்வொருவரும் செய்ய இயல்வது ஒன்றுண்டு. திருமணம், பிறந்த நாள், அதிலும் குறிப்பாக சிறுவர்களின் பிறந்த நாள் போன்ற நிகழ்ச்சிகளில் வேறு எந்த பரிசுப் பொருளையும்விட, நல்ல நூல்களைப் பரிசாக கொடுப்போம். அப்படிச் செய்தால் வாசிப்பு நம் வசப்படும்.

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப் பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648



# மருத்துவத்

## வெவ்வேறு மருத்துவ முறைகளை இணைப்பது சரியா?

எல்லாவித மருத்துவ முறைகளுக்கும் ஒரே நோக்கம்தான் — நோயாளியை விரைவாகக் குணப்படுத்துவது. எனவே, பாரம்பரியமான மருத்துவ முறைகளையும் நவீன ஆங்கில மருத்துவ (அலோபதி) முறை களையும் இணைத்து, ஒருங்கிணைந்த மருத்துவ முறை மூலம் நோயாளிகளைக் குணப்படுத்துவது சிறப்பானதாக இருக்காதா என்று கேட்பவர்கள் உண்டு.

முறைகளையும் கற்று, அதைத் தேவைக்கேற்பப் பயன்படுத்தலாம் என்று சொல்வது புரிதலின்மையின் விளைவு. பாரம்பரியமான வைத்திய முறை களையும் நவீன அறிவியல் அடிப்படையிலான மருத்துவ முறைகளையும் ஒருங்கிணைக்க முடியாது.

### பாரம்பரிய வைத்திய முறைகள்

பாரம்பரிய வைத்திய முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள வித்தியாசத்தையும் பொதுவான




ஒரு மருத்துவருக்கு எல்லா முறைகளும் தெரிந்திருந்தால், ஒவ்வொரு நோய்க்கும் எது உகந்த வழியோ அதைக் கையாண்டு குணப்படுத்தலாமே என்றும், நோயாளியே அந்தந்த நோய்க்கு அந்தந்த சிகிச்சை முறை அறிந்தவரைத் தேடிச் செல்வதைவிட இது எளிதாக இருக்குமே என்றும் சிலர் கேட்கிறார்கள்.

ஒருவர் எல்லா மருத்துவ




அம்சங்களையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவருக்கு நோய் வருவதற்கும், இன்னொருவருக்கு நோயே வராமல் இருப்பதற்கும், அப்படி நோய் வந்தவர் களுக்குக் கொடுக்க வேண்டிய மருந்தையும் — சிகிச்சை முறைகளையும் எந்த முறையைச் சேர்ந்த மருத்துவராக இருந்தாலும் அறிந்திருக்க வேண்டும்.

எல்லாவித மருத்துவ முறைகளுமே சில நம்பிக்கைகள், கொள்கைகள், கோட்பாடுகளின் அடிப்படையிலானவை. சிகிச்சை முறைகளும் அப்படியே. பாரம்பரிய மருத்துவ முறைகளில்




டி.ஜே.ஜான்

காலம் கடந்தும் நிற்பவை மூன்றுதான்: அவை சீன சிகிச்சை முறை, இந்திய ஆயுர்வேதம், ஜெர்மனியில் உருவான ஹோமியோபதி.

ஹோமியோபதியில், நோய்க்குக் காரணமாக இருக்கும் ரசாயனத் துணுக்குகளையே மிக நுண்ணியதாக்கி, விஷம் நீக்கி மிகச் சிறு அளவில் புகட்டினால் அதுவே நோயைத் தீர்த்துவிடும் என்ற கோட்பாடு பின்பற்றப்படுகிறது. 'சிமிலியா சிமிலிபஸ் கியூரென்டர்' என்று இதை அவர்கள் அழைக்கின்றனர். ஹோமியோ என்ற சொல்லுக்கு அதுதான் பொருள். அலோபதியின் கோட்பாடு இதற்கு நேரெதிர். நோய்க்குக் காரணமான நுண்ணுயிரியை அழிக்கும் நோய்முறியே மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.




சீன மருத்துவமுறை மூலிகைகளைப் பயன்படுத்துவது. அது 'கி' அல்லது 'சி' எனப்படும் உயிராற்றல் உடலுக்குள் உள்ள பாதை வழியே பாய்கிறது.. அது எல்லா உறுப்புகளையும் திசுக்களை யும் இணைக்கிறது. அந்த உயிராற்றல் பாய்வதில் தடை ஏற்பட்டால் நோய் ஏற்படுகிறது என்பது சீன மருத்துவத்தின் கோட்பாடு. அக்குபஞ்சர், அக்குபிரஷர், மசாஜ், உடற்பயிற்சி, பத்திய உணவுகள், மூலிகை மருந்து ஆகியவற்றின் மூலம் நோய் தீர்க்கப்படுகிறது.


வாதம், பித்தம், கபம் என்ற மூன்று (திரி) தோஷங்களால் நோய் ஏற்படுகிறது என்கிறது ஆயுர்வேதம். உடலில் இருக்க வேண்டிய இவற்றின் அளவு மாறுபடுவதையே 'தோஷம்' என்கிறது. நோய்க்கு மருந்தாக கஷாயம், சூரணம், குளிகை, எண்ணெய், எண்ணெய் மசாஜ், பத்திய உணவு, பேதி, குடல்புழு நீக்கம் ஆகியவற்றைப் பரிந்துரைக்கிறது.

இந்த வைத்திய சிகிச்சை முறைகள் எப்படி பல்லாண்டுகளுக்கு முன்னால் தோன்றின என்று தெளிவான வரலாறு இல்லை. ஆனால், அவை முறைப்படுத்தப்பட்டு, வைத்திய சாஸ்திரங்களாக

எழுதப்பட்டிருப்பதும் அவற்றின் மூலம் பல சிகிச்சை முறைகள் இன்றளவும் வெற்றிகரமாக நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கவை.

## அறிவியல்சார் மருத்துவம்

மருத்துவத்தில் ஐரோப்பியர்கள் இருநூறு அல்லது முன்னூறு ஆண்டுகளுக்கு முன்புவரை பின்தங்கியே இருந்தனர். அறிவியல்பூர்வமான




மருத்துவ முறை ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ், பிரிட்டன் பிறகு அமெரிக்கா ஆகிய நாடுகளில் 18—வது 19—வது நூற்றாண்டுகளில் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. உடற்கூறியல், உயிரியல், நுண்ணுயிரியல், உயிர் வேதி யியல், மரபியல் போன்றவை 20—ம் நூற்றாண்டில் வளர்ந்து, இப்போதும் விரிவடைந்துகொண்டே வருகின்றன.

அறிவியல் அடிப்படையிலான (நவீன) மருத்துவ முறை தொடர்ந்து கேள்விகளை எழுப்பு கிறது. கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தொடர்ந்து திருத்திக்கொள்கிறது. அத்துடன் அதற்கேற்ப விளக்கங்களையும் அளிக்கிறது. சிகிச்சை முறைகளை மேம்படுத்தியும் மாற்றியும் சிகிச்சையைத் தொடர்கிறது. ஆராய்ச்சிகளை இடைவிடாமல் மேற்கொள்கிறது. அறிவியல் முறையின் அடிப்படையே ஆராய்ச்சிதான்.




பாரம்பரிய முறைகளைப் பொறுத்தவரை நோய்க்கான காரணங்களும் சிகிச்சை முறைகளும் நிரந்தரமானவை. அவற்றைப் பயிலும் மாணவர்கள் அந்தக் கருத்துகளையும் வழிமுறைகளையும் அப்படியே ஏற்றுத் தொடர்கின்றனர். ‘உண்மை’ என்பதற்குப் பாரம்பரிய முறையிலும், நவீன முறையிலும் நேர்மாறான விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

பாரம்பரிய முறையில் எது ஒருவருக்குக் கற்பிக்கப்படு கிறதோ, எது அவரால் நம்பப்படுகிறதோ அதுவே உண்மை என்றாகிறது. அதை ஆய்வுசெய்து சரிபார்க்க வேண்டிய தேவையே இல்லை என்று நம்புகிறார்கள்.

ஆனால், நவீன மருத்துவம் என்பது ஆராய்ச்சிகள் மூலம் கிடைத்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது. ஏன், எப்படி என்று விளக்கமாகக் கூறுவது மட்டுமல்ல — பரிசோதனைகள் செய்துபார்த்து உண்மைகளைத் தெரிந்துகொள்வதே நவீன மருத்துவம். இதற்கொரு ‘விலை’யும் உண்டு, ‘பரிசு’ம் உண்டு.

மருத்துவர் முறையாக நோயை ஆராய்ந்தாரா, சிகிச்சை செய்தாரா என்று அவர் கடைப்பிடித்த வழிமுறைகளைக் கொண்டே கண்டுபிடித்துவிடலாம். இவற்றை அந்த மருத்துவர் சரியாகக் கடைப்பிடிக்கவில்லை என்றால்,


அவருக்குத் தண்டனை நிச்சயம். இதுதான் அதில் உள்ள 'விலை'. மருத்துவர் யாராக இருந்தாலும், சரியான முறையில் நோயை அறிவதும், சிகிச்சை தருவதும்தான் நவீன மருத்துவத்தில் உள்ள 'பரிசு'.

## விளைவும் பொறுப்பும்

அறிவியல்பூர்வமான நடைமுறை என்பதால் நவீன மருத்துவத்தில் எல்லாவிதமான நோய்களும்

இதனால், மருத்துவரைப் பொறுப்பாளியாக்கவும் முடியாது. நல்ல வேளையாகப் பாரம்பரிய மருத்துவத்தில் மருந்துகள் பெரும்பாலும் ஆபத்தற்றவையாக இருப்பதால் நோயாளிகளுக்கு உயிராபத்து ஏற்படுவதில்லை.

அறிவியல்பூர்வமான முறை என்பது தனி மனிதரால் மட்டும் நிபுணத்துவம் பெற்றுவிட




அடையாளம்காணப்பட்டுப்பெயரிடப்படுகின்றன, எண் வழங்கப்படுகிறது. சர்வதேச அளவில் அனைவரும் ஒரே சமயத்தில் அறிந்து சிகிச்சை தரும் வகையில் அட்டவணைப்படுத்தப்படுகிறது.

தன்னுடைய நோய் முறையாகச் சோதிக்கப்பட்டதா, சரியான சிகிச்சை வழங்கப்படுகிறதா என்று ஒரு நோயாளியால் நவீன மருத்துவரைக் கேட்க முடியும். அப்படி இல்லாவிட்டால் அந்த மருத்துவர் கவனக்குறைவாகப் பணிசெய்ததாகக் கூறி அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும், நோயாளிக்கு இழப்பீடும் கிடைக்கும்.

இத்தகைய திட்டவட்டமான சோதனை முறைகளும் வகைப்படுத்தல்களும் பாரம்பரிய மருத்துவத்தில் கிடையாது. பாரம்பரிய மருத்துவர் தன்னால் முடிந்த அளவுக்கு நோயை அடையாளம் காண்கிறார். அதையொட்டி சிகிச்சை அளிக்கிறார். அவர் நோயை அறிந்தவிதம் சரியா, அவர் அளித்த மருந்துகள் சரியா என்று யாராலும் சரிபார்க்க முடியாது.

முடியாத சிக்கல்கள் நிறைந்தது. எனவேதான் நோய்க் குறிகளையும் நோயின் தாக்கத்தையும் அறிய அறிவியல் சோதனைச் சாலைகளின் உதவி நாடப்படுகிறது. அத்துடன் அந்தந்தத் துறையில் சிறப்பு மருத்துவப் படிப்பும், பயிற்சி யும் அளிக்கப்படுகிறது.

பாரம்பரிய முறையும் நவீன மருத்துவ முறையும் அடிப்படையிலேயே வேறுபாடுள்ள கருத்துகளை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, இரண்டையும் சேர்த்து சிகிச்சை தர முடியாது. எனவே, இவற்றை ஒருங்கிணைக்கவும் முடியாது. ஒன்று, நம்பிக்கையின் அடிப்படையிலானது. இன்னொன்று, சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டது. ஒரு மதத்தில் நம்பிக்கையும் பயிற்சியும் பெற்ற பூசாரி, இன்னொரு மதத்தின் சடங்குகளைச் செய்வது எப்படி முடியாதோ அப்படித்தான் இதுவும்!

தமிழில்: சாரி, © 'தி இந்து' ஆங்கிலம்.

# தயக்கம்

எந்த ஒரு செயலைச் செய்வதற்கும் அடிப்படை நம் மனம் மற்றும் மனதில் எழும் எண்ணமே. ஆனால், நம்மிடையே காணப்படும் தயக்கங்கள், அந்த எண்ணங்களைத் தடுத்து, முயற்சிகளைக் கைவிடத் தூண்டுகின்றன.

தாழ்வு மனப்பான்மையின் இன்னொரு முகம்தான் இந்தத் தயக்க உணர்வு. முன்னேறத் துடிக்கும் பலருக்கும் இந்தத் தயக்க உணர்வு தான் தடையாக இருக்கிறது. எனவே தான் திருவள்ளுவரும் அச்சமே கீழ்களது ஆசாரம்“ என்கிறார்.




தயக்கம் அடிமையின் குணம், அறிவினை மறைக்கும், துணிவை அழிக்கும், கோழைகளை வளர்க்கும்.

அளவுக்கதிமாகத் தயக்கமடைபவர்கள் தங்களின் பல அடிப்படை உரிமைகளைக் கூட இழக்கிறார்கள். இந்த தயக்க உணர்வு நம் மனதில் துளிர்விடும் எண்ணங்களை எப்போதும் மாற்றிக் கொண்டே இருக்கும். இவர்கள் தானாக இயங்கும் திறன் அற்றவர்களாக இருப்பார்கள். எந்தக் காரியத்தையும் மற்றவர்களைக் கேட்டே செய்வார்கள்.

தாங்களாகவே எந்த முடிவையும் எடுக்க மாட்டார்கள். அதாவது மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ, அவர் கோபித்து திட்டுவாரோ, இவர் பிறரிடம் சொல்லி கேலி பேச வைப்பாரோ என்ற எண்ணமே ஒருவனை தயக்கமடையச் செய்து, தாழ்வு மனப்பான்மையைத் தூபம் போட்டு வளர்க்கிறது.


இதைப் பயன்படுத்தி, ஒருவர் செய்யும் சிறு தவறுகளையோ, அவரிடமிருக்கும் பய உணர்ச்சியையோ, காட்டும் தயக்கத்தையோ தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவரை மேலும் அச்சவுணர்வுக் கொள்ளச் செய்து இறுதியில் அவரை எதற்கும் பயனற்றவராக மாற்றிவிடுகிறார்கள் சிலர்.



# தகர்ப்போம்


பா நப்புநத் இராதாகிருஷ்ணன்

தன்னுடைய சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் செயல்களைப் பற்றி அவர்களே முடிவு செய்யாமல், பிறர் என்ன நினைப்பார்களோ, சொல்வார்களோ என்ற யோசனையில் இரட்டை மனம் கொண்டு பல வாய்ப்புகளை இவர்கள் தவற விட்டு விடுவார்கள்.




பிறவியில் யாருக்கும் தயக்கம் உண்டாவதில்லை. தயக்க உணர்வுகளுக்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய அனைத்துமே காரணமாகிறது என்றால் அது மிகையல்ல.

பிறர் நம் குறையைச் சுட்டிக் காட்டும்போதும், பலர் முன்னிலையில் குறுகி நிற்கச் செய்யும்போதும், இந்தத் தயக்க உணர்வு பெருகிக் கொண்டே வந்து ஒருவரை செயலற்றவராக்குகிறது. இறுதியில் தாழ்வு மனப்பான்மை பெருகி, நான் ஒன்றுக்கும் உபயோகமில்லாதவன் என்ற நிலையை அவருக்குள் ஏற்படுத்திவிடுகிறது.




முதலாவது வருபவரைத்தான் உலகம் நினைவில் வைத்திருக்கும். தயக்கம், பயம் ஆகியவை நம் வெற்றியை பாதிக்கும் என்பதற்கான உதாரணங்கள் ஏராளம். ஒரு நிமிட தயக்கம் கூட, நமது மிகப் பெரிய வெற்றியைத் தடுத்துவிடுகிறது.

இந்தத் தயக்க உணர்வு ஒருவரின் வளர்ச்சியை அணை போட்டுத் தடுக்கிறது.

ஒருவர் பெற நினைத்ததை, கேட்க நினைத்ததை, அச்ச உணர்வு இல்லாத இன்னொருவர், திறனில்லாதபோதிலும் துணிந்து கேட்டு அந்த வாய்ப்பை முன்னவரிடமிருந்து தட்டிப் பறித்துக் கொள்கிறார்.

எந்த ஒரு மனிதனுக்கும் தயக்கவுணர்வு நீங்கினால்தான் அவனுடைய உண்மையான ஆற்றல்கள் வெளிப்படும்.

சிலருக்குப் பேசும்போது தயக்க உணர்வு காரணமாக, பேச வந்ததை விட்டுவிட்டு அவசர அவசரமாக ஏதேதோ பேசுவார்கள். அதிகாரிகளையோ, பெரியவர்களையோ சந்திக்கும்போது அமைதியாக, தயக்கமின்றி பேச கற்றுக் கொள்ள வேண்டும். தயக்க உணர்வு உள்ளவர்கள் திட்டமிட்டுப் பேச கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான சுய பயிற்சிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.




பிறருடன் பேசும்போது ஆவலுடன் கவனிப்பதும், புதிய மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால் நாமாகவே சென்று உரையாடுவதும், வீட்டில், பள்ளியில், பணி புரியும் இடத்தில் அதிகப்படியான தயக்கத்தை ஏற்படுத்தி, நம் வாய்ப்புகளை தட்டி பறித்து, நம்மை பேச விடாமல் தடுக்கும் நபர்களைக் கண்டால் அவர்களைவிட்டு விலகுவதும் நல்லது.




எங்கெல்லாம் தயக்கம் வருகிறதோ, அந்த செயலைப் பலமுறை முன் ஒத்திகை பார்த்தால் தயக்கம் ஓடிவிடும் என்றும், திரும்பத் திரும்பச் செய்யும் பயிற்சி மட்டும்தான் தயக்கத்தை விரட்டும் சிறந்த வழியாகும் என்கிறார்கள் மனநல நிபுணர்கள்.

“அச்சம் தவிர், ரௌத்திரம் பழகு”' என்றார் மகாகவி பாரதியார். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்“ என்கிறது விவிலியம்.

தோல்வியின் அடையாளம் தயக்கம்; வெற்றியின் அடையாளம் துணிச்சல்; தயங்கியவர் வென்றதில்லை. துணிந்தவர் தோற்றதில்லை.






March 2017
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
நூற்றாண்டு
நாயகன்
8
9
HAPPY
9th
BIRTHDAY!
தமிழ்


# தமிழ்


நற்றமிழரின் நாடித்துடிப்பு

அடியெடுத்து
வைத்த
ஒவ்வொரு
ஆண்டிலும்...









March 2014
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
5


March 2015
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
6


March 2016
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
7


March 2017
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
8
நூற்றாண்டு
நாயகன்




# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

# 2018

### JANUARY




### FEBRUARY




### MARCH

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### AUGUST

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |

### OCTOBER


| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |



அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com







editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा